Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
28.02.2022 வரை
இலவசப்பதிவுகளை
மேற்கொள்ளமுடியும்
+94777164524
www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 87 பிலவ வருடம், மாசி மாதம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (20.02.2022) ஹிஜ்ரி-1443, ரஜப் - 18, 0115886187 - பக்கங்கள் 16+8+8+8

விலை ரூ.50

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி
+94777164524
www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# அரசின் மீது நம்பிக்கையில்லை!

## பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை பகிரங்க அறிவிப்பு



- சசி மணிராஜ் -

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்தை தற்போதைய அரசாங்கம் கேலிக்கூத்தாக்கியிருப்பதாக பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவ ஆய்வுகளை முன்வைத்து நூலொன்றை வெளியிடும் நிகழ்வில் கலந்துகொண்டு கொழும்பில் கருத்து வெளியிட்ட பேராயர் மேலும் கூறியதாவது,

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்று தற்போது மூன்று வருடங்கள் கடந்துள்ளன. ஆனால், இதற்கு நீதி இன்னும் கிடைக்கவில்லை.

02 ஆம் பக்கம்

## 'வெடி'மணியம்



போன கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வெடிமணியத்தாருக்கு ஒரு "கடிதம்" எழுதியிருந்தார்.

தை மாதம் 13 ஆம் திகதி அவரைப் பற்றி வெடிமணியத்தார் எழுதிய விடயங்களை யாரோ ஒருத்தர் அவருக்கு காட்டி "கோள்மூட்டி" இருக்கினம்.

வெடிமணியத்தார் பெரிய "அரசியல் ஆய்வாளரோ" அல்லது "அரசியலில்" புளி திண்டு கொட்டை போட்டவரோ அல்ல.

ஆனால் "ஒரு மண்ணும் " தெரியாத "பேக்கொத்தும்" அல்ல!

வணக்கம் திரு.டக்ளஸ் தேவானந்தா அமைச்சரே!

முதலில் வெடிமணியத்தாரின் கட்டுரையை வாசித்துவிட்டு அதற்கு பதில் எழுதியமைக்கு மிக்க நன்றிகள்.

கடந்த இரண்டு வருடங்களாக;

வெடிமணியத்தாரின் பத்தியில் இரண்டாவது முறையாக உங்கள் மீதான விமர்சனம் வெளிவந்த போது;

அதை மற்றவர்கள் போல பத்தோடு பதினொன்றாக கடந்துபோகாமல் "மினைக்கெட்டு" இருந்து பதில் எழுதிய உங்களின் அரசியல் "முதிர்ச்சிக்கு" நன்றிகள்.

நீங்கள் நேரடியாக எழுதினியளோ அல்லது உங்களின் ஆதங்கத்தை கேட்டு ஆரும் எழுதியிருக்கினமோ தெரியவில்லை.

அது இப்ப பிரச்சினையில்லை.

விசயத்துக்கு வருவம்.

கடந்த 2 வருட காலத்தில் அனைத்து அரசியல் கட்சிகளினதும், அரசியல்வாதிகளினதும் தவறான செயற்பாடுகளை விமர்சிப்பதும் , அவ்வப்போது பாராட்டுவதும் தான் வழமை.

வெடிமணியம் எழுதும் பத்தியில் டக்ளஸ் தேவானந்தா விமர்சிக்கப்பட்டதை விட மிகக்கடுமையாக பலதரம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் விமர்சிக்கப்பட்டுள்ளன.

நேரமிருந்தால் கடந்த 2 வருடங்களில் வெளியான "தமிழன் ஞாயிறு" பேப்பரை வரிசையா அடுக்கி வைச்சு பொறுமையாக வாசித்தால் நான்....

07 ஆம் பக்கம்

## அமைச்சர் ஒருவரின் மின்கட்டணம் ஒரு கோடி ரூபாவைத் தாண்டியது

### மின்சார சபை கூட்டுத் தொழிற்சங்கத்தின் செயலாளர் தகவல்

இலங்கையின் அமைச்சர் ஒருவரின் வீட்டின் மின்சாரக் கட்டணம் 1 கோடியே 20 இலட்சம் ரூபாவை எட்டியுள்ளதாக இலங்கை மின்சார சபை கூட்டுத் தொழிற்சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பு - கிருலப்பனை சரணங்கர வீதியிலுள்ள....

02 ஆம் பக்கம்

## சுயாதீனமாக செயற்படவுள்ள ஆளுங்கட்சியின் 15 எம்.பிக்கள்

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஆளுங்கட்சியின் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக செயற்படும் முடிவை எடுக்கத் தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆளும் கட்சியைச் சேர்ந்த சுமார் 15 பேர் இவ்வாறு சுயாதீனமாக இயங்குவது....

02 ஆம் பக்கம்

## டீசல் இல்லாமல் நின்றுபோன அமைச்சர் நிமலின் வாகனம்

"இன்று முழு நாடும் ஸ்தம்பித்துள்ளது. எங்கும் டீசல் இல்லை. நான் பதுளையிலிருந்து வரும்போது டீசல் இல்லை என்று சொன்னார்கள். கொழும்பில் இருந்து சரி கொண்டு வரச் சொன்னேன். அரசாங்கம் மட்டுமல்ல,...

02 ஆம் பக்கம்

## இந்திய உயர்ஸ்தானிகர் பாக்லேயுடன் தமிழ்க் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, துணைத் தூதுவர் வினோத் ஜேக்கப், அரசியல் துறை முதன்மை செயலாளர் பானு பிரகாஷ் ஆகியோரோடு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

02 ஆம் பக்கம்

## பயங்கரவாதிகளை நினைவுகூர அனுமதியில்லை; ஜனாதிபதி ஆணைக்குழு விசேட பரிந்துரை!

### 2ஆவது இடைக்கால அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு



மனித உரிமைகள் தொடர்பான கடந்தகால ஆணைக்குழுக்கள் மற்றும் ஏனைய குழுக்களினது தீர்மானங்களின் மதிப்பாய்வு மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கை, உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டீ. நவாஸால், நேற்று முன்தினம் (18) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

மனித உரிமைகள், சர்வதேச மனிதாபிமானச் சட்டமீறல்கள் மற்றும் அதுபோன்ற கடுமையான...

02 ஆம் பக்கம்

மக்கள் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி வெற்றியாளர் ஆகுங்கள்




இறுதிச் சீட்டிழுப்பின் வெற்றியாளருக்கு
ரூ.10,000,000/-
மாதாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.1,000,000/- × 11 மாதங்கள்
ரூ.11,000,000/-
வாராந்த வெற்றியாளர்களுக்கு தங்கப் பவுண்
நாளாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.10,000/-
மேலும் மேலும் பணம் அனுப்பி, வெல்லும் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளுங்கள்
செல்லுபடியாகும் காலம் 2022 பெப்ரவரி 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரை மட்டுமே.
+9477 157 6356
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation
AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

ஆற்றல் மிக்க கனா
வியாபார இணைப்பை வலுவூட்டும்



#NODREAMTOOBIG

011 2 389 389 0705 004 000 bizsolutions@slt.lk

தொடர்பாடல் தொழினுட்பத்தின் உதவியுடன் அதி நவீன சேவைகளுடன் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தின் விஷேட தீர்வுகளையும் உங்களுக்கு வழங்கி, உங்கள் வியாபாரத்தை நாளுக்கு நாள் அபிவிருத்தி செய்ய வேண்டும் என நீங்கள் காணும் கனவினை வலுவூட்ட SLT-MOBITEL இடமிருந்து வியாபார சமூகத்திற்கு தகவல் தொடர்பாடல் மற்றும் அதனுடன் இணைந்த பல்வேறு விஷேட வியாபார தீர்வுகள்.

தற்போது, SLT-MOBITEL உடன் நம் கனவுகள் தொலைவில் இல்லை.

SLTMOBITEL

# சிவகரனிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவில் 5 மணிநேர விசாரணை

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரனிடம் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவின் கொழும்பிலுள்ள கிருலப்பனை அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (18) சுமார் 5 மணிநேரம் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த விசாரணைகளின்போது தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும், கடந்த 10 ஆண்டுகளில் இயக்கத்தால் நடத்தப்பட்ட போராட்டங்கள், கூட்டங்கள் தொடர்பான பல்வேறு விதமான கேள்விகளை முன் வைத்ததாகவும் அவர் தெரிவித்தார். அதில் பல கேள்விகள் வெறும் கற்பனைக் கதையாக இருந்ததாகவும் சிவகரன் தெரிவித்தார்.

தமிழன் தமிழன் ஜூனியர்
கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

# போக்குவரத்து பொலிஸாரின் சமிக்ஞையை மீறிச் சென்ற வாகனம் மீட்பு - இருவர் கைது

- பாறுக் ஷிஹான் -

போக்குவரத்து பொலிஸாரின் சமிக்ஞையை மீறி டிபெண்டர் வாகனம் ஒன்றில் வேகமாக பயணித்த சம்பவம் தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரைப்பள்ளி வீதியில் குறித்த தப்பிச்சென்ற டிபெண்டர் வாகனம் வெள்ளிக்கிழமை(18) இரவு கைவிடப்பட்ட நிலையில், பொலிஸ் நிலையத்திற்கு பாரம் தூக்கி ஒன்றின் உதவியுடன் எடுத்துச் செல்லப்பட்ட அதேவேளை, தப்பிச்சென்றவர்களில் இரு சந்தேக நபர்கள் நேற்று அதிகாலை கல்முனை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவமானது அப்பகுதியில் பதற்றநிலையை தோற்றுவித்தது. காரைதீவு பிரதேசத்தில் இருந்து கல்முனை நோக்கி டிபெண்டர் வாகனம் அதிவேகமாகப் பயணித்துள்ளது. இதன்போது அப்பகுதியில் வீதி பாதுகாப்பு கடமையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் நெறிப்படுத்தலில் போக்குவரத்து பொலிஸார் நின்றுள்ளனர்.



அவர்கள் மிக வேகமாக அவ்வழியாக வந்த டிபெண்டர் வாகனத்தின் போக்கினை அவதானித்து நிறுத்துமாறு கூறியுள்ளனர்.

எனினும், போக்குவரத்து பொலிஸாரின் வாகனத்தினை வேகமாக வந்த டிபெண்டர் வாகனம் மோதிவிட்டு தொடர்ந்தும் கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் வீதியின் ஊடாக அதிவேகமாக பயணம் மேற்கொண்டு சென்றுள்ளது. இவ்வாறு சென்ற டிபெண்டர் ரக வாகனத்தை பின்தொடர்ந்த போக்குவரத்து பொலிஸார் கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் வீதியில் வைத்து இடை நடுவில் கைவிடப்பட்ட நிலையில் அதனை மீட்டனர். எனினும், குறித்த வாகனத்தில் வந்தவர்கள் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் அறிந்த கல்முனை பொலிஸ் தலைமைப் பீட பொறுப்பதிகாரி எம்.ரம்சீம் பக்கீர் தலைமையிலான குழுவினர், அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து டிபெண்டர் வாகனத்தினை பாரம் தூக்கி இயந்திரத்தின் உதவியுடன் மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்றனர்.

இவ்வாறு டிபெண்டர் வாகனத்திலிருந்து தப்பி சென்றவர்களில் இருவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களில் ஒருவர் அண்மையில் வெளிநாடு ஒன்றிலிருந்து வருகை தந்திருந்தமை பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. மேலும், கைதான இரு சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த கல்முனை பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# இங்கிலாந்தில் யூனிஸ் புயல் தாக்கத்தால் பெரும் சேதம்

இங்கிலாந்தை யூனிஸ் புயல் தாக்கியதில் இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளதுடன், சொத்துகளுக்கு பேரழிவு ஏற்பட்டுள்ளது.

பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளதுடன், கட்டங்களில் கூரைகள் புயல் காற்றில் தூக்கி வீசப்பட்டன. மரங்கள் முறிந்து விழுந்தும், காற்றில் தூக்கி எறியப்பட்டும், கார்கள் உள்ளிட்ட பெருமளவு வாகனங்கள் பலத்த சேதமடைந்துள்ளன.

லண்டனின் விமான நிலைய ஓடுபாதைகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த விமானங்களும் புயலால் ஓடுபாதைகளிலிருந்து நகர்ந்துள்ளன. இதனால் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இங்கிலாந்து வானிலை ஆய்வு மையம் வானிலை எச்சரிக்கையை இங்கிலாந்தின் தெற்கு மற்றும் வேல்ஸின் சில பகுதிகளை உள்ளடக்கியதாக நேற்று முன்தினம் விரிவுபடுத்தியது.

இங்கிலாந்தில் சில பகுதிகளில் மணிக்கு 122 மைல் வேகத்தில் நேற்று புயல் காற்று சுழன்றடித்தது.

வடக்கு லண்டனின் மஸ்வெல் ஹில்லில் வெள்ளிக்கிழமை கார் மீது மரம் விழுந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்ததாக லண்டன் தீயணைப்பு படையின் அறிக்கை தெரிவிக்கிறது.

லிவர்பூலில் தனது காரை ஓட்டிச் சென்ற 50 வயதுடைய ஒருவரும் புயல் தாக்கத்தால் வெள்ளிக்கிழமை உயிரிழந்ததாக மெர்சிசைட் பொலிஸார் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அயர்லாந்தில் மரம் முறிந்து விழுந்ததில் 60 வயதான ஒருவர் உயிரிழந்ததாக கார்டெய் எனப்படும் தேசிய பொலிஸ் சேவை உறுதிப்படுத்தியது.

லண்டன் நகரம் உட்பட இங்கிலாந்தின் பல்வேறு பகுதிகளில் புயல் தாக்கம் காரணமாக மின்சார இணைப்புக் கம்பங்கள் சேதமடைந்ததால் பல ஆயிரக்கணக்கான வீடுகளில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது. லண்டனின் முக்கிய விமான நிலையங்கள் முழுவதும் ஏராளமான விமானங்கள் இரத்து செய்யப்பட்டன. லண்டனின் ஹீத்ரோவில் விமானங்கள் தரையிறங்கும்போது பெரும் சிரமங்களை எதிர்கொண்டன. சில விமானங்கள் கடும் போராட்டத்தின் மத்தியில் தரையிறங்கிய பின்னர் ஓடுபாதையிலிருந்து காற்றின் வேகத்தால் நகர்த்தப்பட்டன.

குறிப்பிடத்தக்க இடையூறுகள் உள்ளபோதிலும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் பல விமானங்களை தொடர்ந்து தரையிறக்கி வருகிறது. அதேபோன்று இங்கிலாந்திலிருந்து புறப்படும் சில விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. எனினும், பெரும்பாலான விமான சேவைகள் திட்டமிட்டவாறு இடம்பெறும் எனவும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் அறிவித்துள்ளது.

1987 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஏற்பட்ட பெரும் புயலால் 18 பேர் உயிரிழந்தனர். மணிக்கு 100 மைல் வேகத்தில் வீசிய காற்றில் 15 மில்லியன் மரங்கள் சாய்ந்தன. அதற்குப் பின்னர் ஏற்பட்ட மிகவும் சக்திவாய்ந்த புயலாக யூனிஸ் புயல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில்
வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்
தமிழன் தமிழன்

## அரசின் மீது...

ஜனாதிபதி ஆணைக்குழுவில் வழங்கப்பட்ட சாட்சியங்களை இந்த அரசாங்கமும், சட்டமா அதிபரும் ஒளித்துவிட்டனர். இந்த சாட்சியங்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு உண்மைத்தன்மையை கண்டறியுமாறு பல கோரிக்கை கடிதங்களை நாங்கள் வழங்கியும் அப்போதுள்ள அரசும், தற்போதைய அரசும் அதனை மறைத்துவிட்டன.

தற்போதை சூழலில் சட்டமா அதிபரும், சட்டமா அதிபர் திணைக்களமும் இந்த விடயத்தை கவனத்தில் கொள்ளாமல் செயற்பட்டு வருவதன் காரணமாக, ஈஸ்டர் ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்திற்கு நீதி கிடைக்காமல் போகும் நிலை உருவாகியுள்ளது.

அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாட்டின் காரணமாக நாம் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளோம். எங்களுடைய எந்தவொரு கோரிக்கைகளையும் அரசாங்கம் இதுவரையில் நிறைவேற்றவில்லை என்பதை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். அதேபோல ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவத்தைத் தடுக்க வேண்டிய பொறுப்பிலிருந்தும் அதை செய்யத் தவறிய அப்போதைய அரசத் தலைவர், புலனாய்வுப் பிரிவினர் உயர் அதிகாரிகள் மற்றும் உயர் பதவிகளிலுள்ள பொலிஸ் அதிகாரிகளை தற்போதைய அரசாங்கம் பாதுகாத்து, அவர்களுக்கு உயர் பதவிகளை வழங்கி இந்த தாக்குதல் சம்பவத்தை ஒரு நகைச்சுவையாக மாற்றியுள்ளது.

நான் இந்த சம்பவம் தொடர்பில் நேரடியாகவே அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டுகிறேன். எப்போதாவது வரும் ஓர் அரசு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவத்திற்கு நீதியை பெற்றுக்கொடுக்குமானால், அதுவரை நாங்கள் காத்திருப்போம் என்ற மனநிலையிலேயே தற்போது இருக்கிறோம். எங்களுக்கு இந்த அரசாங்கத்தின் மீதிருந்த நம்பிக்கை முழுவதுமாக இல்லாமல் போயுள்ளது. இதனை நினைத்து மிகவும் வேதனையடைகிறோம் - என்றார் பேராயர்.

## சுயாதீனமாக செயற்பட...

தொடர்பாக தற்போது கலந்துரையாடி வருவதாக கூறப்படுகிறது.

அரசாங்கத்தின் முடிவுகள் தொடர்பாக அதிருப்தியடைந்துள்ள இவர்கள், எதிர்காலத்தில் எடுக்கப்போகும் நடவடிக்கைகள் சம்பந்தமாக அவ்வப்போது சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுவதை தவிர தற்போதைய நிலைமையில் மாற்று வழியில்லை எனவும், அரசாங்கம் தொடர்பாக வாக்காளர்களிடமிருந்து கிடைக்கும் அழுத்தங்கள் காரணமாக ஏதாவது ஒரு முடிவை எடுக்க வேண்டும் எனவும் இந்த உறுப்பினர்கள் தங்களுக்குள் பேசியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, டொலர் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, விவசாயிகளின் பிரச்சினைகள், அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு போன்ற காரணங்களால், மக்கள் மத்தியில் அரசாங்கத்திற்கு எதிரான மனநிலை காணப்படுகிறது.

இவ்வாறான நிலைமையில், தமது தொகுதிகளுக்கு செல்லும்போது, மக்கள் இந்த விடயங்கள் தொடர்பில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தமது அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக கடந்த காலங்களில் அரசாங்கம் தொடர்பில் பெருமையாக பேசி வந்த அமைச்சர்களில் பலர் வாய்மூடி மௌனிகளாக இருந்து வருகின்றனர். இந்த பின்னணியிலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர் ஒருவரின்...

அமைச்சர் ஒருவர் தனது வீட்டின் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாத நிலை ஏற்பட்டுள்ளது.

அந்த வீட்டின் மின்சாரக் கட்டணம் 1 கோடியே 20 இலட்சம் ரூபாவை எட்டியுள்ளது. இருந்தும் வீட்டின் மின்சாரத்தை துண்டிக்க மின்சார சபை இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

பாதுகாவலர்களே வீட்டின் மின்சார விநியோகத்துக்கு இடையூறாக இருந்தனர். இந்த நாட்டின் ஏழை மக்களின் மின்சாரம் துண்டிக்கப்படுவதற்கு முன்னர் இவ்வாறான அமைச்சர்களின் மின்சாரம் துண்டிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## டீசல் இல்லாமல்...

முழு நாடும் இன்று ஸ்தம்பித்துள்ளது. வெலிமடையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று முழு நாட்டு மக்களும் ஸ்தம்பித்துள்ளதுடன், கடுமையான கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறோம். அரசாங்கம் நாங்கள் சொல்வதைக் கேட்பதில்லை என தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தார்.

## இந்திய உயர்...

குறித்த சந்திப்பு நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் கூட்டமைப்பு வெளியிட்ட ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெய்ஷங்கர் மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் அடுத்த மாதம் இலங்கைக்கு வருவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி இந்த சந்திப்பில் பேசப்பட்டன.

வடக்கு, கிழக்கின் பொருளாதார அபிவிருத்தியில் இந்தியாவின் பங்களிப்பு பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் போதும் அதற்கு பின்னரும் இலங்கையின் தமிழ் தேசிய பிரச்சினை தீர்வு சம்பந்தமாக தொடர்ந்து வந்த இலங்கை அரசாங்கங்கள் இந்தியாவுக்கு கொடுத்த வாக்குறுதிகளில் 13ஆம் திருத்தத்திற்கு அப்பால் சென்று அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு முறையை உருவாக்குவதாக இருந்தது.

இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றப்பண்ணுவதில் இந்தியா தொடர்ச்சியாக எடுக்கும் முயற்சிகளுக்கு நன்றி தெரிவிக்கின்ற அதேவேளையிலே தொடர்ந்தும் இந்தியா அந்த பங்களிப்பை செய்து இலங்கையில் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் சம்பந்தன் முன்வைத்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் இலங்கைக்கான விஜயத்தின்போது தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வு தொடர்பில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவிடம் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழர்கள் இங்கு எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இந்தியப் பிரதமரிடம் பல விடயங்களை நேரில் பேசத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆவலாக உள்ளது எனவும் சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் நடந்த இந்தக் கூட்டத்தில் வேறு பல விடயங்கள் தீர்க்கமாக ஆராயப்பட்டன என குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயங்கரவாதிகளை...

குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் அல்லது ஏனைய குழுக்கள் கண்டறிந்த தகவல்கள் தொடர்பான விசாரணைகள், ஆராய்ச்சிகள் மற்றும் அறிக்கையிடல்கள் அல்லது உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக, ஜனாதிபதியினால் 2021 ஜனவரி 21ஆம் திகதியன்று, உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டீ. நவாஸ் தலைமையிலான ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை, 2021 ஜூலை 21ஆம் திகதியன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

யுத்தத்துக்கு முகங்கொடுத்த மற்றும் அது தொடர்பான அனுபவங்களைக் கொண்ட யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வசிக்கும் 75 பேர் வழங்கிய சாட்சியங்களின் அடிப்படையிலான பரிந்துரைகள் அடங்கிய 107 பக்கங்களுடன் இந்த இரண்டாவது அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழு கண்டறிந்த விடயங்களை உடன் விசாரித்து, அது தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யவோ அல்லது நஷ்டஈடு வழங்கவோ பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியில் தலைநிமிர அரசாங்கத்தின் உதவி அவசியமென்று, ஆணைக்குழு முன் சாட்சியமளித்துள்ள நபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்றும் ஆணைக்குழு தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளது.

பயங்கரவாதிகளை நினைவுகூர அனுமதியில்லை என்றும் யுத்தத்தின்போது உறவினரொருவர் உயிரிழந்திருப்பாராயின், தனிப்பட்ட ரீதியில் அவரை நினைவுகூர அனுமதி வழங்கவும், ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

அத்துடன், ஜூன் மாதத்துக்குள் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்க முடியுமென்று, அதன் தலைவரும் உயர்நீதிமன்ற நீதியரசருமான ஏ.எச்.எம்.டீ.நவாஸ் குறிப்பிட்டார்.

தற்போது விற்பனையில்


தொடர்புகளுக்கு : 0777 983308 - விநியோகப்பிரிவு

# நானுஓயாவில் லொறி விபத்து





*- டி.சந்ரு, செ.திவாகரன் -*

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நானுஓயா குறுக்குப் பாதையில் லொறியொன்று விபத்துக்குள்ளான சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

மஹியங்கனை பகுதியிலிருந்து ஹட்டன் பகுதிக்கு மணல் ஏற்றிச்சென்ற லொறியில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக இவ்விபத்து இடம்பெற்றிருக்கலாம் என்று நானுஓயா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

லொறியினை செலுத்திச் சென்ற சாரதி எவ்வித பாதிப்புமின்றி உயிர்தப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நானுஓயா குறுக்குப் பாதையில் மணல் லொறி போன்ற அதிக பாரம் சுமந்து வரும் வாகனங்கள் பயணிக்கத் தடைவிதிக்கப்பட்டு, அறிவித்தலொன்றும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு மாநகர முதல்வர் ரோஸி யாழ். நூலகத்திற்கு புத்தகங்கள் கையளிப்பு



*- யாழ் நிருபர் -*

கொழும்பு மாநகர முதல்வர் ரோஸி சேனநாயக்க மற்றும் உறுப்பினர்கள் யாழ்ப்பாண பொதுசன நூலகத்தினைப் பார்வையிட்டு ஒரு தொகுதி புத்தகங்களையும் நூலகத்துக்கு கையளித்துள்ளனர்.

யாழ்ப்பாண பொதுசன நூலகத்திற்கு வருகை தந்த கொழும்பு மாநகர முதல்வர் அடங்கிய குழுவினரை யாழ்ப்பாண மாநகர பிரதி முதல்வர் துரைசாசா ஈசன், மாநகர சபை ஆணையாளர் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் வரவேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பிற்கு வல்லப்பட்டை எடுத்துச் சென்ற அளுத்கமவாசி கைது





*- கனகராசா சரவணன் -*

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள கண்ணகி அம்மன் ஆலய வீதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் வல்லப்பட்டையுடன் தங்கியிருந்த அளுத்கம பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரை வெள்ளிக்கிழமை (18) மாலை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், ஆயிரத்து 700 கிராம் வல்லப்பட்டையை மீட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பிஎஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கு அமைய மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான பொலிஸாருடன் இணைந்து சம்பவ தினமான வெள்ளிக்கிழமை மாலை கண்ணகி அம்மன் ஆலய வீதியிலுள்ள விடுதி ஒன்றை முற்றுகையிட்டு குறித்த அறையை பொலிஸார் சோதனையிட்டபோது ஆயிரத்து 700 கிராம் வல்லப்பட்டையை கைப்பற்றியதையடுத்து அங்கிருந்த ஒருவரை கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர் அளுத்கம பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடையவர் எனவும், மட்டக்களப்பில் வல்லப்பட்டையை விற்பனை செய்வதற்காக அதன் மாதிரியுடன் வந்து விடுதியில் தங்கியிருந்துள்ளார் எனவும், பெருந்தொகையான வல்லப்பட்டைகளை அவர் அளுத்கமவில் பதுக்கி வைத்திருப்பதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன், கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மருத்துவர்கள் போராட்டம்; இடைநிறுத்தத் தீர்மானம்

வைத்தியசாலைகளில் நாளை திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவிருந்த பணிப்புறக்கணிப்பை இடைநிறுத்துவதற்கு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் (18) தமது பிரச்சினைகள் தொடர்பில் சுகாதார அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலில் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரும் கலந்துகொண்டதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# கைதுசெய்வதற்கு இடைக்காலத் தடை விதிக்கக் கோரி ஷானி மனுத்தாக்கல்

தாம் கைதுசெய்யப்படுதல் மற்றும் தடுப்புக்காவலில் வைக்கப்படுதலை இடைநிறுத்தி உத்தரவிடுமாறு கோரி குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (18) அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்தார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலை வழிநடத்திய மொஹமட் ஹாசிம் மொஹமட் சஹ்ரான் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் குளியாப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பி அறிக்கைக்கு அமைய, தம்மைக் கைதுசெய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் 9/1 சரத்திற்கு அமைய தான் கைதுசெய்யப்படுவதற்கும், பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியால் தமக்கு தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கும் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டத்தரணி மஞ்சுள பாலசூரியவினால் இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அநாமதேய மனு ஒன்றின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட போலியான விசாரணை அறிக்கைக்கு அமைய தனக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி அறிக்கையையும் வலுவிழக்கச் செய்யுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏதேனுமொரு விதத்தில் தாம் கைதுசெய்யப்பட்டால், உடனடியாக விடுதலை செய்வதற்குரிய உத்தரவைப் பிறப்பிக்குமாறும், அவ்வாறு இடம்பெற்றால் ரூ.100 மில்லியன் நஷ்டஈட்டை செலுத்துவதற்கு உத்தரவிடுமாறும் ஷானி அபேசேகர தனது மனுவினூடாக கோரிக்கை விடுத்துள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மெரில் ரஞ்சன் லமாஹேவா, திணைக்களத்தின் பெண் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிரோஷனி பத்திரண உள்ளிட்ட 14 பேர் மனுவின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தம்மைக் கைதுசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இதனூடாக தமது அடிப்படை உரிமை மீறப்படும் எனவும் ஷானி அபேசேகர தனது மனுவின் ஊடாக சுட்டிக்காட்டியுள்ளார்.

# எங்களுக்கான பாதையை உருவாக்குதல்; ஆய்வு வெளியீட்டு விழா யாழ்ப்பாணத்தில்



*- யாழ் நிருபர் -*

"எங்களுக்கான பாதையை உருவாக்குதல் - பெண் குடும்பத் தலைவர்களுக்கான மாறிச் செல்லும் வரைவிலக்கணங்களை உருவாக்குதல்" என்னும் தொனிப்பொருளில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் அமைப்பின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற ஆய்வின் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் யாழில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

விழுது அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் மைத்திரேயி இராஜசிங்கம் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ரூபிணி வரதலிங்கம், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவர் சுரேந்திரகுமார், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி சுதாகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், இந்நிகழ்வில் பனை அபிவிருத்தி சபையின் அதிகாரிகள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த அரச அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

# 17 வயதுடைய இளைஞன் தூக்கிட்டுத் தற்கொலை! கன்னன்குடாவில் சம்பவம்

*- கல்லடி நிருபர் -*

வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கன்னன்குடா பிரதேசத்தில் சந்திரகுமார் டிலக்ஷன் (வயது 17) என்ற இளைஞன் கடந்த வியாழக்கிழமை (17) தனக்குத்தானே தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ள நிலையில், சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர். சம்பவ தினத்தன்று அவரின் தாயார் வைத்தியசாலைக்குச் சென்று வீடு திரும்பிய நிலையில், வீட்டின் கதவுகள் அடைக்கப்பட்டிருந்ததாகவும், பின்னர் அயலவர்களின் உதவியுடன் வீட்டின் கதவினைத் திறந்து உட்சென்றபோது குறித்த இளைஞன் வீட்டின் அறையினுள் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதவான் ஏ.சி.றிஸ்வானின் உத்தரவுக்கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் பொருட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அத்துமீறிய 6 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது

*- யாழ் நிருபர் -*

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்கள் ஒரு படகுடன் நேற்று முன்தினம் இரவு இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

காரைநகர் கோவளம் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் இந்தியாவைச் சேர்ந்த ஒரு படகையும், அதிலிருந்த 6 மீனவர்களையும் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்டவர்களையும், படகினையும் கடற்படையினர் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

# திருமறைக் கலாமன்றத்தின் ஆய்வரங்கத்தொடர் இன்று

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக "கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகள்: ஒரு பன்முகப் பார்வை" என்னும் தலைப்பில் மெய்நிகர் வழியில் சூம் செயலியினூடாக திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற ஆய்வரங்கத் தொடரின் ஒன்பதாவது நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை (20.02.2022) மாலை 7.00 மணிக்கு (இலங்கை நேரம்) இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் முன்னாள் தலைவரும், ஓய்வுநிலைப் பேராசிரியருமான கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் "நீ.மரியசேவியர் அடிகளின் இலக்கிய நாடக எழுத்துருக்கள் மீதான பார்வை" என்னும் தலைப்பில் யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலய ஆசிரியரும், திருமறைக் கலாமன்ற நாடகப் பொறுப்பாளருமான திருமதி வைதேகி செல்மர் எமில் ஆய்வினை வழங்கவுள்ளார்.

ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 7893644809, கடவுச்சொல் cpa ஊடாக இந்நிகழ்வில் இணைந்துகொள்ள முடியும்.

# ஹட்டனில் நடைபெற்ற நூறு கோடி மக்களின் எழுச்சி நிகழ்வு



நூறு கோடி மக்களின் எழுச்சி
வன்முறைகளற்ற வாழ்வுக்காய்
ஆடுவோம்!பாடுவோம்!வரைவோம்
விளையாடுவோம்! கொண்டாடுவோம்!



வருடாந்தம் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் நூறு கோடி மக்களின் எழுச்சி இம்முறை இலங்கையிலும் கொண்டாடப்பட்டது. "வன்முறைகள் இல்லாது வாழ்தல் கொண்டாடப்பட வேண்டியது – பெண்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும்" என்ற தொனிப்பொருளுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், ஹட்டனில் நோர்வூட் மைதானத்தில் தேசிய ரீதியில் பதிவுசெய்யப்பட்ட அரச சார்பற்ற நிறுவனமான சமூக நல்வழி மன்றத்தின் பிரதான பொறுப்பாளர் திருமதி சந்திரமதியின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில், மலையகத்திலுள்ள மன்றத்தை சார்ந்த பெண்கள், மற்றும் ஏனைய இளம் பெண்கள் இணைந்து இந்நிகழ்வை ஒரு கொண்டாட்டமாக நடத்தியுள்ளனர்.

இந்நிகழ்வில், மலையகத்தின் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், நாட்டார் பாடல்கள் பெண்களால் அருமையாகப் பாடப்பட்டன.

தெற்காசிய பெண்கள் அமைப்பின் செயற்பாட்டாளரான கமலாபாசின் தலைமையில் தெற்காசிய நாடுகளுக்கு இப்பிரச்சார எழுச்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதேவேளை இலங்கையில் தெற்காசிய பெண்கள் அமைப்பின் உறுப்பினரும், பெண்ணிய செயற்பாட்டளருமான கமலா வாசுகியினால் இப்பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நூறு கோடி மக்களின் எழுச்சி நிகழ்வும் பின்னணியும்**

"நூறு கோடியினர் கிளர்ச்சி" பெண்களால் பெண்களுக்காக நடத்தப்படும் இயக்கமாகும். பெண்களுக்கு எதிராக நடத்தப்படும் வன்முறைகளை நிறுத்தவும், பாலின சமத்துவம் மற்றும் நீதிக்காகவும் இந்த இயக்கம் போராடுகிறது. பெண்களில் மூன்றில் ஒருவர் தங்கள் வாழ்நாளில் பாலியல் வன்முறை அல்லது வீட்டு வன்முறைக்கு ஆளாகின்றனர் மதிப்பீட்டின் அடிப்படையில், உலகளவில் நூறு கோடி பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்படுவதன் அடிப்படையில் இந்த இயக்கம் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த இயக்கம் நாடகாசிரியரும், செயல் வீரருமான ஈவ் என்சுலர் என்ற பெண்மணியால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இயக்கத்தில் 5,000 அமைப்புகள் இணைந்துள்ளன. இதற்கு பல சமய அமைப்புகள், சமூக இயக்க செயல் வீரர்கள், நடிகர்கள், பெண்ணிய அரசியல்வாதிகள் போன்றோரால் ஆதரவும், சிபாரிசும் அளிக்கப்பட்டுள்ளன.

செப்டெம்பர் 20, 2012இல் 160 நாடுகளைச் சேர்ந்த மக்கள் இந்த இயக்கத்திற்கு ஆதரவாக கையெழுத்திட்டுள்ளனர். பெப்ரவரி 14, 2013 அன்று 190 க்கும் மேலான நாடுகளில் பேரணிகள் நடத்தப்பட்டன. அன்றைய நாளில் உலகெங்கும் நூறு கோடி பெண்கள் தங்கள் வலிமையைக் காட்டும் விதமாக இணைந்து ஆடுவதற்கு அறைகூவல் விடப்பட்டது. இதனைத் தொடர்ந்து இப்பிரச்சார எழுச்சி 2013 ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்று வருவதுடன், நூறு கோடி பெண்கள் எழுச்சி நாடு முழுவதும் கொண்டாடப்படுகின்றது.

வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilaneditor@gmail.com

# தேவை பொதுவான கொள்கைவகுப்பு

எரிபொருள் விலைகளை அதிகரிக்குமாறும் இல்லை என்றால், எரிபொருளுக்கு அறவிடப்படும் வரிகளை நீக்குமாறும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரியுள்ள விலைத் திருத்தங்களை செய்தால், அது வரலாற்றில் மிகப் பெரிய விலை அதிகரிப்பாக இருக்குமெனவும் அமைச்சர் கம்மன்பில குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நஷ்டத்தின் காரணமாக செயற்பாடுகளை மேற்கொள்வதிலுள்ள சிரமங்கள் காரணமாகவே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதக தெரிகிறது.

அமைச்சரின் தகவலின்படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் ரூ. 551 மில்லியன் இழப்பைச் சந்திக்கிறது. கடந்த ஆண்டு மாத்திரம் ரூ.83 பில்லியன் இழப்பைச் சந்தித்திருக்கிறது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நஷ்டத்தை சந்திக்கும் பட்சத்தில் அரசாங்கம் சலுகைகளை வழங்க வேண்டும் அல்லது எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டும். இதனை செய்யத் தவறினால் எதிர்காலத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்பதே கணிப்பு.

டொலர் நெருக்கடியால் எரிபொருள் இறக்குமதிக்கான நிதியை விடுவிக்க முடியாதுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் ஜனவரி மாதம் வலுசக்தி அமைச்சுக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மதிப்பீடுகளின் அடிப்படையில் 92 ஒக்டேன் பெற்றோலுக்கு 42 ரூபாவும், 95 ஒக்டேன் பெற்றோலுக்கு 64 ரூபாவும், டீசலுக்கு 17 ரூபாவும், சுப்பர் டீசலுக்கு 39 ரூபாவும் வரி விதிக்கப்படுகிறது. வரிகள் மூலம் நிதி அமைச்சு நாளாந்தம் ரூ.367 மில்லியன் வருமானம் ஈட்டுகிறது.

வரிகள் நீக்கப்பட்டால், நாளாந்த நஷ்டத்தில் ஒரு பகுதியை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஈடுகட்ட முடியும். எனவே, பொதுமக்களுக்கு சுமையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக இந்த முறையில் நஷ்டத்தை ஈடுகட்ட அரசாங்கம் முயற்சி எடுக்கிறதென்பதே அமைச்சரின் நிலைப்பாடு. அதனால்தான் எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரியுள்ளது.

உலக எரிபொருள் நெருக்கடிக்கு குறுகிய கால தீர்வுகள் இல்லை என பெற்றோலிய உற்பத்தி நாடுகளின் கூட்டமைப்பான 'ஒபேக்' சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்த அறிக்கையில் கூறியிருந்தது.

எண்ணெய் உற்பத்தி குறைந்துள்ளது. எண்ணெய் விநியோகம் மற்றும் போக்குவரத்து சிக்கலாகியுள்ளன. இதனிடையே எரிபொருளுக்கான கேள்வி உலகில் வேகமாக அதிகரித்துள்ளது.

இதன் கட்டாயமான பிரதிபலனாக எண்ணெய் விலை அதிகரிக்கும். கடந்த ஆண்டு ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 80 முதல் 82 அமெரிக்க டொலர்களாக இருந்தது.

அது தற்போது 90 முதல் 92 அமெரிக்க டொலர்களாக காணப்படுகிறது. இன்னும் குறுகிய காலத்தில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 100 முதல் 105 அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கப்படலாம் என ஒபேக் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. இப்படியான நிலைமையில் இலங்கை போன்ற நாடுகளே மிகவும் கஷ்டங்களுக்கு உள்ளாகும். இலங்கையில் எரிபொருள் உற்பத்தி செய்யப்படுவதில்லை. நாட்டின் பொருளாதாரம் பலவீனமாக இருக்கின்றது.

மின்சார விநியோகத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதே இலங்கையில் எரிபொருள் நெருக்கடியில் காணக் கூடிய முக்கிய அடையாளமாக உள்ளது. எரிபொருள் நெருக்கடி ஏற்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் மின் விநியோக நெருக்கடியும் உருவாகும்.

மொத்த மின் உற்பத்தியில் பாதிக்கும் மேற்பட்ட மின்சாரம் எரிபொருள் மூலமே உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்காக எரிபொருளை களஞ்சியப்படுத்த வேண்டிய தேவை இலங்கைக்கு இருக்கின்றது.

நீர் மின் உற்பத்தியில் இதனை விட எதிர்பார்ப்பை கொண்டிருக்க முடியாது என்பதால், எரிபொருளற்ற மின் உற்பத்தி குறித்து இலங்கை கவனத்தை செலுத்த வேண்டும்.

அரசாங்கம் இதற்காக வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி இருந்தாலும் அவற்றின் பிரதிபலன்கள் உடனடியாகக் கிடைக்காது. இதனால், எரிபொருள் விநியோகத்தை ஸ்திரப்படுத்தும் வழிமுறையை நோக்கி இலங்கை செல்ல வேண்டும்.

அத்துடன் இலங்கையின் போக்குவரத்து முற்றாக எரிபொருளை நம்பியே இருக்கின்றது. மின்சார ரயில் சேவை யோசனைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டு காணப்படுகிறது.

மின்கலங்களில் ஓடும் வாகனங்கள் தொடர்பில் மக்களுக்கு நம்பிக்கையில்லை. எரிவாயுவின் இயங்கும் வாகனங்கள் குறித்து கவனத்தை செலுத்த முடியும் என்ற போதிலும் தற்போதைய நிலைமையில், எரிவாயு விலை அதற்கு எதிராக உள்ளது. இலங்கையின் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மிக நீண்டகாலமாக நஷ்டத்தில் இயங்கி வருகிறது. மக்களுக்கு மானிய விலையில் எரிபொருளை வழங்குவது மட்டுமல்லாது அதற்கு வேறு காரணங்களும் உள்ளன. இதற்கு பிரதான காரணம் கடனுக்கு எரிபொருளை விநியோகிப்பதாகும்.

இலங்கை மின்சார சபை உட்பட பல அரச நிறுவனங்கள், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கோடிக்கணக்கில் கடன் நிலுவை வைத்துள்ளன. இந்தக் கடனை செலுத்தாத நிலையிலும் மீண்டும் கடனுக்கு எரிபொருளை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்கியிருப்பது ஆச்சரியத்திற்குரியது.

கடனுக்கு எரிபொருளை விநியோகிப்பதை நிறுத்தினால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நஷ்டம் பல மடங்காக குறையும். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதான கடனாளி இலங்கை மின்சார சபையே.

மின்சார சபை பெரிய அளவில் வருமானத்தை ஈட்டி வருவதால், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடனை செலுத்த வேண்டும். இலங்கையில் எந்த அரசியல் கட்சி ஆட்சியிலிருந்தாலும் இந்த பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும். பொதுவான கொள்கைவகுப்பே இப்போதைய, எப்போதையதும் தேவை. அரசு அதனையே செய்யவேண்டும்.




## ★ சந்திக்கு வந்த ஆளுங்கட்சி குடுமிப்பிடிச் சண்டை
## ★ மோதலில் வெல்லப்போவது யார்? ஜோன்ஸ்டனா? லான்சாவா?
## ★ கெபினெட்டில் அமைச்சர் சரத் வீரசேகரவை வாட்டிய கோட்டா
## ★ திரைப்படத் தயாரிப்பாளராகும் அமைச்சர்

ஆளுங்கட்சிக்குள் நிலவும் பூசல் இப்போதுதான் வெளியே வந்துகொண்டிருக்கிறது.

இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவுக்கும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்குமிடையில் பெரும் கருத்து முரண்பாடு. கடந்த வார முற்பகுதியில் இராஜாங்க அமைச்சிலிருந்த தனது பொருட்களையெல்லாம் ஒப்படைத்துவிட்டு தனது தனிப்பட்ட பணியாளர்களையும் போகச் சொல்லிவிட்டு வீடு திரும்பினார் லான்சா.

லான்சா அரச உயர்மட்டத்தினருடன் மிகவும் நெருங்கிப் பழகுபவர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதியமைச்சர் பெசில் ஆகியோருடன் நெருக்கமான உறவைக் கொண்டவர். அப்படியான ஒருவர் திடீரென இப்படி நடந்து கொள்வதுதான் எல்லோருக்கும் ஆச்சரியத்தை உண்டுபண்ணியுள்ளது.

இதற்கு காரணமான சம்பவம் இதுதான். கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க அனுருத்த அமைச்சர் ஜோன்ஸ்டனை சந்தித்து, வீதிகளை காபட் இடும் பணிகளைத் தருமாறும், தமக்கு சுமார் 25 கிலோ மீற்றர் வரையான வீதி அபிவிருத்தி தேவை என்றும் கேட்டிருக்கிறார். இது நடந்து ஒரு மாதமிருக்கும். இந்நிலையில், இந்த எம்.பி. விடுத்த கோரிக்கையை முழுமையாக ஏற்காத அமைச்சர் ஜோன்ஸ்டன், அவருக்கு 10 கிலோ மீற்றர் வரையான வீதி அபிவிருத்தித் திட்டத்தை ஒதுக்கியிருக்கிறார்.

அமைச்சர் ஜோன்ஸ்டனின் இந்த செயலால் கடும் கோபமடைந்த இராஜாங்க அமைச்சர் லான்சா, தனது மாவட்ட வேலைத்திட்டங்களை தனது ஆலோசனையின்றி செய்யவேண்டாமென்று அமைச்சர் ஜோன்ஸ்டனிடம் தொலைபேசியில் சொல்ல அங்கேதான் பிரச்சினை உருவாகியிருக்கிறது. "எனக்கு உத்தரவிட நீர் யார்?" என்று கோபத்துடன் லான்சாவுக்கு பதிலளித்த அமைச்சர் ஜோன்ஸ்டன், இது தொடர்பில் அரச தலைவர்களிடம் முறையிட்டுள்ளார்.

அதேசமயம் அமைச்சர் ஜோன்ஸ்டன் நெடுஞ்சாலை அபிவிருத்தியில் ஊழல் செய்கிறார் என்று சில குற்றச்சாட்டுகளை தனது பங்குக்கு அரச மேலிடத்தில் போட்டுக்கொடுத்திருக்கிறார் லான்சா. இந்த முரண்பாடே இப்போது வெடித்திருக்கிறது. லான்சா இராஜாங்க அமைச்சின் பணிகளை விட்டுவிட்டு வீட்டுக்குச் சென்ற கையோடு, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, லான்சாவின் வீட்டுக்குச் சென்று சமரசம் செய்ய முயன்றுள்ளார். அதேபோல் பிரதமர் மஹிந்த, நிதியமைச்சர் பெசில் ஆகியோரும் தொலைபேசியில் லான்சாவுடன் பேசியுள்ளனர். ஆனால், அந்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

இதே சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, லான்சாவை தொலைபேசியில் மிரட்டும் குரல் பதிவொன்று வெளியாகியுள்ளது. வீதி அபிவிருத்தியில் தலையிட வேண்டாமென கூறி கடுந்தொனியில் லான்சாவை மிரட்டுகிறார் நிஷாந்த. இந்த குரல் பதிவை அரச மேலிடத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் லான்சா. அது தொடர்பில் உயர்மட்ட ஆய்வுகள் நடத்தப்படுகின்றன.

ஏற்கனவே இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவுக்கும் அமைச்சர் ஜோன்ஸ்டனுக்குமிடையில் வீதி அபிவிருத்தி விடயத்தில் கடந்த வாரம் வாக்குவாதம் ஒன்றே நடந்தது. வீதிகளை இப்படி ஆள் ஆளுக்கு கேட்டால் அவற்றை 'டெண்டர்' இட்டுக் கொடுக்கவேண்டிவருமென அமைச்சர் ஜோன்ஸ்டன் அப்போது தெரிவித்தார். அதுவும் இப்போது ஆளுங்கட்சி எம்.பிக்களுக்கு அதிருப்தியைக் கொடுத்துள்ளது.



நாளை கொழும்பில் லான்சாவை பேச்சுக்கு அழைத்திருக்கிறார் பிரதமர் மஹிந்த. இதன்போது அவரை சமாதானப்படுத்தும் வேலைகள் நடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### என்ன நடக்கும்?

லான்சா விவகாரம் ஆளுங்கட்சிக்குள் நெருக்கடி நிலைமையொன்றை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக ராஜபக்ஷ சகோதரர்கள் மத்தியில் அது முரணை ஏற்படுத்தியுள்ளது. லான்சாவுக்கு ஆதரவாக மஹிந்தவும், பெசிலும் நிற்கின்றனர். ஆனால், ஜனாதிபதி கோட்டாபயவோ, ஜோன்ஸ்டனை விட்டுக்கொடுப்பதாக இல்லை. அமைச்சர் ஜோன்ஸ்டன் தனது அமைச்சைத் திறம்பட செய்கிறார் என்ற ஆழ்ந்த நிலைப்பாட்டில் ஜனாதிபதி இருக்கிறார். அதனால்தான் லான்சா இராஜாங்க அமைச்சுப் பொறுப்புகளை விடப்போகிறார் என்ற செய்தி கேட்டதும் அவரை அழைத்துப் பேசவில்லை ஜனாதிபதி. இதனால் லான்சாவை மஹிந்தவும், பெசிலும் சமரசம் செய்தாலும் கூட ஜனாதிபதி லான்சாவுடன் சமரசமாகும் நிலைமை இல்லை. அமைச்சரவை மறுசீரமைப்பு வந்தாலும் ஜோன்ஸ்டனின் அமைச்சுகள் மாறும் நிலை இல்லை.

கடந்த நல்லாட்சி காலத்தில் நிமல் லான்சா அவர்களுடன் இணைந்திருந்தார். "அப்போது நாங்கள் எதிர்க்கட்சியிலிருந்து பெரும் துயரப்பட்டோம். இப்போது சரிசமமாக உரிமை கேட்கிறார். நாங்களும் பழையதை மறக்கவில்லை" என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் ஜனாதிபதியின் காதில் போட்டுள்ளதாக தகவல்.

### அமைச்சரவையில் நடந்ததென்ன ?

அமைச்சரவை கூட்டம் கடந்த வார முற்பகுதியில் ஜனாதிபதி கோட்டா தலைமையில் நடந்தபோது, இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள் விடயம் தொடர்பில் பேச்சு வந்தது. "நானும் இவ்வளவு நாள் அமைதியாக இருந்தேன். இப்போது பேசவேண்டிய நேரம் வந்துவிட்டது. மேலே பார்த்து எச்சில் உமிழக்கூடாது என்று இருந்தாலும் இதற்கு மேல் பொறுக்க முடியாது. எனக்கு கீழ் இருக்கும் இராஜாங்க அமைச்சு எனது பணிப்புரைகளைக் கேட்பதில்லை. அதன் செயலாளர் கூட எனது கூட்டங்களுக்கு வருவதில்லை. அங்குசம் மட்டும்தான் என்னிடம் இருக்கிறது. யானை எனது பேச்சை கேட்பதில்லை" என்று பொருமினார் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க.

"இல்லை, இல்லை... அமைச்சுகளுக்கு உதவவே இராஜாங்க அமைச்சுகளை நான் நியமித்தேன். அப்படி எவரும் சொல்ல முடியாது. கொஞ்சம் பொறுங்கள். நானே இராஜாங்க அமைச்சின் செயலாளர்களை சந்தித்து பேசுகிறேன்" என்று அமைச்சர் சி.பிக்கு அப்போது பதிலளித்தார் ஜனாதிபதி.

"எனது இராஜாங்க அமைச்சில் இப்படியான பிரச்சினை இல்லை. இராஜாங்க அமைச்சர் தயாசிறி மிகவும் ஒருங்கிணைப்புடன் வேலைகளை செய்கிறார்" என்று அப்போது தன் பங்குக்கு கூறி வைத்தார் அமைச்சர் விமல் வீரவங்ச.

### சரத் வீரசேகரவுக்கு ஜனாதிபதி இட்ட கட்டளை

இம்முறை அமைச்சரவைக் கூட்டத்தில் மற்றுமொரு முக்கியமான விடயம் நடந்தேறியது. கொழும்பில் சுகாதாரத்துறையினரின் ஆர்ப்பாட்டங்களை கட்டுக்குள் கொண்டுவர பொலிஸ் அதிகாரம் பயன்படுத்தப்படவேண்டுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மக்களின் அன்றாட கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கிறார்கள். அவர்களை பொலிஸ் தடியடி செய்தோ அல்லது கண்ணீர்ப் புகை வீச்சு நடத்தியே கட்டுப்படுத்தவேண்டும் என்று மக்கள் கோருவதாக அமைச்சர் சரத் தெரிவித்தார்.

ஆனால், ஜனாதிபதி இதற்கு உடன்படவில்லை. "சரத், இது தேவையில்லாத வேலையாகிவிடும். அதே ஆர்ப்பாட்டக்காரர்கள் காலிமுகத்திடலுக்கு வந்து ஜனாதிபதி செயலகம் அருகில்வரை வந்தார்கள். நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை. அவர்களில் பலர் கடற்கரைக்கு சென்று நீரில் கால்களை நனைத்து விளையாடிக் கொண்டிருந்ததையும் கண்டேன். நாங்கள் அவர்களை அடித்திருந்தால் அது பிரச்சினைக்குத் தீர்வைத் தராது. எனவே, அவர்கள் தமது உரிமைகளுக்குப் போராடட்டும்" என்று சரத்தை நோக்கிப் பதிலளித்தார் ஜனாதிபதி.

ஜனாதிபதியின் பதிலில் உடன்படாத அமைச்சர் சரத் மீண்டும் பேசத் தொடங்கினார். "இல்லை. நாங்கள் ஆசிரியர் போராட்டத்தில் மிகவும் அமைதி காத்தோம். அவர்கள் எல்லாவற்றையும் செய்தார்கள். இறுதியில் கோரிக்கைகளை வென்று ஸ்டாலினும், மஹிந்த ஜெயசிங்கவும் வீரர்களாகிவிட்டனர். அரசாங்கம் அவர்களுக்கு பயந்ததுபோல் ஆகிவிட்டது. இப்போதும் சுகாதாரத்துறையினர் நடத்தும் போராட்டம் அப்படியேதான் நடக்கப் போகிறது" என்று ஜனாதிபதியிடம் தெரிவித்தார் சரத்.

"இல்லை. அதனை அப்படி எடுக்கக் கூடாது.ஆசிரியர்களுக்கு தீர்வை வழங்க கொள்கை அடிப்படையில்தான் முடிவு எடுக்கப்பட்டது. இது மக்களுக்குத் தெரியும். அதையும் இதனையும் குழப்பிக்கொள்ளவேண்டாம்" என்று அதற்கு பதிலளித்தார் ஜனாதிபதி.

ஜனாதிபதியின் அந்த பதிலிலும் திருப்தியடையாத அமைச்சர் சரத், "இவ்வகையான ஆர்ப்பாட்டங்களை பார்த்து பொலிஸார் அமைதியாக இருப்பதால் மக்கள் விசனிக்கின்றனர். உண்மையில் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்பதே எனது கோரிக்கை" என்று மீண்டும் குறிப்பிட்டார் சரத் வீரசேகர.

அமைச்சர் சரத்தின் தர்க்கத்தால் கோபமடைந்த ஜனாதிபதி, "நீங்கள் செய்யும் வேலைகளால் எனக்கு வெளிநாடு ஒன்றுக்குக் கூட போகமுடியாமல் போய்விடும் போல் இருக்கிறது. ஆர்ப்பாட்டத்தை அடக்கி ஒடுக்க வேண்டுமென நீங்கள் என்னிடம் கேட்டதாகவும், ஆனால், நான் அதனை மறுத்ததாகவும் வேண்டுமானால் நீங்கள் வெளியில் சென்று கூறுங்கள். இதற்கு அனுமதியளிக்க முடியாது. இது தேவையில்லாத பிரச்சினைகளைத் தரும்" என்று சத்தமாகக் கூறினார் ஜனாதிபதி. இதனையடுத்து அமைதியானார் அமைச்சர் சரத்.

ஆனாலும், ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸ் அதிகாரத்தைப் பாவிப்பதில் தவறில்லையென அமைச்சர் விமல் வீரவங்ச அமைச்சரவையில் குறிப்பிட்டுள்ளார். "நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது எங்கள் மீது இப்படியான தாக்குதல்கள் இடம்பெற்றன. சிலவற்றைக் கட்டுப்படுத்த சிலவற்றை செய்யவேண்டும். அதில் தப்பில்லை" என்றார் அமைச்சர் விமல். ஆனாலும், பெரும்பாலான அமைச்சர்கள் ஜனாதிபதியின் கருத்துடன் உடன்பட்டதால் ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க இடமளிக்க தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் உடனடியாக இந்த பிரச்சினை குறித்து பேசுமாறு சுகாதார அமைச்சர் கெஹெலியவுக்கு ஜனாதிபதி பணித்தார்.

### நவம் பெரஹராவில் ஜனாதிபதி

கொம்பனித்தெரு கங்காராம நவம் பெரஹராவில் கடந்த வாரம் கலந்துகொண்டார் ஜனாதிபதி. அப்போது பூஜைகளுக்கு மலர்வைக்க தயாரான ஜனாதிபதி அங்கே எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஹர்ஷ டி சில்வா, கயந்த கருணாதிலக்க, திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோரைக் கண்டார். ஹர்ஷாவின் கையைப் பிடித்து அழைத்த ஜனாதிபதி, "எதிர்க்கட்சி என்பதற்காக நீங்கள் இப்படி ஓரமாக இருக்க முடியாது. வாருங்கள், வந்து மலர்களை வையுங்கள். நல்ல விடயங்களை செய்ய பின்நிற்காதீர்கள்..." என்று கூறினார். எதிர்க்கட்சி எம்.பிக்களும் ஜனாதிபதியுடன் இணைந்து மலர்களை பூஜைக்கு வைத்தனர்.

### திரைப்படத் தயாரிப்பாளராகும் அமைச்சர்

அமைச்சர் மஹிந்த அமரவீர சிங்கள சினிமா திரைப்படமொன்றை எடுக்கத் தயாராகி வருகிறார். திரைப்படமொன்றை தனது சொந்த செலவில் தயாரிக்க வேண்டுமென்பது நீண்டநாள் ஆசை என்பதால் அதனை இப்போது செய்யும் நேரம் வந்துவிட்டது என்று தனது நெருங்கிய சகாக்களிடம் கூறியிருக்கிறார் அமைச்சர் அமரவீர. படப்பிடிப்புகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளனவாம். இதில் ஒரு பிரதான கதாபாத்திரத்தில் அமைச்சர் மஹிந்த அமரவீர நடிக்கவுள்ளதாகவும் தகவல்.

### கொழும்பு அரசியல் நிலைமை

கொழும்பு அரசியலின் நிலைமை நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது. அது எப்போதும் பற்றி எரியும் நிலையே இருக்கிறது. ஜெனிவா மனித உரிமைகள் விவகாரம், எரிபொருளுக்குத் தட்டுப்பாடு, மின்வெட்டு, பொருளாதார நெருக்கடி, ஆளுங்கட்சிக்குள் குழப்பமென பிரச்சினைகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

மறுபுறம் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பந்தமான வழக்கில் முன்னாள் ஐ.ஜி.பி. பூஜித்த ஜெயசுந்தரவும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவும் முற்றுமுழுதாக விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த விசாரணைகள் புதிய பக்கத்தைத் திறந்துவிட்டுள்ளன.

மைத்ரியின் ஆட்சியில் புலனாய்வுத்துறைக்குப் பொறுப்பாக இருந்த நிலந்த ஜயவர்தன இதற்கு பொறுப்புக் கூறவேண்டுமென நீதிமன்றமே சொல்லியிருப்பதால் அவர் மீது விசாரணைகளை நடக்க வாய்ப்புண்டு. அப்படி நிலந்த மீதான விசாரணைகளை நோக்கும்போது அவர் அப்போதைய பாதுகாப்பமைச்சரான மைத்ரியை நோக்கி விரல் நீட்டக்கூடும். முன்னாள் ஜனாதிபதி மைத்ரிக்கு ஜனாதிபதிக்கான சிறப்புரிமைகள் இருந்தாலும், சட்டத்திலிருக்கும் ஓட்டைகளைப் பயன்படுத்தி அவர் மீதும் விசாரணைகள் பாயலாமென்றே சட்டத்துறை தகவல்கள் சொல்கின்றன.

விசாரணைகள் என்ற ரீதியில் மைத்ரி இறுகுவாராக இருந்தால், இந்த அரசிலிருந்து வெளியேறி புதிய கூட்டணி ஒன்றை அமைக்க நினைக்கும் அவரது திட்டம் கனவில் முடியலாம். மைத்ரியை விசாரித்து அவர்தான் தவறிழைத்தாரெனவும், அவர் சார்ந்த அப்போதைய அதிகாரிகள்தான் பொறுப்பெனவும் நீதிமன்றம் கூறுமானால் இப்போது அரசுக்கெதிராக போர்க்கொடி தூக்கும் பேராயர் மற்றும் கிறிஸ்தவ சமூகம் அமைதியாகிவிடும். அவர்களின் ஆதரவும் அரசுக்கு கிடைக்கலாம். எனவே, சட்டத்திலுள்ள ஓட்டைகளை வைத்து மைத்ரிக்கு கடிவாளம் போட அரச மேலிடம் முயற்சிக்கும்.

### சஜித் கிழக்கு பயணம்

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச கடந்த வாரம் கிழக்கு மாகாணத்திற்கு பயணம் செய்திருந்தார். கிழக்கில் முக்கிய அரசியல் முஸ்லிம் பிரமுகர் ஒருவர் இந்த சந்தர்ப்பத்தில் சஜித்துடன் இணையவிருந்தார். ஆனால், சில அரசியல் காரணங்களுக்காக அது தவிர்க்கப்பட்டது. கிழக்கில் தேர்தல்களை சந்திக்கும்போது ஐக்கிய மக்கள் சக்தி தனித்துப் போட்டியிடுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் இங்கு ஆதரவாளர்களிடம் உறுதியளித்துள்ளார்.

**- சிவா இராமசாமி -**

( rh i )

# சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தில்

## ஓர் அகதிப் பெண்ணின் சோகக்கதை



எங்கெங்கும் அந்நியமாக்கப் பட்டவர்கள்' என்ற தலைப்பில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு குடிபெயர்ந்த மக்கள் மத்தியில் 1982ஆம் ஆண்டு ஓர் ஆய்வு எழுதப்பட்டது. கொடைக்கானல், மதுரை மாவட்டத்தில் 'சிறாக்' வெளியீடாக இலங்கை மலையக எழுத்தாளர் சி.பன்னீர்செல்வத்தின் கூட்டுமுயற்சியில் இந்த ஆய்வுநூல் எழுதப்பட்டது. சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தில் மலையகத் தமிழர்கள் பங்கு பிரிக்கப்பட்டு, புனர்வாழ்வு மூலம் தாயகம் திரும்புவோர் என்ற நாமத்தில் இந்திய நாட்டுக்கு சென்று துயரமடைந்த மக்கள் வரலாற்றில் ஒரு சிறு குறிப்பை நமது சமூக சிந்தனையாளர்களுக்கும், தொழிற்சங்க அரசியல்வாதிகளுக்கும் அறியத் தருகின்றோம்.

எங்கள் பூர்வீகம் புதுக்கோட்டை மாவட்டம் மறமடக்கி கிராமம். என் பெயர் மீனாம்பாள். கணவர் பெயர் பழனிவேல். 04 தலைமுறைக்கு முந்தின பாட்டன், பாட்டிகள் இலங்கைக்கு பிழைக்கப் போனார்கள்.

இலங்கை ஊவா மாகாணம், இந்துகுல எஸ்டேட்டில் 09.10.1938இல் நான் பிறந்தேன். பிறந்த பின் பெற்றோர் தனியார் எஸ்டேட்டுக்குப் போனார்கள். அங்கு கூலி ரூபா 1.25 போதாமல் புறம்போக்கு நிலத்தில் விவசாயம் செய்து ஜீவித்தார்கள். பெற்றோருக்கு நான் ஒரே குழந்தை. ஐந்தாம் வகுப்புவரை படிக்க வைத்தார்கள். 14 வயதில் கல்யாணம் முடித்து பதுளை, தெல்பத்த எஸ்டேட்டுக்குப் போனேன். பெற்றோருக்கு உழைக்க முடியாமல் போனதால் என் வீட்டில் வைத்துப் பாதுகாத்தேன். 1965இல் தந்தையும், 1967இல் தாயும் இறந்தனர். நான் எஸ்டேட்டில் நர்ஸாகப் பணிபுரிந்தேன். தினக்கூலி ரூபா 2.48. கணவன் பியூனாகப் பணிபுரிந்தார். கூலி 3 ரூபா. எட்டுக் குழந்தைகள். கணவர், நான் மாமனார் குழந்தைகள். மொத்தம் 11 பேரும் 20.03.1973இல் தாயகம் திரும்பினோம். கண்டி உயர்ஸ்தானிகராலயத்தில் சிவகங்கை, ஒப்புதூர் கொலனியில் விவசாயத்துக்கு சிபாரிசு செய்தார்கள். மண்டபம் முகாம் வந்ததும் அதிகாரி, "ஒப்புதூர் கொலனியில் ஸ்கீம் இல்லை. 50 குடும்பங்களை இன்றுதான் அனுப்பிவைத்திருக்கிறோம். இந்த வருடம் முடிந்தால்தான் அங்கு வீடு கட்டித் தருவார்கள். அதுவரை முகாமில் இருங்கள்" - என்றார்.

முகாமைப் பற்றி எதுவுமறியாத நாங்கள் முகாமுக்கு வந்தோம். கையிலிருந்த பணம் 40 ரூபாதான். கொண்டுவந்த பணம் 2,800 ரூபா புதுக்கோட்டை வங்கியில் 30 நாள் கழித்துத்தான் கிடைக்கும் என்றார்கள். 40 ரூபா இரண்டு நாட்களில் முடிந்துவிட்டது. முகாமில் சாப்பாட்டுக்குக் கொடுத்த 75 ரூபா ஒரு வாரத்தில் முடிந்துவிட்டது. வறுமை தாங்காமல் 50 குடும்பங்கள் தாலுகா ஆபீஸுக்கு சென்று "எங்களுக்கு வேறு ஏதாவது வழிசெய்து அனுப்பிவிடுங்கள்" என்று கெஞ்சினோம். தாசில்தார் "நாளை வா" என்று நாட்களைக் கடத்திவந்தார். தேங்காயெண்ணெய், சோப்பு, குடைகள், கடிகாரம் போன்ற பொருட்களை விற்றும், மீதி நாட்களில் கடற்கரையில் கொட்டிக் கழிக்கப்பட்ட மீன்களை சாப்பிட்டும் காலம் கடத்தினோம். 30 நாட்கள் கழிந்தன. ஒரு முடிவும் இல்லை. ஏற்கனவே வந்து ஒரு வருடமாக முகாமில் தங்கியிருந்த நல்லுசாமி என்ற தரகரிடம் சிக்கிவிட்டோம். அவர் "முக்கியமான இடங்களுக்கு மறுவாழ்வுக்காக மனுக்கள் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நேரடியாகப் போகவேண்டும்" என்றார்.

கையில் கால் காசு கூட இல்லை. அந்த நபரும், என் கணவரும் புதுக்கோட்டை வங்கிக்குப் போய் 800 ரூபா எடுத்துவந்து மனுக்கள் கொடுத்தார்கள். திருச்சி, மதுரை, இராமநாதபுரம், ஆலங்குடி முதலிய இடங்களுக்குப் போய் கலெக்டர்களைப் பார்த்தார்கள். பத்தே நாட்களில் 700 ரூபா முடிந்துவிட்டது. 50 குடும்பங்களும் முகாம் அலுவலகம் முன்பு போராடினோம்.

அதன்பிறகு புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளத்தில் 1974ஆம் ஆண்டில் கொலனி அமைப்பாளர்கள் "அங்கு போங்கள்" என்று குடும்ப அட்டையில் எழுதினார்கள். "ஒரு வருடம்வரை நாங்கள் என்ன செய்வது?" என்று கேட்டோம். "ஆலங்குடி, கல்லுக்காரன்பட்டி என்ற இடத்தில் புறம்போக்கு நிலம் உள்ளது. குடிசை போட்டுக்கொள்ளுங்கள். பக்கத்தில் வேலை கிடைக்கும். ஒரு வருடம் முடிந்ததும் திருச்சி கலெக்டர் குடும்ப கார்டில் உள்ளபடி நிலம் தருவார்கள்" என்று சொல்லி ஆலங்குடி தாசில்தாருக்குக் கடிதம் கொடுத்தார்கள். 45 நாட்கள் கழிந்து குடும்பத்தோடு ஆலங்குடி வந்து தாசில்தாரைப் பார்த்தபோது "இங்கு புறம்போக்கு நிலம் இல்லை. ஊருக்குச் சென்று உறவினர்கள் வீட்டிலாவது, வாடகை வீட்டிலாவது போய் இருங்கள்" என்று அனுப்பிவிட்டார்.

**மீனாம்பாள் என்கிற இந்த அகதி தனது கதையைத் தானே எழுதியுள்ளார். சில திருத்தங்கள் மட்டும் புத்தக ஆய்வுக் குழுவால் செய்யப்பட்டுள்ளன. காலம் கடந்த கதையானாலும் நமது கசந்த வரலாறுகளை மீட்டிப் பார்ப்பது புதிய எழுச்சிக்குப் புடம் போடும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இதுபோன்ற அகதிகளின் துயர் கதைகள் பல நாடுகளில் ஓய்வில்லாமல் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன என்பதுதான் உண்மையாகும்.**

மாமனாரின் சொந்த ஊருக்குப் போனோம். ஊரிலுள்ள பங்காளிகள் எங்களைப் பார்த்ததும் பதுங்கினார்கள். நிலத்தைப் பற்றி விசாரித்தோம். "நிலமாவது, கத்தரிக்காயாவது. முப்பாட்டன் விற்றுவிட்டு கண்டி பக்கம் போய்விட்டான். கொஞ்சம் இருந்தாலும் கணக்கன் மணியக்காரர்களைக் கூட்டிவந்து பார்க்கணும். 25 ரூபா பணம் கட்டணும் . வரப்புக்கும் தனியே 100 ரூபா கட்டணும்" என்றார்கள். எல்லாம் செய்து பார்த்தபோது 16 குழிநிலம் கிடைத்தது. கேணி இல்லை. கேணிக்கு 600 ரூபாவும் மாட்டுக்கு 500 ரூபாவும் செலவிட்டு விவசாயம் செய்து பயிரானபோது மழையில்லாமையால் கேணியில் நீர் வற்றி எல்லாம் பாழாகிவிட்டன. வேலை எங்கும் கிடைக்கவில்லை. மாடுகளை விற்று சாப்பிட்டோம். வியாபாரக் கடனுக்கு மனுச் செய்தோம். பலனில்லை. கணவர் பேராவூரணிக்கு கேணி வெட்டப்போய் நோயோடு திரும்பி வந்துசேர்ந்தார். ஒரு மகன் சேந்தன்குடி மணியக்காரர் சைக்கிள் கம்பெனியில் மாதம் 20 ரூபாவுக்கு கூலி வேலை செய்தான். மற்ற பிள்ளைகளில் மூன்று பேர் ஆளுக்கொரு ஊருக்கு மாடு மேய்க்கப் போனார்கள். 6 பவுண் நகை இருந்தது. அடகு வைத்து சாப்பிட்டோம். பிறகு வெண்கலப் பாத்திரங்கள்.

வறுமையின் காரணத்தினால் மாமனாரும், ஐந்து வயது மகனும் இறந்தனர். தண்ணீர் இறைக்கும் பந்தல், தகரம் இரண்டையும் 50 ரூபாவுக்கு விற்றுவிட்டு என் கணவர் அந்தப் பணத்தில் அரிசி கடத்தல் வேலைக்குப் போனார். கணவரையும், இரண்டு குழந்தைகளையும் ஊரில் விட்டுவிட்டு ஏற்காடு போய் மெய்யப்பா எஸ்டேட்டில் வேலை செய்தோம். கூலி ரூபா 2.40 சதம். 5 மாதங்கள் வரை சோறு என்பதே தெரியாது. அதன்பிறகு வேலை முடிந்து விட்டது. ஊருக்குப் போய் கணவர், குழந்தைகள் எல்லோருமாக வால்பாறை வாட்டர்பால் எஸ்டேட்டுக்கு வந்தோம். கையில் அரைக்காசு கூட இல்லை. அங்குள்ள மக்கள் எங்கள் நிலையை விசாரித்து மிகவும் வருந்தினார்கள். 4 கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் சேர்ந்து எங்களுக்காக பிச்சை எடுத்ததுபோல் கடைகளுக்குச் சென்று கிழங்கு மற்றும் உணவு தானியங்களையும் வாங்கிக் கொடுத்து ஓர் அறையில் தங்கவைத்தார்கள். மறுநாள் கண்டிராக்ட் கட்டட வேலை பேசி அனுப்பினார்கள். அன்று எஸ்டேட் மக்களுக்கு ரேஷன் அரிசி போட்டதனால் வீடு வீடாகத் தொண்டர்கள் சென்று அரிசி வாங்கிக் கொடுத்து உதவினார்கள்.



ஆறு மாதங்களில் எனது கணவரின் இடது கைப்பெருவிரலில் கல் விழுந்து அறுவைசிகிச்சை நடந்தது. 600 ரூபா இன்சூரன்ஸ் பணம் வந்ததும் முதலாளி எங்களை வீட்டை காலி பண்ணி போகச் சொன்னார். தலைவர்கள் "நீங்கள் போக வேண்டாம். முதலாளியிடம் பேசி உங்களுக்கு இங்கே திரும்பவும் வேலை வாங்கித் தருகின்றோம்" என்றார்கள். அதன்படி அங்கே இருந்துகொண்டு அதை சேர்ந்த நாலு டிவிஷன்களில் கட்டட வேலை செய்தோம். அதை அறிந்துகொண்ட முதலாளி எல்லா கண்டிராக்டர்களிடமும் "நீ வேலை கொடுத்தால் உனக்கு கண்டிராக்ட் கொடுக்க மாட்டேன்" என்றதால் கண்டிராக்ட்காரர்கள் பயந்து வேலை கொடுக்க மறுத்துவிட்டார்கள். தலைவரிடம் கேட்டபோது, "நாங்கள் என்ன செய்வது? பொதுவாக சிலோன் ஆட்களை வேலைக்கு நிறுத்த வேண்டாம் என்று முதலாளி சொல்கிறார். நீங்கள் வேறு இடம் பாருங்கள்" என்றார்.

அதன்பிறகு ஒரு தனியார் எஸ்டேட்டில் கோப்பி வேலை ஒரு வருடம் செய்தோம். கோப்பி நட்டு முடிந்ததும் வேலை முடிந்துவிட்டது என்று எங்களைப் போகச் சொன்னார்கள். வால்பாறை டவுனுக்குப் போய் வாடகை வீட்டில் இருந்தபடி வால்பாறை தாசில்தாருக்கு மனு போட்டோம்.

அவர் சிலோன் அகதிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் குடிசை போட்டுக்கொள்ளச் சொன்னார். குடிசை போட்டு 6 ஆவது மாதம் என் கணவர் இறந்துபோனார். நாங்கள் வந்த வருடத்திலேயே கலெக்டருக்கு மனு கொடுத்திருந்தோம். ஆனால், ஒரு வருடத்தில் மனு கொடுக்கவில்லை என்று காரணங்காட்டி எங்கள் பாஸ்போர்ட், குடும்பக் கார்டுகளை வாங்க மறுத்து மனுக்களை நிராகரித்துவிட்டார்கள். மீண்டும் தாசில்தாரிடம் போய் வியாபார லோன் கேட்டதற்கு "நான் என்ன செய்ய? கண்டிக்கு எழுதுங்கள்" என்றார்.

நான் ஒரு சங்கத்தில் சேவகியாக இருந்தும் சங்கம் இக்கடமையை செய்ய முன்வரவில்லை. அந்தச் சங்கத்தினர் எனக்கு எதிராக ஒரு நபரைத் தூண்டிவிட்டு எங்கள் வீட்டு முன் குடிசை போட வைத்தனர். இதனைத் தடுக்கப்போன என் மகனைத் தாக்கி காலால் மிதித்துவிட்டனர். தாலுகா ஆபீஸில் சொல்லியும், பொலிஸில் சொல்லியும் விசாரணை செய்ததோடு முடிவு ஒன்றும் இல்லை.

கள்ளு, சாராயக் கடைகள் ஒரு கிலோ மீற்றருக்குள் 2 உள்ளன. இதன் மத்தியில் என் வீடு உள்ளது. 3 குமரிப்பெண்கள் இருக்கிறார்கள். என் வீட்டிலிருந்து 100 அடி தூரத்தில் பேக்கரி உள்ளது. ரோட்டில் சில பெண்கள் வரும்போது பேக்கரியிலுள்ள பையன்கள் கேலி செய்ததை நான் கண்டித்தேன். அதன் பிறகு எனது பிள்ளைகளை கேலி செய்ய ஆரம்பித்தனர். பொலிஸில் ரிப்போர்ட் செய்தேன். பேக்கரிக்காரர்கள் நள்ளிரவில் வீட்டைத்தட்டி கலாட்டா செய்தனர். பொலிஸ் வந்து ஒருவனை மட்டும் கூட்டிச் சென்றது. மாலையில் அவனிடம் 50 ரூபாவை வாங்கிக்கொண்டு விட்டுவிட்டார்கள்.

இந்த சரித்திரம் எங்கே போய் முடியும் என்று தெரியவில்லை.

எனக்கு பிரசவ சிகிச்சை, தேயிலைத் தொழில், கோப்பித் தொழில், விவசாயம், சித்த வைத்தியம், தொழிலாளர் கல்விப் பயிற்சி, குடும்பநலப் பயிற்சி, தையல் பயிற்சி என்று பல தொழில்கள் தெரியும். வறுமையின் காரணத்தினாலும் வாய்ப்பின்மையாலும் பலன் பெறமுடியவில்லை. என் குழந்தைகள் பற்றி கூறின் ஒரு பெண் மணமாகி கணவன் கவனிப்பின்மையால் விவாகரத்து செய்யப்பட்டுள்ளாள். இன்னொருத்தி திருமணம் முடித்து தேயிலைத் தொழில் செய்கின்றாள். மகன் சி.எம்.சியில் வாட்ச்போய் வேலை செய்கின்றான். ஒரு பெண் தையல் படித்துவிட்டு தினக்கூலியாக வேலைசெய்கிறாள்.

இன்னொருத்தி கால் நொண்டி. ஒரு மகன் 06ஆம் வகுப்பில் பெயில். புத்தகம் வாங்கிக் கொடுக்க முடியாமல் படிப்பை இடையில் நிறுத்திவிட்டான். இப்படி ஒவ்வொரு தொல்லையும் என்னை வாட்டின. இவர்களுக்கு என்னால் என்ன செய்ய முடியும்? இதுதான் என் முன்னால் கேள்வியாக உள்ளது.

**யூ.எல்.ஏ.மஜீட்**
**சாய்ந்தமருது**

# தேசிய சம்பளக் கொள்கையும் தொழிற்சங்கங்களின் எதிர்பார்ப்பும்

அரச ஊழியர்களின் வேதனமானது, அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோஷம் மக்களிடையே எழுந்திருக்கின்றது. அத்துடன் வாழ்க்கைச் செலவின் சடுதியான அதிகரிப்பினால் தொழிற்சங்கங்கள் யாவும், இந்த சம்பள அதிகரிப்பில் பாரிய கவனத்தைச் செலுத்தி வருகின்றன. கடந்த 2006ஆம் ஆண்டுக்கு முன்னர் உள்ள காலப்பகுதியில் இந்த வேதன அதிகரிப்பானது குறித்த அமைச்சருடன் கலந்துரையாடி அவர் சம்பள விடயங்களை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கும்போது, அவை அமைச்சரவையின் அனுமதியுடன் வழங்கப்பட்டு வந்தது. இந்த நிலையின் காரணமாக, அரச ஊழியர்களும் தொழிற்சங்கங்களும் துறைசார்ந்த அமைச்சருக்குப் பின்னால் செல்ல வேண்டியது மட்டுமன்றி, ஒரு சாராருக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் பொழுது இன்னொரு சாரார் பணிப்பகிஷ்கரிப்புக்கு அல்லது தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்ல வேண்டிய காலம் இருந்து வந்திருக்கின்றது. இதன் நிமித்தம் கடந்த 2003ஆம் ஆண்டு வருடத்தில் உள்ள 365 நாட்களில் 187 நாட்கள் தொழிற்சங்கங்கள் பணிப்பகிஷ்கரிப்புக்கு சென்றிருந்தன. இதன் காரணமாக அரச சேவையானது முழுமையாக ஸ்தம்பிதம் அடையும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது.

இந்த துரதிர்ஷ்ட நிலையை உணர்ந்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தேசிய சம்பளக் கொள்கையைத் தயாரித்து அதனை அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாருக்கும் பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்கவுக்கும் எழுத்து மூலமாகத் தேசிய சம்பளக் கொள்கையை உருவாக்குமாறு கோரியிருந்தது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தேசிய சம்பளக் கொள்கையை உருவாக்கும் பொருட்டு தேசிய சம்பள ஆளணி ஆணைக் குழுவை உரு வாக்கியிருந்தார். இந்த தேசிய சம்பள ஆளணி ஆணைக்குழுவினர் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பரிந்துரைகளைக் கவனத்தில்கொண்டு தேசிய சம்பளக் கொள்கையை உருவாக்கியிருந்தது. தேசிய சம்பளக் கொள்கையின் உருவாக்கத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினுடைய பிரதான பங்கினை யாரும் மறுத்துவிட முடியாது.

இத்தேசிய சம்பளக் கொள்கையின் பிரகாரம், அரச துறையிலேயே இருக்கின்ற அரச சேவைகள் மற்றும் அரச ஊழியர்களின் வகைகளைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கான சம்பளப் படிமுறை தயாரிக்கப்படுகின்றது. இந்த தேசிய சம்பளக் கொள்கையின் பிரகாரம் சம்பளத் திரட்டு விகிதம் உருவாக்கப்பட்டு இதன் பிரகாரம் 1க்கு 4.25க்கு உட்பட்ட வகையில் அரச ஊழியர்களின் வகைக்கு ஏற்ப அவர்களின் அடிப்படை சம்பளம் கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

இதிலே ஒரு அமைச்சிலே பணிபுரிகின்ற கனிஷ்ட ஊழியரின் சம்பளத்தின் 4.25 மடங்கு சம்பளத்தினை அந்த அமைச்சிலே உயர் அதிகாரியாகப் பணிபுரிகின்ற அமைச்சின் செயலாளர் பெறுவார். மற்றைய வகைகளைச் சேர்ந்த ஊழியர்கள் இந்த விகிதத்துக்கு உட்பட்ட வகையில் அடிப்படைச் சம்பளமானது கணிக்கப்பட்டு வருகின்றது. இந்த தேசிய சம்பளக் கொள்கையின் மூலம் ஒருவரது அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்படும் பொழுது சம்பளத் திரட்டு விகிதமானது 1க்கு 4.25 என்ற வீதத்தில் பேணப்பட வேண்டியது அவசியமாகும். இல்லாவிடின் அது தேசிய சம்பளக்கொள்கையை பாதிக்கும் வகையில் அமைந்து விடும். 2006/06 சுற்றறிக்கையின் பிரகாரம், சம்பளப் பிரச்சினை தீர்க்கப்பட்டதுடன், நாட்டிலே தொழிற்சங்கங்கள் சம்பளப் பிரச்சினையை கோசமாகக் கொண்டு தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்வது வெகுவாக குறைவடைந்திருக்கின்றது. இதன் காரணமாகவே 2005ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு உருவான அரசாங்கமானது, மிகவும் ஸ்திரமான நிலையில் நாட்டை கட்டியெழுப்பி அதேபோன்று ஸ்திரமான நிலையில் நாட்டின் பொருளாதாரத்தைக் கொண்டு சென்று நாட்டிலே 30 வருட காலமாக நிலவிய யுத்தத்தையும் வெற்றிபெறக்கூடியதாக இருந்தது.

ஆனால், இதன் பிரகாரம் ஒரு அமைச்சில் இருக்கின்ற தொழிற்சங்கங்கள், சம்பள அதிகரிப்பு கோரிக்கை மற்றும் பரிந்துரைகளை முன்வைக்கும் பொழுது, துறை சார்ந்த அமைச்சர் இந்த சம்பள விடயங்கள் சம்பந்தமாக அவற்றின் பரிந்துரைகளை உள்ளடக்கி தேசிய சம்பள ஆளணி ஆணைக்குழுவுக்கு இந்த பரிந்துரைகள் யாவும் அனுப்பி வைக்கப்படும். தேசிய சம்பள ஆளணி ஆணைக்குழுவிலே ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பிற்பாடு, இந்த பரிந்துரைகள் யாவும் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பி, இந்த சம்பள அதிகரிப்பானது ஒருவகையினருக்கு அதிகரிக்கப்படும்போது, அரசத்துறையில் இருக்கின்ற மற்றைய ஊழியர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் குறித்த அந்த அரச ஊழியர்களின் வகை மேலே மற்றும் கீழே சமாந்தரமாக உள்ள அரச ஊழியர்களை பாதிக்காத வகையில் எவ்வாறு வழங்க முடியும், பகுப்பாய்வு செய்த பின்னர் அந்த சம்பளத்தை வழங்கும் இயலுமை நிதி அமைச்சருக்கு இருக்கின்றதா? என்பதை ஆராய்வதற்கு நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பிற்பாடு, இதற்குரிய அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டு அந்த சம்பள அதிகரிப்பானது வழங்கப்படுகிறது. இந்த செயற்பாடானது ஒரு நியமமான செயற்பாடாகவே இடம்பெற்று வருகின்றது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் சகல அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை 10ஆயிரம் ரூபாவால் அதிகரிப்பதாக அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதி அளித்திருந்தது. அதன் பிற்பாடும் அவற்றை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்திருந்தது. இதன்போது மற்றைய தொழிற்சங்கங்கள் யாவும் இந்த சம்பள அதிகரிப்பை வரவேற்றதுடன், இந்த சம்பள அதிகரிப்பானது சகல வகையினருக்கும் ஒரே விதத்தில் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பைக் கொண்டு கருத்துகளை வெளியிட்டிருந்தன. ஆனால், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இந்த அதிகரிப்பானது தேசிய சம்பளக் கொள்கையைப் பாதிக்காத வகையில் எடுக்கப்பட வேண்டும், இந்த சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தது. அத்தோடு, இந்த சம்பள அதிகரிப்பு சமமாக சகல ஊழியர்களுக்கும் 10ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படும் பொழுது, இது தேசிய சம்பள திரட்டு விகிதத்தினை 1க்கு 2.25 ஆகக் குறைத்துவிடும். அத்தோடு தேசிய சம்பளக் கொள்கை பாதிக்கப்படும் என்ற காரணத்தையும் பிரபல்யமாக வெளியிட்டு வந்திருந்தது. இந்த ஆபத்தான நிலையை அப்போதைய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க விளங்கிக் கொள்ளாதபொழுதும், அப்பொழுது பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சராக இருந்த ரஞ்சித் மத்தும பண்டார விளங்கிக் கொண்டார். இதன் காரணமாக, 2015ஆம் ஆண்டு அரச ஊழியர்கள் பெற்ற அடிப்படைச் சம்பளமானது 2020ஆம் ஆண்டு வரையில் இரண்டு மடங்காக அதிகரித்தது. அந்த நிலையிலும் கூட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தேசிய சம்பளக் கொள்கையைப் பாதுகாப்பதன் அவசியத்தை நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தி இருந்தது.

இந்த தேசிய சம்பளக் கொள்கை பாதுகாக்கப்பட்டதன் விளைவாக, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மாத்திரமின்றி வைத்தியர்கள் மாத்திரமின்றி நாட்டிலேயே இருக்கின்ற சகல ஊழியர்களுக்குமான அடிப்படை விகிதமானது 02 மடங்காக அதிகரிக்கப்படக் கூடியதாக இருந்திருக்கின்றது. ஆனால், துரதிர்ஷ்டவசமாகத் தேசியக் கொள்கையைப் பாதுகாப்பதற்கும் தேசியக் கொள்கை காரணமாகவே நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் என்ற கோஷத்துடனும் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம், தேசியக் கொள்கையை மீறும் விதத்தில் செயற்படுகின்றமை அரச சேவையில் உள்ள பல்வேறுபட்ட வகையினரைக் கவலையில் ஆழ்த்தியிருக்கிறது.

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை மட்டுமன்றி தாதியர் சம்பளப் பிரச்சினை, அதேபோன்று சகல அரச ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை யாவும் தீர்க்கப்பட வேண்டும். ஆனால், இவை யாவும் மேற்குறிப்பிடப்பட்ட நீதியான படிமுறையின் மூலம் தேசிய சம்பளக் கொள்கையைப் பாதுகாக்கும் விதத்தில் செயல்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு செயல்படுத்தப்படாவிட்டால், இது அரச சேவையை மேலும் வீழ்ச்சியடையும் நிலைக்குத் தள்ளிவிடுவதோடு, நாட்டில் இருக்கும் மக்களுக்கு அரசதுறை மீது இருக்கும் நம்பிக்கையையும் இல்லாமல் செய்துவிடும்.

ஆகவே தேசிய சம்பளக் கொள்கையைப் பாதுகாப்பதன் மூலம், தேசிய சம்பளக் கொள்கையின் ஊடாக அரச ஊழியர்களின் வேதனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இவ்வாறு தீர்க்கப்படும் பொழுதுதான் நாட்டிலே ஒரு சீரான, வினைத்திறனான, தொடர்ச்சியான அரச சேவையை முன்னெடுத்துச் செல்ல முடியும். அண்மையில் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல, ஒன்றிணைந்த அரச சேவை தாதியர் சங்கத்தின் தலைவர் முருத்துவட்டுவே ஆனந்த தேரருக்குக் கடிதம் மூலம் சம்பள அதிகரிப்பினை வழங்குவதாக உறுதி அளித்திருந்தார். இவ்வாறு மேற்குறிப்பிடப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றாது தேசியக் கொள்கைகளை மீறி, அமைச்சரவைப் பத்திரம் ஊடாக சம்பள அதிகரிப்பானது வழங்கப்படுதல், 2003ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலையை உருவாக்கிவிடும். இதனால் இந்த பிழையான முடிவு அரச சேவையிலே பாரிய பிரச்சினையை ஏற்படுத்துமே அன்றி, இது சம்பளப் பிரச்சினைக்கு ஓர் தீர்வாக அமையாது.

இந்த விடயங்கள் சம்பந்தமாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெலவுக்கு, தேசிய சம்பளம் கொள்கையைப் பாதுகாப்பதன் அவசியமும், அதேபோன்று இந்த சம்பளக் கொள்கையை மீறும் இடத்தில் எவ்வாறான பாதிப்புகள் ஏற்படும் என்பதையும் தெளிவான கடிதம் மூலம் அறிவித்திருந்தது.

அத்தோடு, கடந்த ஜனவரி மாதம் 4ஆம் திகதி பிரதமருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் கூட, இந்த தேசியக் கொள்கை பாதுகாக்கப்பட வேண்டும், தேசிய சம்பளக் கொள்கையின் ஊடாகவே அரச ஊழியர்களுடைய வேதனங்கள் யாவும் கணக்கிடப்பட்டு அவை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மிகவும் ஆணித்தரமாகத் தெரிவித்திருந்தது.

ஆகவே தேசிய சம்பளக் கொள்கையை சரியான விதத்தில் பாதுகாத்து, அவற்றின் ஊடாக நாங்கள் இந்த சம்பளப் பிரச்சினையைத் தீர்க்கும் பொழுதுதான், இந்த நாட்டிலே அரச ஊழியர்களுக்கு இடையே இருக்கின்ற பிரச்சினை, அதேபோன்று இந்த சம்பளக் கோரிக்கையை முன்வைத்து தொழிற்சங்கங்கள் நாளாந்தம் பணிப்பகிஷ்கரிப்புக்கு செல்லும் நிலையையும் தடுக்க முடியும்.

அத்தோடு நாட்டிலே ஒரு ஸ்திரமான வினைத்திறனான நம்பிக்கைக்குரிய ஒரு துறையை நாங்கள் விருத்தி செய்ய முடியும் என்பதையும் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். ஆகவே, தேசிய சம்பளக் கொள்கையை பாதுகாப்பதற்காக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சகல வழிகளிலும் போராடும்.

நன்றி
அரச மருத்துவ
அதிகாரிகள் சங்கம்



வைத்தியர். வாசன் இரத்தினசிங்கம்.
மத்திய குழு மற்றும் ஊடககுழு உறுப்பினர்,
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

**தேசிய சம்பளக் கொள்கையின் பிரகாரம், அரச துறையில் இருக்கின்ற அரச சேவைகள் மற்றும் அரச ஊழியர்களின் வகைகளைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கான சம்பள படிமுறை தயாரிக் கப்படுகின்றது**

**தேசிய சம்பளக் கொள்கையை சரியான விதத்தில் பாதுகாத்து, அவற்றின் ஊடாக நாங்கள் இந்த சம்பளப் பிரச்சினையைத் தீர்க்கும் பொழுதுதான் இந்த நாட்டிலே அரச ஊழியர்களுக்கு இடையே இருக்கின்ற பிரச்சினை, அதேபோன்று இந்த சம்பளக் கோரிக்கையை முன்வைத்து தொழிற்சங்கங்கள் நாளாந்தம் பணிப்பகிஷ்கரிப்புக்கு செல்லும் நிலையையும் தடுக்க முடியும்**



வைத்தியர். செனால் பெர்னாண்டோ
செயலாளர்,அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

**தேசிய சம்பளக் கொள்கையின் மூலம் ஒருவரது அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்படும்பொழுது சம்பளத் திரட்டு விகிதமானது 1க்கு 4.25 என்ற வீதத்தில் பேணப்பட வேண்டியது அவசியமாகும். இல்லாவிடின், அது தேசிய சம்பளக்கொள்கையை பாதிக்கும் வகையில் அமைந்துவிடும்**

# மோடியை எதிர்க்க கைகோர்க்கும் முதல்வர்கள்







இந்தியப் பிரதமர் மோடிக்கு எதிராக செயற்படுவதற்கு பாரதீய ஜனதாக் கட்சி அல்லாத முதல்வர்கள் இணைந்து செயற்பட முயற்சி செய்கின்றனர். மத்திய அரசின் கைப்பாவையாகச் செயற்படும் முதல்வர்கள் கொடுக்கும் அரசியல் நெருக்கடியால் மக்களுக்கு உரிய திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலை உள்ளது

மம்தா இதற்காக முயற்சிசெய்து கொண்டிருக்கிறார். தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர ராவும் முயற்சி செய்கிறார். இந்திய நாடாளுமன்றத்துக்கு 2024இல் தேர்தல் நடக்கவிருக்கிறது. தேர்தலுக்கு இன்னும் இரண்டு வருடங்கள் இருந்தாலும், பாரதீய ஜனதாவுக்கு எதிராக தேசிய அளவில் புதிய கூட்டணியை உருவாக்க இப்போதே அதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் தெலுங்கானா முதல்வர் சந்திரசேகரராவ்.

இதே முயற்சியில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியும் இருக்கும் நிலையில், அவரை சமீபத்தில் தொடர்புகொண்டு, "மத்திய பா.ஜ.க. அரசின் நடவடிக்கைகளுக்கும் அவர்களின் அரசியலுக்கும் எதிராக நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு நாங்கள் ஒத்துழைப்பு தருவோம்" என சொல்லியுள்ளார் சந்திரசேகரராவ்.

கடந்த சில நாட்களாக மத்திய அரசுக்கும், பிரதமர் மோடிக்கும் எதிராக இந்த மூவரும் கடுமையான விமர்சனங்களை வைத்து வருகிறார்கள். மற்ற சில மாநில முதல்வர்கள் மத்திய அரசை எதிர்த்து வந்தாலும் இவர்களின் நிலைப்பாடுகள் தேசிய அளவில் கவனம் பெற்றுள்ளன.

நாடாளுமன்றத் தேர்தல் தொடங்கி ஐந்து மாநில சட்டசபைத் தேர்தல்வரை தேசிய அரசியல் களத்தில் இவர்கள் மூவரின் கருத்துகள் முக்கியத்துவம் பெற்று வருகிறது. இதனால் தேசிய அளவில் மாநில கட்சியைச் சேர்ந்த முதல்வர்களின் புதிய அணி ஒன்று உருவாகிறதோ என்ற கேள்வி எழுந்துள்ளது. கடந்த சில நாட்களாக மத்திய அரசுக்கும் பிரதமர் மோடிக்கும் எதிராக தெலுங்கானா முதல்வர் கே.சி.ஆர். கடுமையாக பேசி வருகிறார். சமீபத்தில் பட்ஜெட் குறித்து பேசிய சந்திரசேகரராவ், "பிரதமர் மோடிக்கு தொலைநோக்கு பார்வையே இல்லை. பா.ஜ.கவிற்கு வெட்கம் இல்லை. அந்த கட்சியை வங்கக்கடலில் வீசி எறிந்தால்தான் நாடு நன்றாக இருக்கும். மத்திய அரசு நடந்து கொள்ளும் விதத்தைப் பார்க்கவே கஷ்டமாக இருக்கிறது. பிரதமர் மோடி குறுகிய மனப்பான்மை கொண்டிருக்கிறார். பிரதமர் மோடிக்கு விதவிதமாக தொப்பி போடவே நேரம் சரியாக இருக்கிறது. பஞ்சாப் சென்றால் டர்பன், தமிழ்நாடு வந்தால் லுங்கி என்று தோற்றத்தை மாற்றுகிறார். ஆனால், மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. மக்களை பா.ஜ.க. ஏமாற்றிவிட்டது. மத்திய பட்ஜெட் என்பதே கோல்மால் பட்ஜெட்தான். நாட்டில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்காக நாடு முழுக்க பல இலட்சம் மக்களை நான் சந்தித்துள்ளேன். விரைவில் நான் என்னுடைய முன்னேற்ற திட்டங்களை அறிவிப்பேன்" என்று அவர் காட்டமாக குறிப்பிட்டார்.

இந்நிலையில், சந்திரசேகரராவை தொடர்புகொண்டு அவரது முயற்சிகளுக்கு வாழ்த்து தெரிவித்திருக்கிறார் முன்னாள் பிரதமரும் மதச்சார்பற்ற ஜனதா தளத்தின் தலைவரும் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவருமான தேவகௌடா. பாரதீய ஜனதாவுக்கு எதிரான மாநில முதல்வர்கள் அனைவரிடமும் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தையை நடத்தி முடித்திருக்கும் சந்திரசேகரராவ், புதிய கூட்டணியை உருவாக்கும் முயற்சியின் அடுத்தகட்டமாக தேசிய தலைவர்களையும் மாநில முதல்வர்களையும் சந்தித்து விவாதிக்கவிருக்கிறார்.

முதல் சந்திப்பாக, மகாராஷ்ட்ரா முதல்வரும் சிவசேனா கட்சியின் தலைவருமான உத்தவ் தாக்கரேவை எதிர்வரும் 20ஆம் திகதி சந்தித்து ஆலோசனை நடத்துகிறார் சந்திரசேகரராவ். இதற்கு முன்னதாக, சந்திரசேகரராவை தொடர்புகொண்டு பேசிய உத்தவ்தாக்கரே, "தேசத்தின் கூட்டாச்சி தத்துவத்தைப் பாதுகாக்க நீங்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம். நீங்கள் மும்பைக்கு வாருங்கள்; விவாதிப்போம்" என்று அழைப்பு விடுத்துள்ளார். இதனையடுத்தே இரண்டு மாநில முதல்வர்களின் முதல் சந்திப்பு மும்பையில் நடக்கிறது.

முதல்வர் ஸ்டாலின் ஆட்சிக்கு வந்ததிலிருந்து மத்திய அரசுக்கு எதிரான அரசியலை நடத்தி வருகிறார். ஒன்றியம் என்ற வார்த்தைப் பிரயோகம் தொடங்கி நீட் எதிர்ப்பு மசோதா வரை பல இடங்களை முதல்வர் ஸ்டாலின் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். அதோடு அனைத்து இந்திய சமூக நீதி கூட்டமைப்பு மூலம் சமூக நீதி அரசியல் செய்யும் கட்சிகளை ஒருங்கிணைக்க முதல்வர் ஸ்டாலின் முயன்று வருகிறார். தேசிய கட்சிகள் உட்பட 37 கட்சிகளுக்கு இந்தக் கடிதம் சென்றாலும், வலுவான மாநில கட்சிகளுக்கு விடப்பட்ட அழைப்பாகவே இது பார்க்கப்படுகிறது. ஆளுநருடன் மோதல், தேசிய அளவில் முதல்வர் ஸ்டாலின் எதிர்க்கட்சிகளை இதன்மூலம் ஒருங்கிணைக்கிறாரோ என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

இன்னொரு பக்கம், தமிழ்நாடு ஆளுநருக்கு எதிராகவும் முதல்வர் ஸ்டாலின் நிலைப்பாடு எடுத்துவருகிறார். சமீபத்திய முரசொலி கட்டுரை தொடங்கி மதவாத அரசியல் செய்யும் பா.ஜ.கவை அம்பலப்படுத்துவோம் என்று முதல்வர் ஸ்டாலின் தனது கடிதத்தில் சொன்னதுவரை பல இடங்களில் ஸ்டாலின் நேரடியாக பா.ஜ.கவிற்கும், மோடிக்கும் எதிராக நிலைப்பாடு எடுத்து வருகிறார்

இந்தியப் பிரதமராவதற்கு மம்தா முயற்சி செய்துவரும் வேளையில் சந்திரசேகரராவும் பிரதமர் பதவியை நோக்கி காய்நகர்த்துகிறார். ஒரு காலத்தில் மோடியையும் அவரது ஆட்சியையும் புகழ்ந்து தள்ளிய சந்திரசேகரராவ் இன்று திசை மாறி பயணிக்கிறார். பல மாநிலங்களின் அரசியல் மோடி, அமித் ஷா அலையில் மூழ்கியதால் சந்திரசேகரராவ் விழித்துக்கொண்டார்.

தேசிய அளவில் மத்திய அரசுக்கும், பிரதமர் மோடிக்கும் எதிராக பல்வேறு மாநில முதல்வர்கள் கொதித்து எழத் தொடங்கியுள்ளனர். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின், தெலுங்கானா முதல்வர் கே. சந்திரசேகர ராவ், மேற்கு வங்க மம்தா பானர்ஜி ஆகியோர் முக்கிய அரசியல் சக்திகளாக இருப்பார்கள் என்று கணிக்கப்படுகின்றது.

இன்னொரு பக்கம் மம்தா பானர்ஜி தேசிய அளவில் எதிர்கட்சிகளை ஒன்று திரட்டும் பணிகளில் இறங்கியுள்ளார். உத்தரப்பிரதேசத்தில் அகிலேஷுக்கு ஆதரவு, கோவாவில் போட்டி என்று திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை தேசிய கட்சியாக மாற்றும் வேலைகளை தீவிரமாக செய்து வருகிறார். அதிலும் சமீபத்தில் மேற்கு வங்க ஆளுநர் ஜெகதீப்பை ட்விட்டரில் பிளாக் செய்யும் அளவிற்கு மம்தா பானர்ஜி தீவிரமாக பா.ஜ.க. எதிர்ப்பு நிலைப்பாட்டை கடைப்பிடித்து வருகிறார் மம்தா.

அதிலும் சமீபத்தில் மம்தா பானர்ஜி அளித்த பேட்டியில், உத்தரப்பிரதேச சட்டசபைத் தேர்தலில் இப்போதே அகிலேஷ் யாதவை ஆதரிக்கிறேன். எதிர்வரும் லோக்சபா தேர்தலில் திரிணாமூல் காங்கிரஸ் கட்சி உத்தரப்பிரதேசத்தில் போட்டியிடும் என்று மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார். தேசிய அரசியலில் குதிக்க வசதியாக மம்தா பானர்ஜி இந்த முடிவை எடுத்திருக்கிறார். இவரின் இந்த அறிவிப்பு தேசிய அளவில் கவனம் பெற்றுள்ளது

ஆம் ஆத்மியின் அரவிந்த் கெஜ்ரிவால், ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக், ஆந்திர முதல்வர் ஜெகன் உள்ளிட்ட சிலர் பா.ஜ.க. எதிர்ப்பு நிலைப்பாட்டை கடைப்பிடித்தாலும் இவர்கள் அந்தளவிற்கு கடுமையான நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காங்கிரஸை கடுமையாகச் சாடும் மம்தாவும், காங்கிரஸுடன் ஒன்றாகப் பயணிக்கும் ஸ்டாலினும் இணைந்தால் காங்கிரஸின் நிலைப்பாடு என்ன எனும் கேள்விடும் எழுந்துள்ளது.

பாரதீய ஜனதாவுக்கு எதிராக கைகோர்க்க முயலும் தலைவர்கள் அனைவரும் மாநில மட்டத்திலேயே செல்வாக்குள்ளவர்கள். தேசிய கட்சியான காங்கிரஸையும் இணைத்தால்தான் பாரதீய ஜனதாவை வீழ்த்தலாம்.

– அபி –

## 'வெடி'மணியம்

**தொடர்ச்சி..**

*சொல்வது உண்மையா? பிழையா? எண்டு புரிந்துகொள்ளமுடியும்.*

*அரசியல் சுயலாபத்துக்காய் ஆரோ ஏத்திவிட்டு கூத்துப்பாக்கும் ஆளாக "வெடிமணியத்தாரை" குறிப்பிட்டது மிகத்தவறானது என்பது;*

*வெடிமணியத்தாரை தொடர்ச்சியாக வாசிக்கும் சனத்துக்கு தெரியும்.*

*மேலும்; கட்சிபேதம் இன்றி அரசியல் பக்கச்சார்பு இன்றி உள்ளதை உள்ளபடி சாதாரண சனத்தின் பார்வையில் இருந்து....*

*பேச்சுவழக்கில் எழுதப்படும் வெடிமணியத்தாரின் அரசியல் பத்தியில் "இலக்கணப்பிழை" பிடிப்பது தவறு. நுணுக்கமா சொற்பிழை, பொருட்பிழைபிடிப்பதும் தவறு.*

*ஊரில நாலு நல்ல மனிசரைக்கூப்பிட்டு அவைக்கு முன்னால "வெடிமணியத்தார் எழுதியதையும்" அதற்கு அமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தையும் பக்கம் பக்கமா வைச்சு ஒருக்கால் "சரி பிழைகளை" கேட்டால் உண்மை விளங்கும்.*

*அமைச்சரின் பதில் கடிதத்தில் குறிப்பிட்ட ஒரு சில விடயங்களை வெடிமணியத்தார் "கருத்தில்" கொள்ளும் அதேநேரம்;*

*வெடிமணியத்தார் "வைச்ச விமர்சனத்தில்" சொன்ன ஆழமான விடயங்களை அமைச்சர் டக்ளஸ் கருத்தில் கொண்டு செயற்படவேண்டும்.*

*பத்திரிகை தர்மத்தின் படி அமைச்சர் டக்ளஸ் எழுதிய அத்தனையும் "வெட்டாமல் ஒட்டாமல்" முதற்பக்கத்தில் பிரசுரித்த தமிழன் பத்திரிகையின் "நேர்மையை";*

*யாரும் தேவையில்லாமல் "சந்தேகப்படவேண்டியதில்லை"!*

*அமைச்சரின் கடிதத்தில் குறிப்பிட்டது போல வெடிமணியத்தார் உருமறைப்புச்செய்து ஒளிஞ்சிருந்து கல்லெறிகின்ற "ரைப்" இல்லை.*

*பத்திரிகையில் "புனைபெயரில்" எழுதுவது என்பது காலகாலமான வழக்கம்.*

*தமிழ் ஊடகப்பரப்பில் அரசியல் கட்டுரைகளை சொந்தப்பெயரில் எழுதி புகழையும் பேரையும் காசையும் சம்பாதிக்காமல்;*

*வெறுமனே "புனைபெயரில்" எழுதவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஊரில தமிழ் ஊடகப்பரப்பில் ஏன் வந்தது எண்டு இப்ப "கிண்ட" விருப்பம் இல்லை.*

*ஆக கால சூழ்நிலைகள் வரும்போது மணியத்தார் தன்ர போட்டோவோட அரசியல் பத்திகளை எழுதுவார்.*

*மேலும்;*

*பேஸ்புக்கில வாற செய்திகளையும், காணொளிகளையும் பார்த்து "அரசியல்" வெடிப்புளுகுகளை அடிச்சுவிடும் அளவுக்கு அரசியல் தெரியாத ஆள் அல்ல வெடிமணியத்தார்.*

*சனத்தோட சனமாக நிண்டு;*
*விசயம் அறிஞ்சவங்களோட பேசி;*
*தீர விசாரித்து;*
*அலசி ஆராய்ஞ்சு;*
*சொந்தப்புத்தியால பகுத்தாய்ஞ்சுதான் மணியத்தார் எழுதுகிறார்.*

*ஆக; அமைச்சர் டக்ளஸ் அவர்களே!*

*உங்கள் மீதான விமர்சனங்களை ஆற அமர இருந்து வாசித்துப்பார்க்கவும்.*

*பழைய ஞாயிறு தமிழன் பேப்பருகளை தூசி தட்டி வாசிக்கவும்.*

*உங்கள் மீது வெடிமணியத்தாருக்கு "தனிப்பட்ட" காழ்ப்புணர்வோ அரசியல் வெறுப்போ கிடையாது.*

*உங்கள் மீது மட்டுமல்ல;*

*ஊரில இருக்கிற எந்த அரசியல்வாதி மீதும் தனிப்பட்ட பகையோ, காழ்ப்புணர்வோ மணியத்தாருக்கு இல்லை.*

*யாரும் "விமர்சனத்துக்கு" அப்பாற்பட்டவர்களும் அல்ல!*

*வெடிமணியத்தாரின் பேச்சுவழக்கும் எழுத்து நடையும் நக்கலும், நளினமும் வேணுமெண்டால்;*

*சாடைமாடையாய் "குத்தக்கூடும்".*

*அதை "குத்தாக" நினைக்காமல் தலையில "குட்டுவதாக" நினைச்சால் கோவம் வராது.*

*வீணாக "பிறசரும்" ஏறாது.*

*மற்ற அரசியல்வாதிகள் போலல்லாது வெடிமணியத்தார் எழுதிய விமர்சனத்துக்கு "மினைக்கெட்டு" பதில் எழுதி அனுப்பிய;*

*அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அக்கறைக்கு மீண்டும் ஒருமுறை நன்றிகள்.*

★★★

*ஒரு ஆட்சி மாற்றத்துக்கான "சதுரங்க" விளையாட்டு ஆரம்பமாகியுள்ளது.*

*மகிந்த ராஜபக்ஷ குடும்பம் ஒரு பக்கமும் மற்ற கட்சிகள் ஒருபக்கமும் விளையாடப்போகும் இந்த "ஆட்டத்தில்" தமிழ்க்கட்சிகளின் வகிபாகம் என்ன என்பதுதான் மில்லியன் டொலர் கேள்வி!*

*இலங்கை விவகாரத்தில் மேற்குலகமும், இந்தியாவும் கூட்டணிசேரும் எண்டு பாத்தால்;*

*ஒரு நிலையில் நிக்காத இந்தியா குறுக்கால போய் சீனாவோட அணைஞ்சாலும் அணைஞ்சிடும்.*

*ஏனெண்டால் தூரத்தில இருக்கிற மேற்குலகோட போறதை விட பக்கத்தில இருக்கிற சீனாவோட அணைவதுதான் இந்தியாவுக்கு பாதுகாப்பு.*

*ஆக; இனிமேல் இந்தியாவும், சீனாவும் சேர்ந்து இலங்கையில் கூட்டாக ஒரு ஆதிக்கத்தை செலுத்தும் ஒப்பந்தத்துக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதுக்கில்லை.*

*அப்படியான ஒரு ராஜதந்திர நகர்வுகள் தான் இப்போது சிறிலங்காவில் நிகழுமாப்போல கிடக்கு.*

*சிறிலங்கா தொடர்பாக திரைமறைவில் சீனாவும், இந்தியாவும் ஒரு ரகசிய ஒப்பந்தம் செய்திருக்கலாம் என்ற பலமான சந்தேகம் எழுகிறது.*

*காரணம் அண்மைக்காலமாக சிறிலங்காவில் ஒரு சில விடயங்களில் சீனாவும், இந்தியாவும் பரஸ்பர விட்டுக்கொடுப்புக்களை செய்வதை அவதானிக்கமுடிகிறது.*

*ஆக;*

*பெரும்பாலும் இந்தியாவும், சீனாவும் இன்னொரு ஆட்சிமாற்றத்தை விரும்பாயினம்.*

*இஞ்சால அமெரிக்காவும், மேற்குலமும் சிலவேளைகளில் ஒரு ஆட்சிமாற்றத்தை நிகழ்த்த திரைமறைவில் திட்டங்களை தீட்டக்கூடும்.*

*இந்த பிக்கல் பிடுங்கல்களுக்குள் தமிழ்த்தரப்பு எங்க நிக்கவேணும் எண்ட மிக முக்கியமான கேள்வி எழும்!*

*தமிழ்த்தரப்பு கொஞ்சம் இந்தியாவோடும், இன்னும் கொஞ்சம் அமெரிக்காவோடும் இன்னும் சிலது மேற்குலகோடும் நிண்டால் அஞ்சு சதத்து பிரயோசனமும் இல்லை!*

*உடைஞ்சு கிடக்கும் தமிழ்த்தரப்புகள் ஒன்றாக பலமாக ஏதோ ஒரு ஒற்றைப்புள்ளியில் நின்றால் மட்டுமே;*

*வெகுவிரைவில் சிறிலங்காவில் நிகழப்போகும் அரசியல் பேரழிவில் இருந்து தமிழ் மக்களை ஓரளவுக்கேனும் காப்பாத்த முடியும்.*

*இந்த நேரத்தில் தமிழ்த்தரப்புகளின் ஒன்றிணைவுக்கு குறுக்கால நிக்கும் எந்த பரதேசியையும் சனம் அடிச்சு துரத்தவேணும்.*

*குறுக்கால நிக்கிறது வாய் கிழிய தமிழ்த்தேசியம் பேசுற ஆக்களாக இருந்தால் அடி மிகவும் "பலமாக" இருக்கவேணும்.*


திகதி 18.02.2022 வியாழக்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4682
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 13,436,350.00
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 1 2 7 2 7 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 45,379,832.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2977
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,477,580.00
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 14 33 62 66
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,371,082.80

கோடி Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1030
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,032,560.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 236,681,010.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து Q
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 03 24 64 76

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 712
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,039,700.00
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 19 28 47 63
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,898,974.40

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0023
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,174,040.00
இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 16 18 40 50
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,578,673.44

வாசனா சம்பத Vasana Sampatha
சீட்டிழுப்பு இலக்கம் : 1696
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,748,700.00
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 04 39 71 92
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,553,270.70

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, ஸ்ரீமத் என்.எம். பெரேரா மாவத்தை, கொழும்பு 08
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416



# தீர்வின்றேல் மீண்டும் போராட்டம்!

**சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் 'தமிழன்' வார இதழுக்கு செவ்வி**

உரையாடல் – நா.தினுஷா

**ஜனாதிபதியோ சுகாதார அமைச்சரோ சுகாதார சேவைப்பிரிவினரின் பிரச்சினையில் தலையிடவில்லை என்பதால் மீண்டும் வேலை நிறுத்தத்துக்குச் செல்ல நேரிடும் என சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் 'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய செவ்வியின்போது தெரிவித்தார்.**

**அவருடனான உடையாடல் வருமாறு,**

**சுகாதார உத்தியோகத்தர்களால் கடந்த சில நாட்களில் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைக்கான முக்கிய காரணம் என்ன?**

சம்பள முரண்பாடே இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. 06/2006 சுற்றிக்கையில் சுகாதார சேவை, இடைநிலை வைத்திய சேவை மற்றும் தாதியர் சேவை உள்ளிட்ட மூன்று வைத்திய உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு பாரிய சம்பள முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீண்ட நாட்களுக்கு முன்னர் இருந்தே வலியுறுத்தியிருந்தோம். அதேபோன்று கொரோனா தொற்று நிலைமையில் போராட்டங்களை முன்னெடுப்பது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் அதனையும் தொழிற்சங்க நடவடிக்கைகளையும் ஒத்தி வைத்திருந்தோம்.

அதேபோன்று, வைத்திய சேவைப் பிரிவினரைபோன்று ஒப்பீட்டளவில் அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் சம்பள முரண்பாடு இருந்தது. கொரோனா நிலைமைக்கு முக்கியத்துவம் கொடுத்து எங்களின் நடவடிக்கைகளை ஒத்திவைத்திந்தோம். இந்நிலையிலேயே ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்பட்டது. அதேபோன்று ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கும் தீர்வு காணவேண்டியது அவசியம். அதேபோன்று ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு மாத்திரம் தீர்வு வழங்குவது சுகாதார சேவையினரை பாதிக்கும் என்பதை வலியுறுத்தியிருந்தோம்.

உயர் கல்வி தகைமையுடன் சுகாதார சேவைக்கு இணையும் சுகாதார அதிகாரிகளை விட உயர் தரக் கல்வித் தகைமையுடன் சுகாதார சேவைப் பிரிவில் இணைபவர்களுக்கு அதிகளவான சம்பளம் வழங்கப்படுகின்றது. இந்தத் தொகை வருடாந்தம் அதிகரிப்பதுடன், கொடுப்பனவு வீதமும் அதிகரித்துள்ளது. எனவே, 20 வருடங்களாகும்போது 20 ஆயிரம் ரூபா வரையில் சம்பள பரஸ்பர வேறுபாடு ஏற்படும். ஆகவே, கல்வி தகைமைக்கமைய இந்த சம்பள பிரச்சினையை முறைப்படுத்த வேண்டும் என்றே நாங்கள் கோருகிறோம்.

**சம்பள முரண்பாட்டுக்கான தீர்வு மாத்திரமா உங்களின் கோரிக்கை?**

சம்பள முரண்பாட்டுக்கு மேலதிகமாக வைத்தியதுறையின் தன்மைக்கு பங்கத்தை ஏற்படுத்தும் வகையிலான நடைமுறைகளை மாற்றியமைப்பது தொடர்பான ஏழு கோரிக்கைகளை முன்வைத்திருந்துள்ளோம்.

எமது நாட்டில் மருத்துவ தலைமைத்துவ சேவை முறையே காணப்படுகின்றது. குறிப்பிட்டவொரு எண்ணிக்கையிலான ஏனைய மருத்துவ நிபுணர்களுக்கு நிர்வாகத்துறைக்கு வர வசதிகள் இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை வினைத்திறனுடன் பெற்றுக்கொடுக்க முடியாமல் போகும்.

சுகாதார சேவைப் பிரிவினரின் பதவி உயர்வு தொடர்பில் எங்களின் கோரிக்கைக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருந்தார். ஆனால், அதற்கான சுற்றிக்கை கடந்த ஆறு மாதங்களாக வெளியிடப்பட்டிருக்கவில்லை. இறுதி கலந்துரையாடலின் பின்னர் இன்னுமொரு கோரிக்கைக்கு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சகல அரச பணியாளர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவுகள் வருடாந்தம் அதிகரிக்கப்படும். சம்பள கொடுப்பனவு அதிகரிப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மேலதிக நேர கொடுப்பனவும் அதிகரிக்கப்படும். ஒருசிலருக்கு 80 ரூபாவும் இன்னுமொரு பிரிவினருக்கு 160 ரூபாவும் வழங்கப்படுகின்றது. இந்தப் பிரச்சினையை நிவர்த்திசெய்யுமாறும் கோரியுள்ளோம். அதேபோன்று, செய்யும் தொழிலுக்கான கொடுப்பனவொன்று வழங்கப்படும். அந்த கொடுப்பனவும் கடந்த 21 வருடங்களாக அதிகரிப்படவில்லை.

அதேபோன்று சுகாதார சேவையை சமத்துவமான சேவையாக மாற்ற வேண்டும். மேற்குறிப்பிட்ட சகல பிரச்சினைகளுக்கு பதிலை பெற்றுக்கொள்ள முடியும் என்றாலும், சேவையை பெற்றுக் கொடுக்கும்போது அதனை மக்கள் முறையாக பெற்றுக்கொள்ள வேண்டுமானால் சுகாதார சேவையை கலாசார அடிப்படையில் நாடுபூராகவும் நிறுவ வேண்டும்.

மருத்துவ பட்டதாரி நிபுணர்களுக்கான சம்பள கொடுப்பனவு முறையொன்றையும் உருவாக்க வேண்டும். இவையும் எங்களின் கோரிக்கைகளிலுள்ள முக்கிய அம்சங்களாகும்.

**சுகாதார சேவையை சமத்துவமயப்படுத்துவதென்பது வெற்றியளிக்குமா?**

சுகாதார சேவைப்பிரிவுக்கு அதிகாரப் பகிர்வு சிறப்பாக இருந்தாலும், அதிகாரங்கள் மகாண சபை, நகர சபை முறையினூடாக பிரிக்கப்பட்டுள்ளதால் மக்களுக்கு சமமாக சுகாதார சேவை கிடைக்கப்பெறாது. அதிகாரங்களை சமமாக பிரித்தாலும் குறித்தவொரு பகுதியிலேயே இந்த அதிகாரம் செயற்படுகின்றது. உதாரணமாக குறிப்பிடுவதானால், கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு கிடைக்கும் சேவைகளைவிட, கொழும்பிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைபெறும் நோயாளர்களுக்கு அதிகளவான சேவை வழங்கப்படுகின்றது. கொழும்பிலுள்ள நோயாளர்களுக்கு கிடைக்கும் சேவைகளுக்கு நிகராண சேவை பதுளை மாவட்டத்திலுள்ளவர்களுக்கு கிடைப்பதில்லை. மத்திய மாகாணத்தை எடுத்துக்கொண்டால் மத்திய மாகாணத்துக்கு உரிமையான வைத்தியசாலை ஒன்றே இருக்கிறது. ஏனைய அனைத்து வைத்தியசாலைகளும் மாகாண சபைக்கு கீழ் இயங்குகின்றது.

**சுகாதார தொழிற்சங்கங்களுக்கு எதிராக அராசாங்கம் அரசியல் சூழ்ச்சி செய்கிறது**

எனவே, மத்திய மாகாண மக்களுக்கு இரு முறைகளில் சுகாதார சேவை வழங்கப்படுகின்றது. அதேபோன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களை எடுத்துக்கொண்டால் மத்திய மாகாணத்துக்கு சொந்தமான வைத்தியசாலைகள் இரண்டே காணப்படுகின்றன. அதேபோன்று ஏனைய பிரதேசங்களுக்கு வசதிகள் இல்லை போன்ற பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவ்வாறான பிரச்சினைகளே இதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது. அதிகாரப்பகிர்வு சிறந்த நடைமுறை என்றாலும் சுகாதார சேவை முறையாக வழங்கப்படாமை மக்களுக்கும் பிரச்சினையை ஏற்படுத்துகிறது. சுகாதார பணியாளர்களுக்கு பிரச்சினை ஏற்படுகின்றது.

**சுகாதார உத்தியோகத்தர்கள் சேவை சங்கத்தினருக்கும் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளில் எவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன?**

உண்மையில் கலந்துரையாடப்படவில்லை என்று கூற வேண்டும். எங்களின் இந்தப் போராட்டத்துக்கான காரணங்களை ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்தே அறிவித்து வருகிறோம். அதற்கமைய, எங்களின் முதலாவது தொழிற்சங்க நடவடிக்கை நவம்பர் மாதம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்னர் ஜனாதிபதி, சுகாதார அமைச்சர் உள்ளிட்ட தரப்பினருக்கு கடிதங்கள் அனுப்பிவைத்துள்ளோம். அவற்றில் எந்தவொரு கடிதத்துக்கும் பதில் கிடைக்கவில்லை.

அதன்பின்னர் மாகாண மட்டத்தில் 16 போராட்டங்களையும், 09 வேலைநிறுத்தப் போராட்டத்தையும் முன்னெடுத்துள்ளோம். அந்த போராட்டங்களுக்கும் பதில் கிடைக்கவில்லை. ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துவிட்டு மறுநாள் சேவைக்கு சென்றதால் அவர்கள் தமது கடமையை முறையாக நிறைவேற்ற தவறிவிட்டனர். அதன்பின்னர் 7ஆம் திகதி தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாக அறிவித்ததும், 8ஆம் திகதி கலந்துரையாடலுக்கு அழைத்தார்கள். அந்த கலந்துரையாடலும் நீதியானதாக அமையவில்லை.

வேலைநிறுத்தப் போராட்டத்தின் ஆவணங்கள் அனைத்தையும் எடுத்துச் சென்று 8ஆம் திகதி எங்களுடன் கலந்துரையாடியதாக நீதிமன்றத்துக்கு அறிவித்து 10ஆம் திகதி தடை உத்தரவை பெற்றுக்கொண்டனர். 12ஆம் திகதி அவசர விதிமுறைகளை வெளியிட்டனர். கடந்த மூன்று மாதங்களாக பேச்சுவார்த்தை முன்னெடுக்கவும் இல்லை. இடம்பெற்ற கடந்துரையாடலும் நீதியானதாக அமையவில்லை.

ஆகவே, எங்களை போராட்டத்துக்கு தூண்டி அவசர சுகாதார விதிமுறைகளை கொண்டுவர அதனை பயன்படுத்திக் கொண்டார்களா என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. சுகாதார அமைச்சர் எங்களுடன் கலந்துரையாடி விடயங்களை வெளியில் வந்து தெரிவிப்பதில்லை. தற்போதைய நிலைமையில் மேலும் தெளிவாகிவிட்டது. போராட்டத்தையும் கோரிக்கைகளையும் திசைதிருப்பி எங்களின் போராட்டத்துக்கு தடையாக இருந்த பிரச்சினைகள் எதுவும் இல்லை என தெரிவித்த முருத்தெட்டுவே ஆனந்த தேரருக்கு ஜனாதிபதி பேச்சுவார்த்தைக்காக நேரத்தை ஒதுக்கிக்கொடுத்துள்ளார்.

எனவே, எங்களின் போராட்டத்தை தடுப்பதற்கு முயற்சித்தார்களே தவிர, எங்களின் பிரச்சினைகளுக்கு ஜனநாயக ரீதியாக தீர்வு காண அரசாங்கம் முயற்சிக்கவில்லை என்பது தெளிவாக தெரிகிறது. இது கவலைக்குரிய விடயமாகும். மீண்டும் வேலைநிறுத்தத்தை முன்னெடுப்பதற்கான நிலைமையே காணப்படுகின்றது.

முருத்தெட்டுவே ஆனந்த தேரருக்கு மாத்திரமேதான் ஜனாதிபதி என்று ஜனாதிபதி கோட்டாபய கருதுவாரானால், நாங்கள் வேறு ஜனாதிபதியை சந்தித்ததும் இல்லை. அப்படியொரு ஜனாதிபதியும் எங்களுக்கு இல்லை. நாங்கள் போராட்டத்தை முன்னெடுத்ததும் வரையறுக்கப்பட்ட தரப்பினருடன் மாத்திரமே பேச்சுவார்த்தைகள் இடம் பெறுகின்றன. போராட்டத்தை எதிர்த்தவர்களை மகிழ்விக்க முயற்சிக்கிறார்களே தவிர எங்களின் கோரிக்கை தொடர்பில் எந்த பேச்சுவார்த்தையும் இடம்பெறவில்லை.

**ஜனாதிபதி சம்பிரதாயங்களுக்கு முரணாக செயற்படுகின்றார்**

**நீதிமன்ற தடை உத்தரவுக்கு அப்பால் சாதாரண தீர்வு எதுவும் கிடைத்ததாலா வேலைநிறுத்தத்தை இடைநிறுத்த ஒப்புக்கொண்டீர்கள்?**

தொழிற்சங்கங்கள் என்ற அடிப்படையில் தற்காலிக தீர்வை பெற்றுக்கொண்டு அதனூடாக போராட்டத்தை இடைநிறுத்தும் முடிவிலேயே இருந்தோம். ஆனால், எங்களின் எதிர்பார்ப்புக்கான தீர்வுகள் எதவும் கிடைக்கவில்லை. ஆனால், சகல கோரிக்கைகளுக்கும் எதிர்காலத்தில் ஏதாவதொரு முடிவை பெற்றுக் கொள்ளலாம் என்ற விடயம் எங்களுக்கு சாதகமாக அமைந்துள்ளது.

ஏழு கோரிக்கைகளில் ஒரு கோரிக்கைக்கு அமைச்சரவை மேலதிக நேர கொடுப்பனவுக்கு பத்திரமொன்றினூடாக தீர்வை பெற்றுக்கொடுப்பதாக சுகாதார அமைச்சர் தெரிவித்திருந்தார். ஆனால், அதன் பின்னர் 18ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் அந்த அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்க முடியாது என்று தெரிவித்தார். அதற்குக் காரணம் போதுமான நிதி இல்லை என்று குறிப்பிட்டார். ஆனால், முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் இணக்கப்பாட்டு அறிக்கையில் அதனை பெற்றுக்கொடுக்க இணக்கம் தெரிவித்துள்ளார்கள். ஆகவே, இந்த பிரச்சினையில் அரசியல் விளையாட்டும் இருக்கிறது. அன்று இல்லை என்று கூறிய விடயம் இன்று கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லை. எனவே, திருப்தியின் அடிப்படையில் இந்த வேலைநிறுத் தப் போராட்டத்தை கவிடவில்லை. சுகாதாரப் பிரிவை இயல்பு நிலைக்கு கொண்டுவந்துவிட்டு எங்களின் கோரிக்கைக்கு சரியான தீர்வை பெற்றுக்கொடுக்காவிட்டால் மீண்டும் வேலைநிறுத்தத்துக்கு செல்லவே எதிர்பார்த்துள்ளோம்.

**சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் அறிவித்துள்ளரே?**

சம்பள முரண்பாடு தொடர்பில் இடைநிலை தீர்மானமொன்றை எடுத்திருந்தோம். அந்தப் பிரச்சினைக் கான அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிப்பதாகவே சுகாதார அமைச்சர் இணக்கம் தெரிவித்தார். ஆனால், வெளியில் சுகாதார அமைச்சர் தெரிவிக்கும் விடயங்கள் குழப்ப நிலையை உருவாக்கியுள்ளது. தொலைக்காட்சி நிகழ்வொன்றில் சுகாதார சேவைப் பிரிவினரின் போராட்டத்தை நிறுத்துவதற்கு திட்டமிட்ட வகையில் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். இந்த விடயத்தை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். கலந்துரையாடல்களில் நாங்கள் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடுகளுக்கு மாறாக, விளம்பரத்துக்காக போன்று ஊடகங்களுடன் வியாபாரம் பேசுகிறார். ஓர் இணக்கத்தை காணும் விடயத்தில் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

**14 நாட்களின் பின்னர் மீண்டும் வேலைநிறுத்தத்துக்குச் செல்லும் எதிர்பார்ப்பு இருக்கிறதா?**

தற்போதுள்ள நிலைமையில் ஜனாதிபதியோ சுகாதார அமைச்சரோ இந்தப் பிரச்சினையில் தலையிடவில்லை. அநேகமான சந்தர்ப்பங்களில் மீண்டும் வேலைநிறுத்தத்துக்குச் செல்ல நேரிடும்.

**ஐக்கிய தாதியர் சங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் கடந்த வியாழக்கிழமை பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றிருந்தது. இதுதொடர்பில் நீங்கள் அறிந்து வைத்திருந்தீர்களா? சுகாதார உத்தியோகத்தர்கள் சமமேளனத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததா?**

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் தகவல் கிடைத்தது. ஆனால், இது ஒரு நாட்டிலுள்ள சம்பிரதாயங்களுக்கு எதிரான செயற்பாடாகும். சர்வதேச தொழில் சட்டத்துக்கமையவும் இது சட்டவிரோதமாக விடயமாகும். காரணம் போராட்டத்தில் ஈடுபட்ட தரப்பினருடனே பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென அந்த சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவையாக அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், பணியாளர்களின் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வை பெற்றுக்கொடுத்திருக்க வேண்டும். மூன்று மாதங்களாக போராடியும், ஜனாதிபதியை தலையிடுமாறு கோரியும் தனக்கு அதிக வேலைப்பளு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தார். ஐக்கிய தாதியர் சங்கத்தை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது தொடர்பில் எங்களுக்கு எந்த சிக்கலும் இல்லை. ஆனால், போராட்டக்காரர்களை ஒதுக்கிவிட்டு அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்துவது தீமையான விடயமாகும்.

**அவ்வாறானால் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன?**

14 நாட்களின் பின்னர் நிச்சயமாக வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுப்போம். நாட்டிலுள்ள சட்டத்தரணிகள் அமைப்பு, சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்களை இணைத்துக் கொண்டு அடக்குமுறையை எதிர்த்து செயற்படுவதற்கான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளோம். சர்வதேச தொழில் நீதிமன்றத்துக்குச் செல்லவும் எதிர்பார்த்துள்ளோம். ஐரோப்பிய சங்கத்துக்கும் இது தொடர்பில் அறிவிக்க எதிர்பார்த்துள்ளோம். காரணம், திட்டமிட்டு தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு எதிராக அடக்குமுறையை கையாண்டது மாத்திரமல்லாமல் சர்வதேச தொழில் சட்டத்தை மீறும் வகையிலும் செயற்பட்டுள்ளார்கள். கடந்த மூன்று மாத காலமாக சுகாதார அமைச்சின் செயலாளர் எங்களின் கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடததாலேயே இந்த வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது. அதுதொடர்பில் வழக்கு தொடரவும் எதிர்பார்த்துள்ளோம்.

**வேலைநிறுத்தம் இல்லாமல் தீர்வு காண்பதற்கு ஏதாவது வழிமுறை இருக்கிறதா?**

ஜனாதிபதி நேரடியாக எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த இணக்கம் தெரிவிப்பாராக இருந்தால் ஒரு முடிவுக்கு வர முடியும்.

**கொரோனா நிலைமையின் மத்தியில் தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்வது பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் அல்லவா?**

தொழிற்சங்க நடவடிக்கை மாத்திரமே எங்களால் முன்னெடுக்கப்படும். எந்தவொரு வேலைநிறுத்தமானாலும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும். தற்போது வைத்தியசாலைகளிலுள்ள நிலைமைகளை கருத்திற்கொண்டால், தொழிற்சங்க நடவடிக்கைகளின் காரணமாக சுகாதார கட்டமைப்புகள் பாதிக்கப்படுகிறது என கூறுவது தவறான கருத்தாகும். இன்று எங்களின் கடமைகள் சரியாக முன்னெடுக்கப்பட்டாலும் நோயாளர்களுக்குத் தேவையான வசதிகள் தேவையான அளவு இல்லை.

**அமைச்சரின் பேச்சுகளில் நம்பிக்கை இல்லை. இரட்டை கருத்துகளை முன்வைக்கிறார்**

**அத்தியாவசிய மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றதே?**

மருந்து மாத்திரமல்ல, அநேகமான மருத்துவப் பொருட்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினையை நிவர்த்திசெய்து கொள்வதற்கான யோசனைகள் இருக்கின்றன. ஆனால், அதனை முறையாக அமுல்படுத்த வேண்டுமானால் சுகாதாரத்துறையின் முகாமைத்துவம் மேலும் வினைத்திறன் மிக்கதாக வேண்டும்.

டொலர் இல்லை என்பதால் செய்ய வழியில்லை என தெரிவித்து மக்கள் மீது சுமைகளை வைத்துவிட்டு கை துடைக்கும் சுகாதாரத்துறை முகாமைத்துமே நாட்டில் இருக்கிறது. இந்த பிரச்சினைக்கு எங்களால் எந்தவொரு முடிவுக்கும் வரமுடியாத நிலையே இருக்கிறது. நாட்டில் அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென்பது அந்த அரசாங்கம் வங்குரோத்து நிலையை அமைந்துள்ளது என்பதே பொருள். உதவியை நாடினாலும் தறபோதுள்ள நிர்வாக முறைக்கமைய தீர்வு கிடைக்குமென எதிர்பார்க்க முடியாது.

**மூன்றாம் கட்ட தடுப்பூசி தொடர்பில் பக்கவிளைவுகள் ஏற்படும் என மக்கள் மத்தியில் அதிருப்தி நிலை உருவாகியுள்ளதல்லவா?**

தடுப்பூசி மாத்திரமின்றி நாம் உட்கொள்ளும் மருந்துகள், உணவுகள் என்பற்றினாலும் பக்கவிளைவுகள் இருக்கின்றன. ஆனால், பக்கவிளைவுக்கு மாறாக கொரோனாவால் ஏற்படக்கூடிய ஆபத்துதொடர்பில் ஒப்பீட்டு ரீதியாக நோக்க வேண்டும். கொரோனாவால் ஏற்படக்கூடிய ஆபத்தை விட பக்கவிளைவுகள் ஆபத்தானவை அல்ல. நாட்டில் தடுப்பூசிக்கு எதிரான அலையொன்று உருவாகியுள்ளது. இதில் அடிப்படை பிரச்சினையே இருக்கிறது. ஆகவே, சுகாதார அமைச்சின் கீழுள்ள சுகாதார கல்வி பணியகம் முறையாக செயற்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தடுப்பூசி தொடர்பில் விஞ்ஞானபூர்வமான தவறான கருத்துகள் சமூக மயமாகக்கூடும். எனவே, தடுப்பூசி தொடர்பில் பயங்கொள்ளவேண்டிய அவசியமில்லை எனபதே எங்களின் நிலைப்பாடு.

**வெளிநாடு செல்பவர்களுக்கு அவ்வந்த நாடுகளின் தேவைக்கேற்ப நான்காவது தடுப்பூசியை பெற்றுக்கொடுக்க தயாராக இருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?**

முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட தடுப்பூசிகளினால் உடம்பில் எவ்வளவு காலம் நோய் எதிர்ப்புச்சக்தி இருக்கும் என்பது தொடர்பில் பரிசோதித்ததன் பின்னரே பூஸ்டர் தடுப்பூசி செலுத்துவதா இல்லையா என்ற தீர்மானத்துக்கு வரவேண்டும். அதனடிப்படையில் ஆறு மாதங்களின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசி வழங்குவதற்கான வாய்ப்பு எமது நாட்டில் இருக்கிறது. ஆனால், தரவுகளின் அடிப்படையில் தடுப்பூசி வழங்கப்படுவதில்லை. அதிகளவில் தடுப்பூசிகள் இருப்பதாலும், தடுப்பூசிகளினூடாக இலாபத்தை ஈட்டுவதற்காக தடுப்பூசி செலுத்தப்படுவதாக மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். இந்த தடுப்பூசி செலுத்தப்படும் நடவடிக்கை தொடர்பில் முறையான ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதே எனது நிலைப்பாடாகும்.



# சமூகசேவை மூலமாக மக்கள் மனதில் இடம்பிடித்தவர்



# நாவலப்பிட்டி காளிமுத்து

**நேர்காணல்; இக்பால் அலி**

**பி. காளிமுத்து நாகலிங்கம் (லோகநாதன்) நாவலப்பிட்டியில் வர்த்தக, சமூக செயற்பாட்டின் மூலமாக தன்னுடைய பெயரை அடையாளப்படுத்திக்கொண்டவர். நாவலப்பிட்டி பஸ்பாகேகோரள பிரதேசத்திற்கான இணக்க சபையில் சுமார் 17 வருடங்களாக சேவையாற்றியவர். கடந்த 6 வருடங்களாக நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலின் அறங்காவலர் சபையின் உப தலைவராக சேவையாற்றியவர். சொயிஸாகல அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளராகவும் ஸ்ரீ கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்தின் அபிவிருத்திக் குழு உறுப்பினராகவும் என பலதரப்பட்ட சமூக அமைப்புகளிலும் பாடசாலை அபிவிருத்திக் குழுக்களிலிருந்து கணிசமானளவு சமூகப் பணிகளிலும் தம் ஆளுமையைப் பதிவுசெய்தவர். அவர் ஞாயிறு 'தமிழன்' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.**

## Q உங்கள் ஆரம்ப வாழ்க்கை குறித்து கூறுங்கள்?

1947-01-29களில் கலபட பென்ரோஸ் தோட்டத்தில் பிறந்தேன். என்னை லோகநாதன் என்று செல்லமாக அழைப்பார்கள். அப்பாவின் பெயர் காளிமுத்து. அவர் ஒரு பஸ் நடத்துனர். தலைமைக் கங்காணி தாத்தா கருப்பையா. அப்பா மதுவுக்கு அடிமையாகிவிட்டார். ஆனால், உணவு வழங்குவதில் கொஞ்சம் கூட குறைவைக்கவில்லை. அப்பா தரவேண்டிய கல்வி வழிகாட்டல்களை எல்லாம் தாத்தா வழங்கினார்.

## Q உங்கள் ஆரம்பக் கல்வி பற்றி

நான் ஆரம்பக் கல்வியை பென்ரோஸ் தோட்டப் பாடசாலையில் கற்றேன்.



அங்கு ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது நாங்கள் குடும்ப சகிதம் மொனராகலைக்கு சென்றோம். அங்கு ஒரு வருடம் இருந்துவிட்டு பின்னர் மீண்டும் தாத்தாவின் இடமான பென்ரோஸ் தோட்டத்திற்கு வந்தோம். அத்தோடு படிப்புக்கு முற்றுப்புள்ளி ஏற்பட்டுவிட்டது. தாத்தா 10 ஏக்கர் தோட்டம் எடுத்து செய்தார். அதில் அவர் நஷ்டத்திற்கு உள்ளானார், நிர்வாகிகளால் ஏமாற்றப்பட்டார். அவர் பெற்ற கடனை மீளச் செலுத்துவதற்கு மூன்று வருடம் ரொம்பக் கஷ்டப்பட்டார். மீண்டும் நாங்கள் தாத்தா வீட்டில் இருந்தமையால் படிப்பின்மீது எனக்கு ஆசை வந்தது.

## Q உங்களது குடும்பம் பற்றி

நான் 1973களில் எம்.எஸ்.தங்கவேலு சிட்டுவை திருமணம் செய்தேன். நான்கு பிள்ளைகள். முதலாவது மகன் வைத்தியர் நவகீதன். அவரின் மனைவி சகி. (முன்னாள் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜரட்னத்தின் மகள்) கண்டி வைத்தியசாலையில் பணிபுரிகிறார். இரண்டாவது மகள் தர்ஷனி, கண்டி மடவளை மதீனா தேசிய பாடசாலையில் ஆசிரியையாக கடமை புரிகிறார். அவர் கணவர் அதிபர் சண்முகநாதன், மூன்றாவது மகள் தஜினி சிவக்குமார் ஆசிரியை பன்மூர் தமிழ் வித்தியாலத்தில் பிரதி அதிபர், கணவர் ஆசிரியரும் கவிஞருமான மாரிமுத்து சிவக்குமார். கடைசி மகன் தனேஸ், அமெரிக்கன் கம்பனி பிரதான முகாமையாளராக இருக்கிறார். அவர் மனைவி ராதிகா.

## Q உங்களுடைய முதல் தொழில் வாழ்க்கை அனுபவம் பற்றி கூறுவீர்களா?

ஆம். 1962களில் முத்தாக முட்டாய் கடைக்கு வேலைக்கு சென்றேன். நான் அங்கு சுமார் ஒன்றரை வருடங்கள் வேலை செய்தேன். இக்காலகட்டத்தில் 1963களில் எங்கள் தாத்தா உயிரிழந்துவிட்டார். அவர் எங்களை வாழவைத்தவர். இந்தச் சந்தர்ப்பத்தில் அவரை நன்றிகூர்ந்து ஞாபகப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன்.

அங்கு வேலைசெய்துகொண்டிருக்கும்போது என்னுடைய நண்பர் ஒருவர் அவர் கடைக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். அதுவும் ஒரு முட்டாய் கடைதான். அங்கு ஒரு மாத சம்பளம் 15 ரூபா கிடைத்தது.

அப்படி வேலை செய்யும்போது எனக்கு சிங்கள நண்பர் அறிமுகமானார். அவர்தான் எனக்கு சிங்களம் கற்றுக்கொடுத்தார். அவர் பெயர் சுமன. அவரிடம் படித்தபோது சிங்களம் எழுத வாசிக்க முடிந்தது. அப்படி இருக்கும்போது வவ்வாகம என்ற இடத்தில் என்னுடைய சித்தப்பா கடை வைத்திருந்தார். சென்ரல் தியேட்டருக்கு அருகாமையில் கடை இருந்தது. நான் அங்கிருந்து சித்தப்பாவின் கடைக்குச் சென்றுவிட்டேன். அவர் ஒரு ஹட் ஒன்று அடித்தார். அந்த ஹட்டை செய்யும்போது எனக்கு மனதில் சிறிய முதலில் ஒரு கடலை வியாபாரம் செய்ய வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

அந்த வியாபாரத்தை முயற்சிசெய்ய முனைந்தபோது அது ஆரம்பத்தில் தடைப்பட்டுவிட்டது. கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாமல் போய்விட்டது. அதை செய்வதற்கென நாவலப்பிட்டியிலுள்ள கினிகத்தேன என்ற இடத்திற்கு கடலை வண்டியொன்றை வாங்கப்போனேன். என்னுடைய சிங்கள நண்பர் ஒருவருடன் சென்றேன். அது கிடைக்கவில்லை. அக்கடலை வண்டி கிடைக்கவில்லை என எனக்கு ரொம்ப கவலையாக இருந்தது. நான் முதன்முதலாக ஆரம்பிக்கப்போன தொழில் சரிவரவில்லை என்று மனதிற்கு ரொம்ப கவலையாக இருந்தது.

என்னுடைய முதலாளி என்னைப் பார்த்து கேலி செய்தார். 150 ரூபா பணத்தை வைத்துக்கொண்டு பெரிய வியாபாரம் செய்யப்போகிறீர்களா என்று என்னை கேலி செய்தார். எனக்கு சங்கடமாக இருந்தது. அதற்கு நான் ஒன்றும் சொல்லவில்லை. சென்ரல் தியெட்டருக்கு பக்கத்தில் செய்தேன். ஜயவிப என்ற ஹோல் இருக்கிறது. மாலைநேரம் நல்லா வியாபாரம் போகும். இப்படி இருக்கும்போது இரு பையன்களை வேலைக்கு அமர்த்தி அதனோடு வடை வியாபாரத்தையும் ஆரம்பித்தேன்.

அந்த நேரம் என்னுடைய பெரிய தம்பி வந்தார். அவர் எனக்கு கைகொடுத்த மாதிரியாக இருந்தார். எனது இரண்டாவது தம்பியான ராஜேந்திரன் என்னோடு தொழில் செய்தார். மூன்றாவது மயில்வாகனம். ஹட்டனில் ஒரு சுருட்டுக்கடையில் சேர்த்துவிட்டேன். அங்கு தொழில் செய்தார். அவர் கடைசெய்வதற்கு பண உதவி செய்தார். நாங்கள் எல்லோரும் சேர்ந்து சந்தைக்கு அருகாமையில் சுருட்டுக் கடையொன்றைச் செய்தோம். நான்காவது தங்கை. எழுத்தாளர் பொன்னுத்துரையை திருமணம் முடித்துள்ளார். அவர் என்னோடு தான் இருந்தார். கடைசித் தம்பியும் என்னோடுதான் இருந்தார்.

எடுப்போமா என்று கடைசித் தம்பியிடம் கேட்டேன். அவர் எடுப்போம் என்றார். அவர் வேலைசெய்த கடையில் சம்பளத்தை வாங்கிக்கொண்டு விலகி வந்துவிட்டார். அந்தக் கடையினை எடுத்துச் செய்தோம். சின்னக் கடைகள் இரண்டை செய்துகொண்டு போனோம். அப்படியே ஓரளவு முன்னேறிக் கொண்டு வந்தோம். அப்படி செல்லும்போது ஜூலைக் கலவரம் ஏற்பட்டது.

## Q உங்களது சமூகப் பங்களிப்பு யாவை?

நான் நாவலப்பிட்டி அம்மன் கோயிலின் நிர்வாக சபையில் இருந்தேன். ஆறு வருடம் இருந்த பின்னர்தான் நிர்வாக சபைக்குச் சென்றேன். கோயிலின் உப தலைவராக ஆறு வருடம் இருந்தேன். நாவலப்பிட்டி பஸ்பாககே கோரள என்ற இணக்க சபையில் 17 வருடகாலமாக சேவையாற்றியுள்ளேன். தற்போது நான்கு வருடங்களுக்கு முன்னர்தான் விலகினேன். ஏனென்றால், எனக்கு சுகயீனம் இல்லாமற் போயிற்று. எனக்கு பாரிசவாதநோய் வந்தது. அப்போது எனக்கு பேசக்கூட கஷ்டமாக இருந்தது. எங்கள் பிள்ளைகள் புனித அந்தோனியார் கல்லூரியில்தான் கற்றார்கள். அங்கு தமிழ் மொழி மூலக் கல்வி வளர்ச்சிக்காக என்னால் பாரிய பங்களிப்பைச் செய்துள்ளேன். இப்பாடசாலையில் சரஸ்வதி பூஜை நடைபெற்றால் அதற்குரிய அனுசரணையெல்லாம் நான் செய்வேன். கதிரேசன் பாடசாலையில் பெரிய மகன் படித்தார். அங்கு தேவையான உதவிகளைச் செய்துகொடுத்துள்ளேன். நாவலப்பிட்டியிலுள்ள தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் என்னுடைய பங்களிப்புகள் இருந்துள்ளன. இது வெளியே சொல்ல முடியாது. கல்வி தொடர்பாக யார் வந்து கேட்டாலும் நான் இல்லை என்று சொல்ல மாட்டேன். கையில் இருப்பதைக் கொடுத்து விடுவேன்.

நான் உழைப்பதில் ஒரு பங்கை சமூகத்திற்கு செலவுசெய்ய வேண்டும் என்ற கொள்கை எனக்கு இருக்கிறது. அதைபோல் நான் பிள்ளைகளுக்கும் விதைத்துள்ளேன். சம்பாதிக்கும் பணத்தில் கஷ்டமானவர்களுக்கு கொடுத்து உதவி வருகின்றேன். இது பாடசாலை மட்டுமல்ல, ஹட்டனிலிருந்து நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு வரும் தமிழ் மக்களுக்கு உதவி செய்துகொண்டுதான் இருக்கின்றேன். வீட்டிலுள்ள தலையணை, படுக்கை விரிப்பு எல்லாம் எடுத்துச்சென்று கொடுப்பேன். வீட்டில் மனைவி, பிள்ளைகள் இல்லாவிட்டாலும் வைத்தியசாலையில் உள்ளவர்களுக்கு கொண்டுபோய் கொடுத்து விடுவேன். தங்குமிட வசதி, போக்குவரத்து வசதியின்றி வருபவர்களுக்கு வீட்டில் தங்கவைத்து அனுப்பிவைப்பேன். மஸ்கெலியாவிலிருந்து வந்தால் ஹட்டனுக்கு செல்ல பஸ் இருக்காது. எல்லோரையும் வீட்டில் தங்க வைத்து கடையிலிருந்து சாப்பாடு கொடுப்பேன். நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு வருபர்களிடம் கேட்டால் என்னைப் பற்றி அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது.

பிள்ளைகளுக்கு படிப்புக்கு பணம் இல்லையென்றால் கொப்பி, புத்தகங்கள் வாங்கி கொடுத்துவிடுவேன். இன்னார்க்கு இன்ன உதவி செய்துள்ளேன் என்று யாருக்கும் சொல்வதில்லை. இயன்றவு செய்துகொண்டு இருக்கின்றேன். வெளியே உள்ளவர்கள் உங்கள் அப்பா இன்ன உதவி செய்தார் என்று பிள்ளைகளிடம் கூறும்போதுதான் பிள்ளைகள் வந்து நீங்கள் இன்னாருக்கு உதவி செய்தீர்களா என்று என்னிடம் வந்து கேட்பார்கள். அந்தச் சந்தர்ப்பங்களில் மட்டும்தான் என்னுடைய சேவை வெளிவரும். இந்த உதவிகள் எனது பிள்ளைகளுக்கு உதவி தேவைப்படும்போது வேறொரு ரூபத்தில் கிடைத்திருக்கிறது. ஒரு உதவிக்காக காத்திருக்கும்போது நீங்கள் இன்னார் வீட்டு மகளா என்று கேட்டு அவர்கள் அந்த உதவிகளை தம் பிள்ளைகளுக்கு செய்து கொடுத்துள்ளார்கள்.

## Q நீங்கள் எதிர்கால சந்ததியினர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

நாம் யாராக இருந்தாலும் சுயநலமாக வாழக்கூடாது. பொது நலமாக இருந்தால் மட்டும்தான் வாழ்க்கையில் முன்னேறலாம். இந்த மனப்பாங்கு எல்லோருரிடத்திலும் இருக்கவேண்டும். இப்போது சமூகத்தில் போட்டி, பொறாமைகள்தான் கூட. சமூகத்திற்கு கொடுக்க வேண்டும் என்பதைத் தவிர அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் சிந்திக்கிறார்கள். ஆனால், எவ்வளவு தூரம் சமூகத்திற்கு கொடுக்கிறோமோ அந்தளவு சமூகத்திற்கு மத்தியில் நல்வரவேற்பு இருக்கும்.







# நோய் எதிர்ப்புத்திறனை ஏன் அதிகரிக்க வேண்டும்?



ஒமிக்ரொன் வேற்றுருவால் அச்சமான சூழல் உருவாகியிருந்த நிலையில், கொரோனா பாதிப்புக்கு உள்ளானவர்களில் பெரும்பாலானோர் நோயிலிருந்து குணமடைந்திருக்கின்றார்கள். மருத்துவ அணுகுமுறை, தடுப்பூசி போன்றவற்றால் இது சாத்தியமானது என்றாலும், இவற்றைவிட முக்கியப் பங்காற்றியது நமது உடலில் காணப்படும் 'நோய் எதிர்ப்புத்திறன்'.

நோய் எதிர்ப்புத்திறன் என்பது தோசையையும், உலகத் தரச்சான்றிதழ் பெற்ற சத்துமாவினையும் உண்பதால் மட்டுமே பெற்றுவிடக்கூடிய உடல் திறன் அல்ல. அது உடலின் பல்வேறு அமைப்புகளில் ஒருங்கிணைந்த செயல்பாடு. நோய் எதிர்ப்புத்திறன் பற்றிய சரியான புரிதலே, திறன் வாய்ந்த நோய் எதிர்ப்புத்திறனைப் பெறுவதற்கு உதவும்.

**நோய் எதிர்ப்புத்திறனின் வகைகள்**

நமது உடலின் நோய் எதிர்ப்புத்திறன் இரண்டு வகைப்படும். முதலாவது, இயல்பாக நமது உடலில் அமைந்திருக்கும் 'Innate Immunity'. இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களும், தோல், தொண்டை, குடல், கல்லீரல், மூளை ஆகியவற்றில் உள்ள நோய்த் தடுப்புத்திறன் பெற்ற திசுக்களும் பக்டீரியா, வைரஸ் உள்ளிட்ட நுண்ணுயிரிகளை எதிர்த்துப் போரிட்டு நோய்த் தொற்றினைத் தடுப்பது இந்த வகையில் அடங்கும்.

இரண்டாவது வகையானது, 'Acquired or Adaptive immunity' என்று அழைக்கப்படுகிறது. இதனை மேலும், Active and Passive immunity என இரண்டு வகையாகப் பிரிக்கின்றார்கள். நோய்த்தொற்றைத் தடுக்கும் நோக்கில் உடல் தன்னியல்பாக உற்பத்திசெய்யும் எதிரணுக்கள், டி-செல், பீட்டா செல் அல்லது தொற்றுக்கு எதிராகப் போடப்படும் தடுப்பூசிகள் 'எக்டிவ் இம்யூனிட்டி' என்று அழைக்கப்படுகின்றன. தாய்ப்பாலின் மூலம் குழந்தைகளுக்குக் கிடைக்கும் நோய் எதிர்ப்பாற்றல் அல்லது கொரோனா நோய்த்தொற்றுக்கு வழங்கப்படும் 'பிளாஸ்மா தெரபி' போன்றவற்றால் கிடைக்கும் நோய் எதிர்ப்பாற்றல் 'Passive Immunity' என்று அழைக்கப்படுகிறது.

**உணவும் நோய் எதிர்ப்புத்திறனும்**

நம்முடைய நோய் எதிர்ப்புத்திறனானது உணவு முறை, மனநலம், உடற்பயிற்சி, உறக்கம் போன்ற வாழ்க்கை முறைகளால் பெருமளவு பாதிக்கப்படும். ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ள சமூகத்தில் பெருமளவிலான மக்கள் காசநோய், எய்ட்ஸ் உள்ளிட்ட பல்வேறு நோய்த் தொற்றுகளுக்கு ஆளாக நேரிடும். இவையல்லாது துத்தநாகம், விற்றமின் - ஏ, சி, டி, போலிக் அமிலம், இரும்புச்சத்து போன்ற பல்வேறு நுண்ணூட்டச்சத்து குறைபாடுள்ளவர்கள் தொற்று நோய்களால் எளிதாகப் பாதிக்கப்படும் சாத்தியம் உண்டு. முக்கியமாக, ஒருவரின் சிறுவயதில் ஏற்படும் ஊட்டச்சத்துக் குறைபாடு, அவரது நோய் எதிர்ப்புத் திறனைப் பெருமளவில் பாதிக்கும். உடல் பருமன் உடையோர், நோய் எதிர்ப்புத் திறன் குறைந்து சளி, இருமல், நிமோனியா போன்ற சுவாச நோய்த் தொற்றுக்கு ஆளாகின்றனர். எனவே, முழுமையான நோய் எதிர்ப்புத்திறனைப் பெறுவதற்கு சரிவிகித ஊட்டச்சத்து நிறைந்த சீருணவு அவசியம்.

**உடற்பயிற்சியும் நோய் எதிர்ப்புத்திறனும்**

உடற்பயிற்சி செய்வது என்பது ஏதோ 'சிக்ஸ் பேக்' வைப்பதற்கும், நீரிழிவு, இரத்த அழுத்த நோயாளர்களுக்கு மட்டும் உரியதும் அல்ல. தினம்தோறும் உடற்பயிற்சி செய்வது 'எக்டிவ் இம்யூனிட்டி'யை அதிகரிக்கும். மேலும், இரத்தத்தில் நோய் எதிர்ப்புத்திறன் காரணிகளின் (Immunoglobulins, Anti-inflammatory cytokines, Neutrophils, NK cells, Cytotoxic T cells, B cell) அளவையும் அதிகரிக்கிறது. இந்தக் காரணிகளே நோய்க்குக் காரணமான பாக்டீரியா, வைரஸ் போன்றவற்றைக் கண்டறிந்து உடலிலிருந்து அகற்றுவதில் பெரும் பங்காற்றுகின்றன. எனவேதான், எளிய உடற்பயிற்சி, யோகாசனப் பயிற்சி போன்றவை கொரோனா நோய்த் தொற்றிலிருந்து மீள்வதற்குப் பயனுடையதாக அறியப்படுகின்றது.

**மனநலமும் நோய் எதிர்ப்புத்திறனும்**

மன உளைச்சல், மனச் சோர்வு, மன அழுத்தம் போன்ற உளவியல் பிரச்சினைகள் தொற்றுநோய்களுக்கு எதிரான நோய் எதிர்ப்புத்திறனைக் குறைப்பதோடல்லாமல் பாக்டீரியாக்கள், கொரோனா வைரஸ் போன்ற நுண்ணுயிரிகள் உடலை எளிதாகப் பாதிக்கவும் ஏதுவாகின்றது. மனமும் உடலும் இணைந்து இயங்குபவை. எனவே, மனநலனுக்குப் போதிய முக்கியத்துவம் அளிப்பது, நோய் எதிர்ப்புத்திறனையும் அதிகரிக்கும்.

**நல்ல தூக்கம் அவசியம்**

தூக்கமின்மையால் புரோ-இன்ஃபிளமேட்டரி சைட்டோகைன்கள் எனப்படும் CRP, IL-6 - TNF-alpha போன்றவற்றில் ஏற்படும் அதிகரிப்பு, நோய் வருவதற்கான சாத்தியத்தை அதிகரிக்கிறது. மேலும், நோய் எதிர்ப்புக் காரணிகளான CD4,

CD8 - NK செல்கள் போன்றவற்றின் செயல்பாடுகள் குறைக்கப்படுகின்றன. எனவே, முறையான தூக்கம் மிக அவசியம். தூக்கம் உடலுக்குப் புத்துணர்வு கொடுப்பதோடு, மெலடோனின் என்கின்ற ஹோர்மோன் சுரப்பை அதிகரிக்கும். இது நோய் எதிர்ப்புத்திறனை மேம்படுத்த உதவும்.

**புகையும் மதுவும் பெருங்கேடு**

பொதுவாகவே, மேல் சுவாசப்பாதையில் காணப்படும் மியூகோசில்லரி செல்களின் செயல்பாட்டைக் குறைத்து, கொரோனா தொற்று மட்டுமல்லாமல் பல்வேறு சுவாச நோய்கள் வருவதற்குப் புகைப் பழக்கம் சிவப்புக் கம்பளம் விரிக்கும். புகைப்பழக்கம் உள்ளோரிடம் நோய் எதிர்ப்புத்திறன் தரவல்ல மரபணுக்கள் அளவில் குறைந்து காணப்படுவதாக அறிவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.


மதுவின் அராஜகம் இரைப்பையில் தொடங்குகிறது. மது, இரைப்பையின் வழியாகத்தான் இரத்தத்தில் கலக்கிறது. முன்னதாக, இரைப்பையிலும் குடலிலும் காணப்படும் பல்வேறு நன்மை செய்யும் பாக்டீரியாக்களை (Gut microbe) இது அழிப்பதுடன், நோய் எதிர்ப்புத்திறன் காரணிகளின் செயல்பாட்டையும் முடக்கி விடுகிறது.

**ஆரோக்கிய வாழ்வே முக்கியம்**

சமூகத்தில் ஒருவரின் மதிப்பை, எப்படி அவர் வாழ்ந்த வாழ்க்கை நிர்ணயிக்கின்றதோ, அதுபோல ஆரோக்கியமான உணவு முறை, உடற்பயிற்சி, உடல் உழைப்பு, மன அமைதி, ஆழ்ந்த உறக்கம் ஆகிய காரணிகள் ஒருவருக்கு வலுவான நோய் எதிர்ப்புத்திறனை அளிக்கின்றன. நோய் எதிர்ப்புத்திறனால் மட்டுமே கொரோனா ஒமிக்ரொன் வைரஸ் போன்றவை மட்டுமல்ல, வருங்காலத்தில் வரப்போகிற இன்னும் பல வைரஸ்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்ள வழியமைக்கும். நோய் எதிர்ப்புத்திறனை மேம்படுத்தும் விதமாக வாழ்க்கைமுறையை ஆரோக்கியமாக மாற்றிக்கொள்வது காலத்தின் கட்டாயம்.

**செந்தில்குமார்,**
**சித்த மருத்துவ நிறுவன**
**மருத்துவர்**

# குறட்டையிலிருந்து விடுதலை





எல்லாருக்கும் அமைதியான தூக்கம் வாய்ப்பது எளிதல்ல. வேலைப்பளு, மன அழுத்தம், குடும்பச் சிக்கல்கள் எனப் பல்வேறு பிரச்சினைகளால் பலருக்கும் தூக்கம் சவாலானதாக இருக்கிறது. இதில் குறட்டையும் சேர்ந்துகொண்டால், அவ்வளவுதான்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை குறட்டை பிரச்சினையால் பாதிக்கப்படுகின்றனர். அருகில் இருப்பவர்களுக்கும் அது பெரும் தொந்தரவளிப்பதாக இருக்கிறது. குறட்டை விடுபவர்கள் எழுந்தவுடன், "நீங்க ரொம்ப குறட்டைவிட்டீங்க" என்று சொன்னால்கூட, அவர்கள் நம்ப மாட்டார்கள்.

**குறட்டை எப்படி உருவாகிறது?**

துணி காயப்போடும் கொடி மீது காற்று வேகமாக மோதும்போது அசைந்து ஒரு சத்தத்தை உருவாக்கும் அல்லவா, அதுபோலத்தான் குறட்டையும். நாம் தூங்கும்போது நாக்கின் பின் உள்ள பகுதியின் அளவு குறுகலாகும். அப்பகுதியைச் சுற்றியுள்ள திசுக்களும் தளர்ந்து, நெகிழ்ந்து போகும். நாம் தூங்கும்போது விடும் மூச்சினால் வேகமாக வெளிவரும் காற்று தளர்வாக உள்ள திசுக்களின் மீது அதிர்வை உருவாக்கும். அந்த அதிர்வின் ஒலியே குறட்டை.

**மூச்சுத்திணறல்**

தூக்கத்தில் மூச்சுத்திணறல் என்கிற பிரச்சினை இந்த இடத்தில்தான் தொடங்குகிறது. தொண்டையின் பின்பகுதியில் உள்ள சுவாசக்குழாய் தசைகள் தளர்ந்து, ஓய்வுக்கு உள்ளாகி சுவாசப்பாதையைக் குறுக்கி அடைப்பை ஏற்படுத்திவிடுகிறது. தொந்தரவு நிறைந்த இந்தத் தூக்கம் இரத்தத்தில் ஒட்சிசன் செறிவைக் குறைக்கிறது.

சுவாசக்குழாய் தசைகளின் தளர்வினாலும் மோசமான நாக்கின் நிலை, வாய் வழியாக மூச்சுவிடுவது ஆகிய காரணிகளால் தூக்கத்தில் மூச்சுத்திணறலும் குறட்டையும் உருவாகின்றன.

**குறட்டையிலிருந்து மீள்வோம்**

மேற்சொன்ன பயிற்சிகள் குறட்டையைப் பெருமளவு குறைக்க உதவுகின்றன. தூக்கத்தில் மூச்சுத்திணறல் கொண்டவர்களில் மிதமான பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு சில பயிற்சிகள் உதவியாக இருக்கும். மற்ற சிகிச்சை முறைகளோடு இந்த உடற் பயிற்சிகளை இணைத்து மேற்கொள்ளலாம். தனிப்பட்ட நபர்களுடைய தொண்டை, நாக்கு ஆகியவற்றின் அளவு, வாயின் வடிவங்களைப் பொறுத்து பயிற்சிகளின் பயன்கள் வேறுபடலாம். மது அருந்துபவர்கள், தூக்க மாத்திரை எடுத்துக்கொள்பவர்களுக்கு இந்தப் பயிற்சிகளின் நன்மைகள் குறைவாகக் கிடைக்கலாம். சிலருக்கு பயிற்சிகளோடு மருந்து மாத்திரைகள், அறுவை சிகிச்சை முறைகளும் தேவைப்படலாம்.

குழந்தைகள், மத்திய தர வயதினர் பிசியோ தெரபி மருத்துவரது ஆலோசனைப்படி இந்தப் பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் குறட்டைப் பிரச்சினையிலிருந்து மீள்வதோடு நாள்பட்ட இதயப் பாதிப்புகளுக்கு ஆளாகாமல் நல்வாழ்வு வாழலாம். அப்போது, நன்கு ஆழ்ந்து உறங்கி, உற்சாகமாகச் செயல்பட முடியும்.

**வெ. கிருஷ்ணகுமார்,**
**பிசியோதெரபி மருத்துவர்**

## பாதிப்புகள்

- பகல் நேரத்தில் அதீத சோர்வு
- குறட்டைச் சத்தம் அதிகரித்தல்
- தூக்கத்தின்போது அடிக்கடி மூச்சுவிடுவது தடைப்படுவது.
- மூச்சுத்திணறலால் திடீரென விழித்துக் கொள்வது.
- காலை நேரத் தலைவலி
- பகல் நேரத்தில் கவனச்சிதறல்
- மனநிலை மாற்றம் - சிலருக்கு மனச்சோர்வு, எரிச்சல் உணர்வு.
- உயர் இரத்த அழுத்தம்
- உணர்ச்சிக் குறைபாடு
- இதயக் குறைபாடுகள்.

# இந்த 5 தவறுகளை செய்தால் உங்களுக்கு நிச்சயம் வழுக்கை தான்!

**1ஆவது தவறு**



டிவி விளம்பரங்களில் தினமும் ஷெம்பூ போட்டு தலைக்கு குளிக்கச் சொல்வார்கள். இது மிகவும் தவறு. தினமும் ஷெம்பூ தேய்த்து குளிக்க ஆரம்பித்தால் உங்கள் தலைமுடி வேர்கள் வலுவிழந்துவிடும். அதன் பிறகு தினமும் கணிசமான அளவு உதிர ஆரம்பிக்கும்.



தினமும் இப்படி முடி கொட்டினால் என்ன ஆவது? அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் தலை வழுக்கையாகிவிடலாம். காரணம் ஷெம்பூவில் பலவிதமான வேதிப் பொருட்கள் உள்ளன. அவை உங்கள் தலைமுடியை சுத்தப்படுத்துவதுடன் குழி தோண்டி புதைத்துவிடும். ஒரு வாரத்தில் இரண்டு அல்லது மூன்று தடவை ஷெம்பூ போட்டு குளித்தால் போதுமானது.



**2ஆவது தவறு**



பலர் இந்தத் தவறை செய்கிறார்கள். ஷெம்பூ பயன்படுத்திய பின்னர் அதற்குரிய கண்டிஷனர்களையும் உடனடியாக பயன்படுத்த வேண்டும். ஆனால் இதை செய்யத் தவறுவதால் ஷெம்பூவில் உள்ள இரசாயனங்கள் தலைமுடிக்கு கெடுதல் செய்துவிடும். மாறாக, கண்டிஷனர் பயன்படுத்தினால் தலைமுடி அடர்த்தியாக இருப்பதுடன் மென்மையாகும்.

**3ஆவது தவறு**



தலைமுடி சார்ந்த வணிக பொருட்கள் அதிகரித்துவரும் நிலையில், சந்தையில் எது புதிதாக வந்தாலும் அதை வாங்கிப் பயன்படுத்தும் பழக்கம் பலருக்கு உண்டு. இப்படி சில விளம்பரங்களைப் பார்த்து ஹேர் ஜெல் போன்ற சிலவற்றை வாங்கி தலைமுடியில் தேய்க்கின்றனர். இது நல்லாயிருக்கே இதை ட்ரை பண்ணு என்று நண்பர்கள், முடி திருத்துபவர்கள் என சிலர் பரிந்துரைக்க, யோசிக்காமல் நாமும் அதையெல்லாம் தலைமுடியில் தேய்த்து வைக்க, அதன் பலனாக பல கெமிக்கல்கள் வேர் வரை ஊடுருவி முடியை சிறுகச் சிறுக கெடுதல் விளைவிக்கத் தொடங்கும். ஒரு கட்டத்தில் தலைமுடி முழுக்க கொட்டி, வழுக்கையாகிவிடும் என்பது உண்மை. எனவே ஜெல் பயன்படுத்துவதை தவிர்ப்பதே வரும் முன் காக்க என்பதன் அர்த்தம்.

**4ஆவது தவறு**




நீங்கள் அடிக்கடி தொப்பி அணியும் பழக்கம் உள்ளவரா? அதுவும் நீண்ட நேரம் அணிவீர்களா? இது உங்கள் தலைமுடிக்கு கெடுதல் என்பது உங்களுக்குத் தெரியுமா? இயற்கையாக கிடைக்க வேண்டிய ஒட்சிசன் உங்கள் தலைமுடிக்கு கிடைப்பதை நீங்களே தடை செய்து, விரைவில் வழுக்கையாகி அதன் பின் தொடர்ந்து தொப்பியை வேறு வழியின்றி அணியும் நிலைக்குத் தள்ளப்படுவீர்கள். எப்போதாவது ஆசைப்பட்டால் மட்டுமே தொப்பி அணிந்து மகிழுங்கள்.

**5ஆவது தவறு**



இதனை பலர் தவறு என்று செய்யாமல் பழக்கதோஷத்தில் செய்யும் தவறு. தலைமுடியை வாரும் போதுதான் இந்தத் தவறு ஏற்படுகிறது. தலைவாருவது நல்ல பழக்கம்தானே என்று குழப்பமாக உள்ளதா? எப்போது தலை வாருவது என்பது அதனினும் முக்கியம். தலைக்கு குளித்துவிட்டு, அந்த ஈரத்துடன் சீப்பை போட்டு வறட் வறட்டென்று தலைமுடியை வாரினால் முடி உடைவதுடன், வேரோடு வெளியே வந்துவிடும். அடிக்கடி இப்படி செய்தால் வாராத வழுக்கையும் வந்து சேரும். தலைமுடி நன்றாக உலர்ந்த பின்னர் தான் சீப்பை பயன்படுத்தி தலைவார வேண்டும்.



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புதிய நுழைவாயினது கட்டடக் கலையம்சம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புதிய நுழைவாயிலானது, காலனிய காலத்திற்கு முன்னரும் பின்னரும் யாழ்ப்பாண மக்கள் கொண்டிருந்த பண்பாட்டை விளித்து நிற்கும் விதமாகவும் யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டின் நினைவுச்சின்னமாகவும், பண்பாட்டின் தனித்துவ அடையாளத்தை வெளிப்படுத்தும் அடையாளச் சின்னமாகவும் விளங்குகின்றது. கட்டடங்கள் வெறுமனே அதன் உற்பத்திப்பொருட்களான கல், மண், மரம் என்பவற்றால் மட்டும் ஆனதில்லை. அதன் வழியாக கலைஞனின் படைப்புப் திறன் வெளிப்படுத்தப்படுகின்றது. அது கொண்டிருக்கும் கலை நுணுக்கம், கற்பனைத் திறன் என்பன ஒழுங்குபடுத்தப்பட்ட நிலையிலேயே அமைக்கப்படுகின்றது. இதனடிப்படையில் இந்த நுழைவாயிலும் அமைக்கப்பட்டுள்ளது. கலைஞனின் படைப்பாற்றல் திறன் இங்கு வெளிப்படுத்தப்படுவதுடன், பார்ப்பவர் வியக்கும்வண்ணம் அதன் கலை நுணுக்கம் கட்டடத்தின் ஒவ்வோர் அங்கத்திலும் வெளிப்படுகின்றது. இதில் ஒவ்வோர் காலகட்டத்திலும் யாழ்ப்பாணம் கொண்டிருந்த பண்பாட்டம்சங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. இங்கு காட்சிப்படுத்தலும் ஞாபகப்படுத்தலும் ஒரேநேரத்தில் நிகழ்கின்றன. அக்காலப் பண்பாட்டை பிறருக்கு எடுத்துக்காட்டும் கலைப் படைப்பாகவும் இது விளங்குகின்றது. இது பாரம்பரிய கட்டடக்கலையின் அடையாளச் சின்னமாகவும் விளங்குகின்றது. காலனிய காலத்திற்கு முன்னும் காலனிய கால ஆட்சியின்போதும் பின்னரும் யாழ்ப்பாண மக்கள் கொண்டிருந்த பண்பாடு எவ்வாறு அமைந்திருந்தது, அது பின்னர் எவ்வாறு மாற்றமுற்றிருந்தது என்பதனை வெளிப்படுத்தும் விதமாக கட்டடத்தின் கட்டுமானம் படிப்படியான பண்பாட்டு வளர்ச்சி நிலையை வெளிப்படுத்தும் விதமாக அமையப்பட்டுள்ளது. இது பண்பாட்டில் ஏற்பட்ட மாற்ற நிலைகளையும் பாரம்பரியமாக இங்கு இருந்துவந்த சமய, சமூக, பொருளாதார, கல்வி, கலை, தொழில், சடங்குகள் என்பவற்றை காட்சிப்படுத்துவதன் மூலம் ஓர் இனத்தாரின் பண்பாடு அடையாளப்படுத்தப்படுகின்றது. இந்நுழைவாயிலின் கட்டடத்தின் கட்டுமானமானது 3 பெரும் கூறுகளின் அடிப்படையில் பண்பாட்டு நினைவுச் சின்னமாக அமைகின்றது.

1. அடிக்கட்டுமானம்
2. இடைக்கட்டுமானம் (சிற்பத் தொகுதி)
3.. மேற்கட்டுமானம் (இருக்கைப் பகுதி, கூரை)

இதில் கட்டடத்தின் அடிக்கட்டுமானமானது திராவிடக் கட்டடக் கலையினை அடியொற்றி உபபீடம், தாங்குதளம், பாதசுவர் என்னும் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. ஒற்றைக் கருவறையுடன் கூடிய எளிமையான இந்துக் கோயில் கட்டடமொன்று கொண்டிருக்கக்கூடிய அடிப்படையான உறுப்புகள்கொண்டு அமைந்துள்ளது. திராவிட கட்டடங்களின் தாங்குதளத்திற்கு



வலுவூட்டவும் கட்டடத்தை உயர்த்திக் காட்டுவதற்காகவுமே உபபீடங்கள் அமைக்கப்படுகின்றன. இந்த அமைப்பை ஒத்த தன்மையிலேயே அக்காலத்திலும் இக்காலத்திலும் கோயில்கள் அமைக்கப்படுகின்றன. உபபீடத்தின் மீது அமைக்கப்படுவது தாங்குதளம். இதன் மீது அடுத்த அமைப்பாக அமைவது பாத சுவர். இவ்வாறான கட்டட அமைப்பு முறையிலேயே இவ்வாயில் கட்டடத்தின் அடிப்படையிலான அடையாளத்தை நினைவுபடுத்துகின்றது. இங்கு வாழ்ந்த முதல் குடிமக்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதை அடையாளப்படுத்தும் முகமாகவே இது அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இரண்டாம் கட்டடத் தொகுதியான இடைக் கட்டுமானத் தொகுதியில் சிற்பங்கள் இங்கு வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இரண்டு அடுக்கு நிலையில் இங்கு சிற்பத் தொகுதி காணப்படுகின்றது. இதன் மரச்செதுக்கலாலானது இங்கு காலங்காலமாக நிலவிவந்த பண்பாட்டம்சங்கள் கால ஒழுங்கில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அக்காலத்தில் நிலவிய சாதிய அடிப்படையில் அமைந்த தொழில்கள், தொழில்நுட்பங்கள்,, கலைகள், சமூக பழக்கவழக்கங்கள். அடையாளப்படுத்தப்படுகின்றன.

இரண்டாம் தொகுதியில் காலனித்துவ காலத்தில் நிகழ்ந்த பண்பாட்டு மாற்றங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தமிழுக்கும் இந்து சமயத்தின் தோற்றமும் அது சார்ந்த அடையாளங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இக்காலத்தில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சி கல்வி சார்ந்த ஸ்தாபனங்களின் அடையாளங்களும் இங்கு தத்ரூபமாக செதுக்கப்பட்டுள்ளன. அறிவியல், சமயம் சார்ந்த புராணக் கதைகள், நீதிக் கதைகள், சமூகப் பழக்கங்களைக் கூறும் கதையாடல்களும் இங்கு முன்னர் நிலவிய யாழ்ப்பாண இராசதானியை மையமாகக்கொண்டு அங்கு இருந்த அரச பாரம்பரிய முறைகள், கலைகள், விளையாட்டுகள், சமய சம்பிரதாயங்கள், சடங்குகள், பாரம்பரிய வீட்டுத் தொகுதிகள், புழங்கு பொருட்கள் என்பனவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், பெண்கள் அக்கால பண்பாட்டில் வகித்த இடங்களும், இங்கு அவர்களுக்காக வழங்கப்பட்ட முக்கியத்துவமும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. பெண்கள் கலைகளில் வகித்துக்கொண்ட பங்கு என்பனவும் அத்துடன் பெண் கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்து பெண்களுக்கான கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதையும் இதன் வாயிலாக அறிந்துகொள்ளலாம். புராண இதிகாசங்கள் வழியாக இம் மக்கள் சீர்மிகு வாழ்வு வாழ்ந்த முறையும் அறியக்கூடியதாக உள்ளது. இங்கு வாழ்ந்த இளைஞர்களின் வீர மிகு விளையாட்டுகளும் பண்பாட்டில் ஆண்களின் வகிபங்கும் இங்கு காட்சி படிமமாக காணப்படுகின்றது. காலத்தால் அழிந்துபோன பல பண்பாட்டு விடயங்களை மீள நினைவுபடுத்தும் விதமாகவும் நிகழ்கால வருங்கால சந்ததியினர் அனைவரும் யாழ்ப்பாணப் பண்பாட்டை காண்பியல் ரீதியாக அறிந்துகொள்ளும் வகையில் இது பண்பாட்டு அடையாளமாகவும் நினைவுச் சின்னமாகவும் விளங்குகின்றது.

இக்கட்டடத்தின் மேற்தளமானது காலனிய காலத்தில் இங்கு தோற்றம் பெற்ற வீட்டு அமைப்பு முறையை நினைவுபடுத்துவதுடன் கூரை அமைப்பும் இவ்வாறான வெளிப்பாடாக அமைந்துள்ளது. இங்கு தாங்கியபடி உள்ள தூண்கள், ஊசிக்கால்கள் என்பன தமிழர் பண்பாட்டிலுள்ள கட்டடங்களை நினைவுபடுத்துவதாக உள்ளது. அக்காலத்தில் பொருளாதார வசதி படைத்தோர் வசதியான வீடுகளை அமைத்து வாழ்ந்தார்கள். இத்தகைய வீடுகளுக்கான மரங்கள், தீராந்திகள் பிற நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டன. ஐரோப்பியர் வருகையை அடுத்து யாழ்ப்பான வீடுகளின் கட்டட அமைப்பில் மாற்றம் ஏற்பட்டது. முன்றலகு வீடுகள், நாற்சார வீடுகள் எனப் பலவகையான வீடுகள் கட்டப்பட்டன. இவை இங்கு நிலவிய காலநிலையைக் கருத்திற்கொண்டும் அமைக்கப்பட்டது. அந்த முறையிலேயே இதன் அமைப்பும் காணப்படுகின்றது. இது ஓடுகளால் வேயப்பட்டுள்ளதுடன், இருக்கைப் பகுதியானது மரத்தினால் செய்யப்பட்டுள்ளதுடன், சுற்றி வர அமைக்கப்பட்டுள்ள மர அலங்கார தட்டியானது காலனிய காலத்தில் இங்கு அமைக்கப்பட்ட வீடுகளில் இவ்வாறான மர அலங்காரத் தட்டி இருந்ததை நினைவுபடுத்துகின்றது.

யாழ்ப்பாணத்திற்கே உரிய தனித்துவமான அம்சமாக விளங்கும் வேலிப் பண்பாட்டை இங்கு காணப்படும் சுற்றுமதில் அமைப்பானது சுட்டி நிற்கின்றது. இது முன்னர் வீடுகளைச் சுற்றி அமைக்கப்பட்ட மதில் அமைப்பைக் காட்டுவதுடன், மதில் மேல் வேல் போன்ற அமைப்பினையுடைய இரும்பு வேலிகள் இருந்ததையும் ஞாபகமுட்டுகின்றது. கட்டடத்தின் நுழைவாயிலானது அக்காலத்தில் வீட்டு வளவின் வாசலுக்குச் சங்கடப்படலை என்ற படலை அமைப்பு முறை அமைக்கப்பட்டது. இந்தப் படலையை முடி மேலே கூரை போடப்பட்டிருந்தது. இந்தக் கூரை சங்கடப் படலையின் பாதுகாப்பிற்கு போடப்பட்டது.. அத்துடன் வழிப்போக்கர்கள் இளைப்பாறிச் செல்லும் நோக்குடனும் அமைக்கப்பட்டது.

சில இடங்களில் சங்கடப்படலைக் கூரை சங்கடப் படலையின் பாதுகாப்பிற்கு போடப்பட்டது. அத்துடன், வழிப்போக்கர்கள் இளைப்பாறிச்செல்லும் நோக்குடனும் அமைக்கப்பட்டது. சில இடங்களில் சங்கடப்படலைக் கூரைக்குக் கீழே வெளிப்புறமாக இருமருங்கும் திண்ணைகள் அமைக்கப்பட்டிருந்தன. இத்திண்ணைகளையே வழிப்போக்கர்கள் பெரும்பாலும் இளைப்பாறுவதற்குப் பயன்படுத்துவார்கள்.

யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் நிலவிய மனிதநேயத்திற்கும் சமூக பொறுப்புணர்விற்கும் இந்த சங்கடப் படலைத் திண்ணைகள் சாட்சிகளாக விளங்கின. இதனை நினைவூட்டும் முகமாகவே இவ்வாயில் காணப்படுகின்றது. அத்துடன், வாயிலைத் திறந்தவுடன் வீதியில் இருப்பவர்கள் பார்க்கும் வண்ணம் இது ஒரு புனித இடம் என்ற உணர்வை உணர்த்தும் விதமாக பரமேஸ்வரர் ஆலயம் முன்பே தெரிவதும் யாழ்ப்பாணப் பண்பாட்டுச் சூழலானது சமய அடிப்படையிலும் மொழி அடிப்படையிலும் கட்டியெழுப்பப்பட்டு அதன் பண்பாடு இன்றும் உலகளவில் பேசும் கருப்பொருளாக உள்ளதென்பதை உணர்த்துகின்றது.

உலகில் நிலவிவரும் பண்பாட்டு மாற்றத்தால் இனங்கள் தமக்கான பண்பாட்டைக் கைவிட்டு வேற்றுப் பண்பாட்டை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இனங்கள் தமக்கான அடையாளத்தை இழக்கின்றன. தமக்கான தனித்துமான பண்பாடு இருந்ததினை அடையாளப்படுத்துவதில் சிறுபான்மை இனக்குழுக்கள் பாரிய சவாலை எதிர் கொள்கின்றது. கால ரீதியாக பண்பாட்டு மாற்றங்களை இவ்வாயில் வழியாக உணர்த்தினாலும் அரசியல் ரீதியான ஒடுக்குமுறை இங்கு நிகழ்ந்தபோது இங்கு நிலவிய பண்பாட்டம்சங்கள் சிற்பங்கள் வாயிலாக வெளிப்படுத்தப்படாமை சிறுபான்மை இனக்குழுக்கள் தமக்கான அடையாளப்படுத்தலில் எதிர்கொள்ளும் நெருக்கடியாகவே கொள்ளலாம். இங்கு நிலவிய பண்பாடு, நுழைவாயில் வழியாக வெளிப்படுத்துவது தமிழரின் உடனிருப்பும் மறைந்துபோன பண்பாட்டும், காலரீதியில் தம்மோடு எடுத்துக்கொண்ட பண்பாட்டு மாற்றத் தையும் எடுத்துச்சொல்கின்றது.

**சி.குகதாசன்**
அரசறிவியல்துறை
யாழ் பல்கலைக்கழகம்



# மிஸ்டர் ஐ.பி.எல். எனப்படும் ரெய்னா ஆடிய தரமான இன்னிங்ஸ்கள்

## சேப்பாக்கம் முதல் செஞ்சூரியன் வரை



**சேப்பாக்கம் முதல் செஞ்சூரியன் வரை வியர்வை சொட்ட சொட்ட ஸ்லீவை தூக்கிவிட்டு ரெய்னா அடித்த இன்சைட் அவுட் ஷாட்களும், மிட் விக்கெட்டில் பறக்கவிட்ட சிக்சர்களும் எவர்க்ரீனாக எப்போதுமே நினைவில் நிற்கும்.**

மிஸ்டர் ஐ.பி.எல், சின்ன தல என ரசிகர்களால் கொண்டாடித் தீர்க்கப்பட்ட சுரேஷ் ரெய்னாவின் கிரிக்கெட் வாழ்க்கை ஏறக்குறைய முடிவுக்கு வந்துவிட்டது. ஐ.பி.எல். மெகா ஏலத்தில் எந்த அணியும் அவரை எடுக்கவில்லை. சென்னை அணியும் கூட கைவிரித்துவிட்டது. ஒரு மாபெரும் சகாப்தமே கண்முன் சரிந்ததைபோல் இருக்கிறது. ஆனாலும் இத்தனை ஆண்டுகளாக சென்னை அணிக்கு அவர் ஆற்றிய பங்களிப்பை யாராலும் மறக்க முடியாது.

2008ஆம் ஆண்டுமுதல் முறையாக நடைபெற்ற இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் சென்னை அணியில் அறிமுகமான சுரேஷ் ரெய்னா மொத்தமாக 205 ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடி ஒரு சதம், 39 அரைச்சதங்களுடன் 5,528 ஓட்டங்களை குவித்துள்ளார். சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக சுரேஷ் ரெய்னா ஆடிய சிறந்த 5 இன்னிங்ஸ்கள் இதோ.

### பஞ்சாப் அணிக்கு எதிராக 87 (25)



ரி-20 போட்டிகளில் ரெய்னா எவ்வளவு அபாயகரமான வீரர் என்பதற்கு இந்த ஒரு இன்னிங்ஸே சான்றாக அமையும். அதிகபட்சமாக ரெய்னா அரைமணிநேரம் கூட க்ரீஸில் நின்றிருக்கவில்லை. ஆனால், எட்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த அந்தச் சம்பவம் இன்னும் ரசிகர்களின் கண்ணுக்குள்ளேயே நிற்கிறது. 2014 சீசனில் ப்ளே ஆஃப்ஸில் பஞ்சாபுக்கு எதிரான போட்டி அது. முதலில் பஞ்சாப் பேட்டிங் செய்து சேவாக்கின் அதிரடியால் 226 ரன்களை எடுத்திருக்கும். சென்னைக்கு இமாலய டார்கெட் நிர்ணயிக்கப்பட்டது. வெல்வது கடினம் என்றே பலரும் நினைத்தனர். ஆனால், ரெய்னா அப்படி நினைக்கவில்லை. வெறியோடு ஆடினார்.

எதிர்கொண்டது 25 பந்துகள்தான், ஆனால், 87 ரன்களை அடித்திருந்தார். ஸ்ட்ரைக் 350ஐ நெருங்கியது. 12 பவுண்டரிகள், 6 சிக்சர்கள் யாராலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வெறியாட்டம் ஆடியிருப்பார். 87 ரன்களில் ரன் அவுட்தான் ஆகியிருந்தார். தொடர்ந்து ஆடியிருக்கும்பட்சத்தில் 15 ஓவருக்குள் டார்கெட்டை சேஸ் செய்து புதிய வரலாறே படைத்திருப்பார்.

### கொல்கத்தா அணிக்கு எதிராக 73 (38)



இப்போதுவரைக்குமே நொக் அவுட் போட்டிகளில் அதிக ரன்கள் அடித்த வீரர்களில் ஒருவராக ரெய்னாவும் இருக்கிறார். ப்ளே ஆஃப்ஸிலும் இறுதிப்போட்டியிலும் வழக்கத்தைவிட கூடுதல் எனர்ஜியோடு வியர்வை சொட்ட சொட்ட ஆடுவார். 2010, 2011 ஆகிய ஐ.பி.எல். சீசன்களை சென்னை வென்றிருந்த நிலையில், ஹாட்ரிக் கிண்ணத்தை வெல்லும் முனைப்போடு 2012 இறுதிப்போட்டியில் கொல்கத்தாவிற்கு எதிராக மோதியது. சென்னை பெரிய ஸ்கோரை எடுக்க மிக முக்கிய காரணமாக இருந்தது ரெய்னாவே.

வெறும் 38 பந்துகளில் 73 ரன்களை எடுத்திருப்பார். ஸ்ட்ரைக் ரேட் 190இற்கும் அதிகம். ப்ரெட் லீ, காலீஸ், நரைன் என வலுவான பந்துவீச்சை +கொண்ட கொல்கத்தாவை நாலாபக்கமும் சிதறடித்திருப்பார். அந்தப் போட்டியில் சென்னை தோற்றிருந்தாலும் இந்த இன்னிங்ஸிற்கு எப்போதும் சிறப்பானதொரு இடம் உண்டு.

### பஞ்சாப் அணிக்கு எதிராக 100 (53)

இதுவும் பஞ்சாபுக்கு எதிரான ஒரு இன்னிங்ஸே. இந்திய அணிக்காக ரி-20





2021 இறுதிப்போட்டியில் தனது குடும்பத்துடன்

போட்டிகளில் முதல் சதத்தை அடித்த வீரர் எனும் பெருமையை பெற்றவர் ரெய்னா. அவர் சென்னை அணிக்காக அடித்திருக்கும் ஒரே சதமும் இதுதான். 2013 ஐ.பி.எல். சீசனில் நடந்த இந்தப் போட்டியில் பஞ்சாபுக்கு எதிராக 53 பந்துகளில் சதமடித்து நொட்-அவுட்டாகவும் இருந்து அசத்தியிருப்பார். 27-2 என்ற நிலையில் சென்னை தடுமாறிக்கொண்டிருந்தபோது இப்படியொரு பொறுப்பான இன்னிங்ஸை ஆடி சென்னையை தூக்கி நிறுத்தியிருப்பார்.

### மும்பை அணிக்கு எதிராக 57 (35)



2010இல் சென்னை அணி முதல் முறையாக ஐ.பி.எல். கிண்ணத்தை வென்றிருந்தது. அந்த சீசனின் இறுதிப்போட்டியில் சென்னை மும்பையுடன் மோதியிருக்கும். அந்தப் போட்டியின் ஆட்டநாயகன் விருதை வென்றவர் சுரேஷ் ரெய்னா. 35 பந்துகளில் 57 ரன்களை எடுத்திருப்பார். தோனியோடு சேர்ந்து 72 ரன்களுக்கு பார்ட்னர்ஷிப் அமைத்திருப்பார். சென்னை அணியின் ஓட்ட எண்ணிக்கையில் ரெய்னாவின் அரைச்சதமே மிக முக்கிய காரணமாக இருந்தது. நொக் அவுட்களில் ரெய்னா பல தரமான இன்னிங்ஸ்களை ஆடியிருந்தாலும் இந்த இன்னிங்ஸ் மேட்ச் வின்னிங் இன்னிங்ஸாக மட்டுமல்லாமல் சென்னை அணிக்கு முதல் முறையாக ஐ.பி.எல். சம்பியன்ஸ் என்கிற பட்டத்தை பெற்றுக்கொடுத்த இன்னிங்ஸ் என்பதால் கூடுதல் சிறப்பானது.

### ராஜஸ்தான் அணிக்கு எதிராக 98 (55)



2009 ரி-20 போட்டிகளில் ரெய்னா உச்சக்கட்ட ஃபார்மில் இருந்த காலகட்டம். இந்திய அணியின் ரி-20 சென்சேஷனாகவும் கலக்கிக்கொண்டிருந்தார். இந்தச் சமயத்தில் 2009 ஐ.பி.எல். போட்டிகள் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்றிருந்தன. அங்கே செஞ்சூரியனில் நடந்த ஒரு போட்டியில் ரெய்னா வெளுத்தெடுத்திருந்தார். ராஜஸ்தானுக்கு எதிரான அந்தப் போட்டியில் 55 பந்துகளில் 98 ரன்களை அடித்திருந்தார். முதல் சதத்தை அடிக்கும் வாய்ப்பு இரண்டே ரன்களில் பறிபோயிருந்தது. ஆனால், ஒரு சிறப்பான இன்னிங்ஸ் அது. சென்னையே 164 ரன்களைத்தான் அடித்திருக்கும். அதில் 98 ரன்களை ரெய்னா மட்டுமே அடித்திருந்தார். சென்னை அந்தப் போட்டியைச் சுலபமாக வென்றிருக்கவும் செய்தது.

(நன்றி - விகடன் ஸ்போர்ட்ஸ்)

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# T20 தொடரையும் முழுமையாகக் கைப்பற்றும் முனைப்பில் இந்தியா!



சுற்றுலா மேற்கிந்திய தீவுகள் அணியுடனான இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் இறுதி ஓவரில் வெற்றியை ருசித்த இந்திய அணி இருபதுக்கு 20 தொடரையும் தன்வசப்படுத்தியது.

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியானது தலா மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 சர்வதேச தொடர்களில் விளையாடுவதற்காக இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. முதல் தொடரான ஒருநாள் தொடரை இந்திய அணி 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றிய நிலையில், தற்போது இருபதுக்கு 20 சர்வதேச தொடரையும் 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றும் முனைப்பில் இந்திய அணி இன்று களமிறங்குகிறது.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை இழந்து 186 ஓட்டங்களை சேர்த்தது. 187 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 178 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதனால் இந்திய அணி 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று இருபதுக்கு 20 தொடரைக் கைப்பற்றியது. அந்த வகையில் இன்று அதே மைதானத்தில் நடைபெறுகின்ற மூன்றாவதும், இறுதியுமான போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றிபெற்று முழுமையான வெள்ளையடிப்பிலிருந்து தப்பிப் பிழைக்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

# தடையின் பின்னர் இலங்கை அணிக்குத் திரும்பும் டிக்வெல்ல ?



இம்மாத இறுதியில் இந்திய அணியுடன் நடைபெறவுள்ள இருதரப்பு தொடருக்கான இலங்கை அணியில் விக்கெட் காப்பாளர் நிரோஷன் டிக்வெல்ல இடம்பெறுவாரென தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்சமயம் அவுஸ்திரேலியாவுக்கு இருதரப்பு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அவுஸ்திரேலிய அணியுடன் 5 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடி வருகிறது. இதுவரையில் 4 போட்டிகள் நிறைவுபெற்றுள்ள நிலையில் ஐந்தாவதும், இறுதியுமான போட்டி இன்று நடைபெறுகிறது.

குறித்த தொடர் நிறைவடைந்தவுடன் 24ஆம் திகதி இந்திய அணியுடனான தொடர் ஆரம்பமாகுவதால் இலங்கை அணி அங்கிருந்து நேரடியாக இந்தியா செல்கிறது. இந்நிலையில், இலங்கையில் நடைபெற்றுவரும் நெஷனல் சுப்பர் லீக் தொடரில் மிகச்சிறந்த திறமையை வெளிப்படுத்திவரும் நிரோஷன் டிக்வெல்ல அணியுடன் இணைந்துக்கொள்வாரென தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த வருடம் நடைபெற்ற இங்கிலாந்து தொடரின்போது, உயிரியல் பாதுகாப்பு வலய விதிமுறையை மீறிய குற்றச்சாட்டில் நிரோஷன் டிக்வெல்ல, தனுஷ்க குணதிலக்க மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோர் கிரிக்கெட் சபையின் தடைக்கு முகங்கொடுத்திருந்தனர். மெண்டிஸ் மற்றும் குணதிலக்க ஆகியோர் அவுஸ்திரேலிய தொடருக்கான குழாத்தில் இணைக்கப்பட்ட நிலையில், தற்போது நிரோஷன் டிக்வெல்ல முதன்முறையாக இலங்கை அணியில் இடம்பெறுகிறார்.

நிரோஷன் டிக்வெல்லவுடன், இந்திய டெஸ்ட் தொடருடன் ஓய்வை அறிவித்துள்ள சுரங்க லக்மால், அஞ்சலோ மெத்யூஸ், திமுத் கருணாரத்ன மற்றும் லஹிரு திரிமான்ன ஆகியோர் டெஸ்ட் தொடரில் விளையாடுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது. இவர்களுடன் தனஞ்ஜய டி சில்வா, இளம் வீரர் அஷைன் டேனியல், சாமிக்க குணசேகர போன்றோரும் இணைக்கப்படுவர்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆஸி. சென்ற இலங்கை அணி வெறுங்கையுடன் திரும்புமா?

## கடைசி T20 போட்டி இன்று



இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்தாவதும், இறுதியுமான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டி இன்று மெல்பேர்னில் இலங்கை நேரப்படி முற்பகல் 11.40 மணிக்கு ஆரம்பமாகும் நிலையில், இலங்கை அணி இந்தப் போட்டியிலாவது ஆறுதல் வெற்றியொன்றைப் பெறுமா என்கிற கேள்வியும் நிலவி வருகிறது. தசுன் சானக்க தலைமையிலான இலங்கைக் கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. நேற்று முன்தினம் மெல்பேர்னில் நடைபெற்ற நான்காவது போட்டியிலும் ஆஸி. அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் இலகு வெற்றியொன்றைப் பதிவு செய்தது. போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 139 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. 140 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய ஆஸி. அணி 18.1 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்த நிலையில் வெற்றி இலக்கை அடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக கிளென் மெக்ஸ்வெல் தெரிவானார்.

குறித்த தொடரில் இலங்கை அணி 2ஆவது போட்டியில் மாத்திரம் துடுப்பாட்டத்தில் சற்றுப் பிரகாசித்து போட்டியை சமநிலைப்படுத்தியது. எனினும், இலங்கை அணி சுப்பர் ஓவரில் அந்தப் போட்டியிலும் தோல்வியைத் தழுவியது.



காரைக்கவி



# சீத்துவக்கேடு 175



உப்பிடி கதைச்சுக்கொண்டு இருக்கேக்கை எனக்கொரு சந்தேகம் வர அப்புவிட்டைக் கேக்கவும் பயமாக் கிடந்தது எண்டாலும் கேக்காமலும் இருக்கேலாமக் கிடந்துது. பிறகு ஒரு மாதிரி அப்பு நீயெணை உவர் வீரபத்திரர் சிவபெருமானின்ரை நெத்திக் கண்ணிலை இருந்து வந்தது எண்டு சொன்னனி எல்லே.

ஆனால், அவர் சிவபெருமானின்ரை சடையிலிருந்து பிறந்தவர் எண்டு ஒரு பிரசங்கியும் அவர் சிவபெருமானின்ரை வியர்வையிலிருந்து பிறந்தவர் எண்டு இன்னொரு பிரசங்கியும் சொன்னவையாம் எண்டு சைவம் தேர் முட்டியில வைச்சு சொன்னவர் எண்டன்.

உடன அப்பு எடே எங்கட சமயம் எப்ப உருவானதெண்டே ஆருக்கும் தெரியாது ஆராச்சி செய்தவங்கள் ஒரு ஐயாயிரம் வருசத்துக்கு முந்தி வந்திருக்கும் எண்டுறாங்கள் அவங்களாலையும் சரியாச் சொல்ல ஏலாமல் கிடக்கு.

அப்ப இவ்வளவு நீண்ட காலத்துக்கையும் உவன் சைவம் மாதிரி அரைகுறையா படிச்சுப் போட்டு நாலுபேர் கேக்கினம் எண்டதுக்காக கண்டதையும் சொல்லுற உந்த பிரசங்கம் செய்யிறவங்கள் மாதிரி அவங்கள் இவங்கள் எண்டு எத்தினை பேர் எத்தினை கதையைச் சொல்லி இடையில செருகி இருப்பினம் கண்டியோ எண்டார்.

பேந்தும் உதுதான் எங்கட சமயத்தில இருக்கிற மிகப் பெரிய பிரச்சினை எண்ட அப்பு உப்ப உங்க ஒவ்வொருத்தனும் ஆளாளுக்கு ஊரூருக்கு ஒவ்வொண்டை சொல்லுவாங்கள் பிறகு அதுக்கு ஒரு சபை சங்கம் எண்டு நாலுபேரை கூட்டி வைச்சு தாங்கள் சொல்லுறதுதான் சரி தாங்கள் எழுதிறதுதான் சரி எண்டுவாங்கள் எல்லே .

அதைப் பிறகு நாலுபேர் அங்கை இஞ்சை எண்டு காவிக் கொண்டு திரிய பிறகு அதுவே உண்மையாப் போம் எண்டார். அதைமாதிரி அந்தக்காலத்தில ஆரியன் திராவிடன் எண்டு ஆளாளுக்கு போட்டி போட்டு அது இது எண்டு உப்படி இடையில கன விசயங்களை செருகிப்போட்டாங்கள் எண்டார் அப்பு.

பேந்து நாங்கள் உதுகளுக்கு எல்லாம் எடுபட்டு எங்கட மண்டையை குழப்பமா எங்கட நம்பிக்கைகளிலை கவனமா இருக்கு வேணும் எண்டார்.

உப்பிடி அப்பு நம்பிக்கையா இருக்க வேணும் எண்டு சொல்லவும் வாயில வைச்சிருந்த போயிலை எச்சிலைப் போய் வேலிக்கரையில துப்பிப் போட்டு வந்த ஆச்சி உந்த நம்பிக்கையின்ரை அடிப்படையிலதான் எங்கட வீட்டிலை நிக்கிற ஆடு மாடு நாயளுக்கு ஏதும் வருத்தம் வாதை வந்தா நாங்கள் வீரபத்திரருக்குத்தான் நேத்தி வைக்கிறனாங்கள் எண்டு சொன்னா.

உப்பிடி நாங்கள் கதைச்சுக்கொண்டு இருக்கேக்கை எங்கட ஒழுங்கை முகரியில லவுட் ஸ்பீக்கரிலை என்னமோ சொல்லிக் கேக்கவும் கொஞ்சம் கத்தாதையுங்கோ எண்ட அப்பு காதிலை கையை வைச்சு ஒழுங்கைப் பக்கமா தலையைத் திருப்பி கேக்கத் தொடங்கினார்.

முந்தி எங்கட ஊரிலை கணேசன் எண்டவரிட்டைத்தான் ஒரே ஒரு லவுட் ஸ்பீக்கர் செற்று இருந்தது அதால ஆக்கள் அவரை லவுட் ஸ்பீக்கர் கணேசன் எண்டு சொல்லுறவை .

ஊரிலை கோயில் திருவிழாக்களோ சாமத்திய வீடுகளோ கலியாண வீடுகளோ வீடு குடி பூரலோ பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டியளோ கலை விழாக்களோ உவற்றை செற்றைத் தான் ஆக்கள் பிடிப்பினம்.

ரெண்டு பெரிய நீட்டுக் குழாயளும் ரெண்டு கட்டையான சப்பட்டைக் குழாயளும் இருந்தது .உந்த நீட்டுக் குழாயளைப் பாத்தா கொஞ்சம் மெலிஞ்சு நீண்ட சுரக்காய் மாதிரி இருக்கும்.

சப்பட்டைக் குழாயளைப் பாத்தா வெட்டின பாதிப் பூசணிக்காய் மாதிரி இருக்கும். உந்த ஸ்பீக்கர்களின்ரை பின்பக்கத்தில பெண்டுகளின்ரை கொண்டை மாதிரி யுனிட்டுகள் பூட்டி இருக்கும்.

உந்தக் குழாயளோட ரெண்டு மூண்டு லொறி பற்றியளும் ஒரு கிராமப்போன் பெட்டியும் ஒரு மரப்பெட்டி நிறைய பாட்டுத் தட்டுகளும் ரெண்டு மூண்டு மைக்குகளும் ஸ்ராண்டுகளும் அவரிட்டை இருந்தது.

கொஞ்சம் கிட்ட இடங்கள் எண்டால் ஒற்றைத் திருக்கல் வண்டில்லை உந்த சாமான்களை ஏத்திக்கொண்டு போவார் கொஞ்சம் தூர இடங்கள் எண்டால் காரிலை ஏத்திக்கொண்டு போவார்.

போற இடங்களிலை பெரிய குழாயளை அரைப்பனை உயரத்திலையும் சப்பட்டைக் குழாயளை கொஞ்சம் உயரம் குறைஞ்ச மரங்களிளையும் கட்டுவார். பிறகு வயர்களைக் கட்டி இழுத்து சின்ன சூட்கேஸ் மாதிரி இருக்கிற கிராமப் போன் பெட்டியோடையும் பற்றியளோடையும் முடிவார்.

அவரைப் பிடிக்கிற ஆக்கள் முதலே அவரிட்டை என்ன என்ன பாட்டுப் போட வேணும் ஒண்டு சொல்லிப் போடுவினம். கணேசன் கிராமப்போன் பெட்டியை என்னமோ நகைப் பெட்டியை திறக்கிற மாதிரி மெல்லமா திறந்து போட்டு பாட்டுத் தட்டுகள் இருக்கிற பெட்டியுக்கை இருந்து பாட்டுத் தட்டுகளை வெளியில எடுப்பார். பாட்டுத்தட்டுகள் ஒரு சதுரமான பேப்பர் உறையுக்கை இருக்கும்.

பேப்பர் உறையில அந்த தட்டில இருக்கிற பாட்டு விபரங்கள் எல்லாம் போட்டிருக்கும். உப்பிடி தட்டை எடுத்தவர் உறையுக்கால வெளியில எடுப்பார்.

பிறகு அப்பிடியே கிராமப்போன் பெட்டியில தோசைக்கல்லு மாதிரி சுத்திக் கொண்டிருக்கிற ஒரு தட்டில மெல்ல வைச்சுப் போட்டு ஒரு பக்கமா ஊசி மாதிரி கொழுவி வைச்சிருக்கிற சின்ன பிடி ஒண்டை ஓடுற நண்டைப் பிடிக்கிற மாதிரி மெல்ல பிடிச்சு இழுத்து ஓடுற தட்டின்ரை ஓரத்தில வைக்க ஸ்பீக்கர்ல பாட்டு கேக்கும். அவரை நாங்கள் ஒரு விஞ்ஞானி மாதிரிப் பாப்பம்.

(தொடரும்)

# இவ்வார இராசி பலன்கள்



வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

### மேஷ ராசி அன்பர்களே!

வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வீண்செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. மற்றவர்களின் தலையீடு காரணமாக குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். தந்தையுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்ளவும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் அதற்கேற்ப சலுகைகளும் கிடைக்கும். அதிகாரிகளின் ஆதரவு உற்சாகம் தரும். வியாபாரத்தில் இலாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை புதிய இடத்துக்கு மாற்றவோ அல்லது விரிவுபடுத்தவோ நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். பெண்களுக்கு மனதில் அவ்வப்போது லேசான சோர்வு ஏற்படக்கூடும். அலுவலகம் செல்பவர்களுக்கு சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

### ரிஷப ராசி அன்பர்களே!

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். வாழ்க்கைத்துணைவழியில் பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். திருமண வயதில் உள்ள பெண் அல்லது பிள்ளைக்கு திருமண முயற்சிகளை மேற்கொள்ளலாம். அலுவலகத்தில் கடுமையாக உழைத்தாலும் நல்ல பெயர் கிடைக்கும் என்று சொல்லமுடியாது. அலுவலகப்பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சிறிய தவறுகூட பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தலாம். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், அனுபவமுள்ளவர்களிடம் ஆலோசனை கேட்டு செய்யவும். பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம்.

### மிதுன ராசி அன்பர்களே!

பொருளாதார நிலை நல்லபடி இருக்கும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது. கடந்த சில நாட்களாகக் கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் ஏற்படும். அடிக்கடி ஏற்படும் எதிர்பாராத அலைச்சல்களால் உடல் அசதியும் சோர்வும் உண்டாகும். அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு இடமாற்றம், பதவி மாற்றம் கிடைக்கும் என்றாலும் அதனால் நன்மையே நடக்கும். அதிகாரிகள் ஆதரவாக இருப்பார்கள். வியாபாரத்தின் காரணமாக சிலர் தொலைதூர பயணங்களை மேற்கொள்ள நேரும். பெண்களுக்கு உறவினர்கள் வருகையால் பொறுப்புகள் அதிகரிக்கவும், அதன் காரணமாக அசதியும் சோர்வும் ஏற்படவும் கூடும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் சில சலுகைகள் கிடைக்கும்.

### கடக ராசி அன்பர்களே!

பொருளாதார நிலைமை திருப்தி தருவதாக இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நி யோன்யம் அதிகரிக்கும். குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணங்களை மேற்கொள்ள வேண்டி வரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மேலதிகாரிகளை அணுகும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும். சிலர் வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றி விரிவுபடுத்துவீர்கள். சக வியாபாரிகளால் ஏற்பட்ட மறைமுக இடையூறுகள் விலகும். பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம் இது. வேலைக்குச் செல்லும் பெண்கள் அலுவலகத்தில் கூடுதல் வேலை செய்யவேண்டியிருக்கும். ஆனாலும், சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள்.

### சிம்ம ராசி அன்பர்களே!

பல வகைகளிலும் அனுகூலமான வாரம். வாரத் தொடக்கத்தில் மட்டும் புதிய முயற்சியை தவிர்க்கவும். குடும்பம் தொடர்பான முக்கிய விஷயத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. தந்தையுடன் அனுசரணையாக நடந்துகொள்வது நல்லது. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் அதற்கேற்ற சலுகைகளும் கிடைக்கும் என்பதால் உற்சாகமாகவே காணப்படுவீர்கள். வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்க வேண்டிவரும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பங்குதாரர்கள் உங்களுடைய முயற்சிகளுக்கு உதவிகரமாக இருப்பார்கள். பெண்களுக்கு பிரச்சினை இல்லாத வாரம். கணவரின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தரும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள்.

### கன்னி ராசி அன்பர்களே!

பணவரவுக்கு குறைவில்லை. சகோதர வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் கொஞ்சம் அனுசரித்துச் செல்லவும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும். சிலர் கடன் வாங்கவும் நேரிடும். பயணங்களின்போது கொண்டு செல்லும் உடைமைகளைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும். தாயாரின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்ச்சியடைவீர்கள். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வுடன் சலுகைகளும் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் விற்பனையை அதிகரிப்பதில் ஆர்வத்துடன் ஈடுபடுவார்கள். சக வியாபாரிகள் அனுசரணையாக இருப்பார்கள். அவர்களால் ஆதாயமும் கிடைக்கும். பெண்களுக்கு சற்று பொறுப்புகள் கூடுவதால் சோர்வு உண்டாகும். பணவரவு திருப்தி தரும்.

### துலா ராசி அன்பர்களே!

வாரத் தொடக்கத்தில் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணியின் காரணமாக சிலருக்கு வெளியூர்ப் பயணம் செல்ல நேரும். பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். அநாவசிய செலவுகள் எதுவும் இருக்காது. பழைய வாகனத்தை மாற்றி புதிய வாகனம் வாங்குவீர்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் உங்கள் திறமைக்கு உரிய அங்கீகாரமும் அதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் சுமுகமான போக்கு ஏற்படும். பங்குதாரர்கள் உதவிகரமாக இருப்பார்கள். விற்பனையைப் பெருக்குவதில் பணியாளர்கள் உற்சாகமாக ஈடுபடுவார்கள். பெண்களுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். அலுவலகத்தில் சக ஊழியர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும்.

### விருச்சிக ராசி அன்பர்களே!

எதிர்பார்த்ததைவிடவும் வருமானம் சற்று குறைவாகத்தான் இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே சிறு சிறு வாக்குவாதங்கள் ஏற்படும். அனுசரித்துச் செல்வது நல்லது. உங்கள் முயற்சிகளுக்கு நண்பர்கள் பக்கபலமாக இருப்பர். சிலருக்கு உறவினர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். அலுவலகத்தில் உங்கள் மீதான நிர்வாகத்தினரின் அலட்சியப் போக்கு மாறும். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். பல வகைகளிலும் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக மிகவும் உழைக்கவேண்டி இருக்கும். பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். ஆனால், எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

### தனுசு ராசி அன்பர்களே!

குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். பொருளாதார வசதி திருப்தி தரும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல்நலம் சீராகும். கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்பார்த்த சலுகை சற்று இழுபறிக்குப் பிறகு கிடைக்கும். அதிகாரிகள் சில நேரங்களில் கண்டிப்பு காட்டினாலும், ஆதரவாகவும் இருப்பார்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் கிடைக்காது. புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். சக வியாபாரிகளால் மறைமுக இடையூறுகள் ஏற்படக்கூடும். பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும்.

### மகர ராசி அன்பர்களே!

பொருளாதார வசதிக்குக் குறைவில்லை. செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். நெருங்கிய உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். நீண்டநாட்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். சிலருக்கு திடீர் பதவி உயர்வு கிடைக்கக்கூடும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் இப்போது வேண்டாம். சக வியாபாரிகளின் பேச்சைக் கேட்டு புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். பங்குதாரர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும். பெண்களுக்கு அதிக பொறுப்புகளால் உடல் அசதி உண்டாகும்.

### கும்ப ராசி அன்பர்களே!

வாரப் பிற்பகுதியில் நீங்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்து சேரும். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். குடும்ப விஷயத்தில் மற்றவர்களின் தலையீட்டை அனுமதிக்காதீர்கள். சிலருக்கு நீண்டநாளாக நிறைவேற்றாமல் விடுபட்ட குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வேலைக்கு விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும். ஏற்கெனவே வேலையில் இருப்பவர்களுக்கு நிர்வாகத்தினரின் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். அனுகூலமாக முடியும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். பெண்களுக்கு செலவுகள் கூடுவதால் சற்று சிரமப்பட்டே சமாளிக்க வேண்டி வரும்.

### மீன ராசி அன்பர்களே!

அதிர்ஷ்டம் தரும் வாரம். எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு வெளியூர்ப் பயணமும் அதனால் ஆதாயமும் ஏற்படும். திருமண வயதில் உள்ள மகன் அல்லது மகளின் திருமணம் தொடர்பான முயற்சிகள் சாதகமாக முடியும். அலுவலகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள். சிலருக்கு பணியிடத்தில் மாற்றம் ஏற்படக்கூடும். வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும். தேவையான கடனுதவியும் கிடைக்கும். பங்குதாரர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்து கொள்ளவும்.

தமிழன் தொடர்கதை

# நந்தினிகளுக்கு ஆபத்து!



ஜெ. கேதரன்

அத்தியாயம் 51

அந்தப் பயங்கரக் கொலை நடந்தபோது நேரம் கிட்டத்தட்ட இரவு ரெண்டோ ரெண்டரையோ! எப்படி ஓடியும், என்னால் தடுக்க முடியவில்லை. ஆள்நடமாட்டமற்ற அந்த வனாந்தர மலைப்பாதையில், அந்த மேட்டில், அவளின் தலையும் உடலும் துண்டாகி விழுந்த அந்தக் காட்சி. ஐயோ!

அவளுக்கு நான் எவ்வளவோ சொன்னேன். எப்படியெல்லாமோ தடுத்தேன். அவள் கேட்கவில்லை. அஞ்சு நிமிஷத்துக்குள் அத்தனையும் முடிந்துவிட்டது. கடைசியில் குழந்தையையும் அவன் கொண்டுபோய்விட்டான். இவர்கள் தங்கச்சங்கிலியைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வாற கோபத்துக்கு, இவர்களையெல்லாம் துண்டு துண்டாக வெட்டப்போகிறேன்.

நடந்த கொலைக்கு இவர்கள் எல்லோருமே உடந்தை. எல்லோரும் சேர்ந்து செய்த சதி. இல்லையென்றால், அத்தனைபேரில் ஒருவர்கூட கொலையைத் தடுக்காமல், வேடிக்கை பார்த்திருப்பார்களா? இப்பொழுது என்னில் பொய்ப்பழி போடுகிறார்கள். நான் போதைப்பொருள் பாவித்தேனாம். பாவிகள்!

ஆனால் ஒன்று! நிச்சயம் இதற்கெல்லாம் நான் பழிவாங்கத்தான் போகிறேன். இருந்து பாருங்கள். சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் பிடித்து பூண்டோடு அழிக்கப்போகிறேன். அதற்குப்பிறகு, என்னவென்றாலும் நடக்கட்டும்.

ஆமாம்! உண்மையில் அன்று என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? யாராவது ஏதாவது சொன்னார்களா? சொல்லியிருந்தால் அதை நம்பிவிடாதீர்கள். எல்லாம் சுத்தப்பொய். புனைசுருட்டு.

உண்மையில் அன்று நடந்ததை நான் சொல்கிறேன்.

வெள்ளி பௌர்ணமி, சனி, ஞாயிறு மூன்றுநாளும் தொடர் விடுமுறை. ஆகவே, வியாழன் மாலைநேர பஸ்ஸில் ஊருக்குப் புறப்பட்டேன். அந்திப்பிரயாணம். மலைப்பாதை. எங்காவது ஒரு ஊர், எங்காவது சில வீடுகள். மற்ற எல்லாமே பெருங்காடும் கரு மலையும்.

என்னைப்போலவே எக்கச்செக்கப்பேர் வீடுகளுக்கு ஓடிக்கொண்டிருந்ததால், பஸ்சில் கடும் நெரிசல். இருக்க இடம் கிடைத்தது 'கடவுள் புண்ணியம்'. அதைவிடப் புண்ணியம், எனக்குப்பக்கத்தில் அந்த யாரோ ஒரு 'அவள்'. (என்னவென்று சொல்வதம்மா வஞ்சியவள் பேரழகை!).

'ஆஹா! இவளா!? இன்று காலை நகைக்கடையில் கண்டடேனே... அவளல்லவா! நான்கூட, வேண்டுமென்றே பக்கத்துக் கதிரையில் போய் அமர்ந்து நகை வாங்கினேனே! இப்போது, அவள் எனக்குப் பக்கத்திலா? ஐயோ... ஆண்டவா! என்னே உன் கருணை!' பறக்கத்தொடங்கிய மனதை இழுத்துப்பிடித்து இருத்தினேன்.

எனக்குள், 'கங்கண கணவென கிண்கிணி மணிகளும் ஒலிக்க ஒலிக்க...' பஸ் ஓடத்தொடங்கியது. மலை வளைவுகளில் திரும்பியபோது, குலுங்கியபோதெல்லாம் ஜாதகத்தில் சுக்ரதிசை வந்து வந்து போனது. 'சாலை வளைவுகளுக்கும் சடன் ப்ரேக்குகளுக்கும் நன்றி'. மனம், 'கன்னத்தில் கன்னம் வைக்க ஒத்துக்கோ ஒத்துக்கோ...' என்றது. பேசவேண்டும்!'

'எப்படி ஆரம்பிப்பது?'

'ஆஹ்... இருக்கவே இருக்கிறது தமிழ்ப் பண்பாடு, விருந்தோம்பல்!'

உள்ளே வைத்திருந்த, 'கடலைப்' பக்கெட்டை எடுத்துப் பிரித்தேன்.

"எக்ஸ்யூஸ்மீ..."

அவள் திரும்பினாள்.

நான் நீட்டிய கடலைப்பக்கெட்டைப் பார்த்தாள். புருவங்களுயர்ந்தன. சின்னொரு புன்னகை கிடைத்தது. "இல்ல, பரவாயில்ல. தாங்க்ஸ்."

நான் விடவில்லை. "மயக்கமருந்து ஏதும் போட்டிருப்பனெண்டு பயமோ?" சிரித்தேன்.

அவளும் சிரித்தாள். "அப்பிடியில்லை. நீங்க சாப்பிடுங்கோ. பரவாயில்ல."

"இல்ல, பயப்பிடாம எடுங்கோ மருந்தொண்டும் போடேல்ல. வேணுமெண்டா சாப்பிட்டுக் காட்டறன். ஹிஹி.."

மீண்டும் ஒரு புன்னகை.

எனது, விக்கிரமாதித்த முயற்சிகளுக்குப் பிறகு ஒருவாறாக எடுத்தாள்.

(அப்பாடா, சக்ஸஸ்!) "நீங்கள் எந்த இடம்?"

"வவுனியா. நீங்கள்?"

"முல்லைத்தீவு."

"ஆஹ்.." மறுபடியும் மௌனம்.

நான் விடவில்லை. "இஞ்ச எங்க இருக்கிறீங்கள்? என்ன செய்யிறீங்கள்?"

"ட்ரெய்னிங்க் கொலிஜ்ல ஃபெஸ்ட் இயர். நீங்கள்?"

"நான் யூனிவர்சிற்றி. ஃபோத் இயர்."

மீண்டும் மௌனம்.

நான் விடுவேனா? "உங்கட பேரென்ன எண்டு சொல்லேல்ல?"

புன்னகைத்தாள்.

"நந்தினி."

"நந்தினியா...? ஆஹஹா என்ர பேர் என்ன தெரியுமா?"

"என்ன?"

"பழு.வே...ட்.டரையர்."

ரெண்டுபேருமே சிரித்தோம். நான் அவளைத் திரும்பிப்பார்த்தேன்.

சற்றுத்தள்ளி நின்றிருந்த ஒருவன் சட்டென்று வேறுபக்கம் திரும்பினான். 'எங்களையே பார்த்துக்கொண்டு நின்றிருக்கிறான்!? எங்களையா? நந்தினியை மட்டுமா?' அவன் இடையில் எங்கோ ஏறியவன். ஏறிய நேரத்திலிருந்தே பார்வை சரியில்லை. 'அவனிடம் ஏதோவொரு தவறு இருக்கிறது!'

ஆனால் அது தெரியாத அவள், "ஆஹ்...?! ஆனால், உங்களுக்கு வந்தியத்தேவன் எண்டு வைச்சிருந்தால் பொருத்தமாயிருந்திருக்கும்." என்றுவிட்டுச் சிரித்தாள்.

"ஏன்? ஓவரா வழியிறனா?" (இப்பொழுதும் அவன் திரும்பிப் பார்த்தான்.)

"ஐயோ! நான் சும்மா ஜோக்கா சொன்னன். ஆனா, உங்கட பேர் எனக்குத் தெரியும்."

நான் அதிசயமாகப் பார்த்தேன். "தெரியுமா? அப்ப, சொல்லுங்கோ பாப்பம்."

"ஆதித்தன்."

திடுக்கிட்டுப்போனேன்.

"என்ன? கடுமையா ரென்ஷனாகிறீங்கள்?"

"உங்களுக்கு எப்பிடி என்ர பேர் தெரியும்?"

"ஆஹ்ஹ்! சாத்திரம் பார்த்தன். ஹிஹி"

"சீரியஸா கேட்கிறன். உங்களுக்கு எப்பிடி என்னைத் தெரியும்?"

"ஹஹா..இ கனக்க யோசிக்காதேங்கோஇ இப்ப கொஞ்ச நேரத்துக்கு முதல்தான் தெரியும்."

"விளங்கேல்ல?!" (அவன் நந்தினியைத்தான் பார்க்கிறான்.)

"ஐயோ.. கடவுளே! இதுக்கேன் இப்பிடி ரென்ஷன்? நீங்கள் டிக்கெட் எடுக்கேக்கஇ கையில பேர்ஸ் இருந்தது. பேர்ஸில உங்கட ஐ.சீ இருந்தது. பாத்தன். ஐ.சீல உங்கட நேம் இருந்தது."

தொடரும்...

( 1 - 8 )

(மக்களின் வாழ்க்கை சூழல்)

(கதை தெளிவூட்டம்)

களிமண் சுவரு
கொண்ட
குடிசைகளே
குடியிருப்பு..

கோணிப்பையி
சாக்கோடு...
கம்பளியும் கொடுத்துவிட்டு
கூதலுக்கு வேணுமின்னு
சூட்சுமமா
சொன்னாங்க....

வயிறு வளர்த்துவிட
கேப்பக்கஞ்சி
கெடச்சிருச்சி....

கெடச்சத கொண்டு
நல்லா வாழ்க்கை ஒன்னு
வாழ்ந்து விட
இங்க வந்து படிச்சிக்கனும்
இந்த மக்கள்கிட்ட
தெரிஞ்சிக்கனும்...

கூந்தலில வாடி போயி
இங்க செத்தவிங்க
பலபேரு. களிமண்
குடிசைக்கூட செல நேரம்
புத்திய காமிச்சிரும்.

மழைக்கொஞ்சம்
மனசுவச்சா.
களிமண் சுவரு எல்லாம்
மண்ணோட
மண்ணாப்போகும்...

பஞ்சம் பிழைக்க வந்து
பகுமானம்
பாக்கலாமா. உசுர
பிடிச்சிக்கிட்டு
கொஞ்ச நாளு
வாழ்ந்துவிட்டா எல்லாரும்
நெனைச்சாங்க.....

கோப்பிக்கால
வாழ்க்கையில
மக்களுக்கு போர்களந்தா
வாழ்க்கையாச்சி....

இப்படி சோதனைகள்
கொண்ட ஒரு வாழ்க்கைய
வாழ்ந்தாலும் அவங்க
கொண்டு
வந்த பழக்க
வழக்கங்களும்
பண்பாட்டு நெறிகளும்
இங்கயும் வாழ்ந்துச்சி....

ரோதமுனி, மாடசாமி,
கம்பிச்சாமி, மதுரைவீரன்,
காளியென குலதெய்வ
சாமிகளும்
அங்கங்கே குடியேறி
தப்பிசையும்
கூத்துக்களும்..
அதுவாவே வளந்துச்சி.....

வேலையில கெடுபிடுகள்
காலம்பர ஒருபக்கம்
விடியும் முன்ன
காது சவ்வ கிழிக்க வரும்
துயிலெழுப்பும் சங்கு சத்தம்

வயிறு நனையாட்டியும்
அவிங்களுக்கு
கவலையில்ல

வேல நடந்துவிட்டா
நமக்கு போதுமின்னு
அட்டையப்போல்
உடனிருந்து
உழைப்ப உறிஞ்சாங்க..

சூரியன் உதிக்கும்
நேரம் மலைபக்கம்
போனாங்கன்னா
அந்தி சாயும் நேரத்துல
குடிசை வந்து சேந்தாங்க

சொந்தங்கள பிரிஞ்சிவிட்டு
மனசுமையில்
மனசு கல்லாகி
கிடந்தாலும்
அவங்க செய்யிகிற
வேளையில குத்தங்கொற
ஒன்றுமில்ல.....

கங்காணி ரூவத்துல
பெருத்த ஒரு
கொள்ளக்கார பாவிதானே
அவங்கக்கூட
வாழ்ந்து வந்தா....

அந்த அக்கப்போரு
பெரும்பாடு இந்த
பாவப்பட்ட மக்கள் சனம்
படும் பாட்ட பாத்தமின்னா
நாமக்கூட
தெரிஞ்சிக்குவம்....

சத்தம் ஏதும்
போடாம காதகொடுத்து
நல்லா
கேட்டுப்பாத்துக்குங்க....

டண்டனக்கா
சத்தம் ஒன்னு நல்லாவே
கேட்கிறதே அது நம்பலோட
பறையிசையே...

பறையடிக்கும் வடிவேலு
இங்கேதான் எங்கேயோ
பறையோட வளம்
வாறார்...
அவரு கத என்னானு
அடுத்த வாரம்
பாத்திடுவோம்......

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

தொடரும்...

எம். ராமதாஸ்
இறம்பொடை.



தமிழன் சிறுகதை

# அப்பா வேணும்

ஸாலிஹ் அஸீம்

என்ன மச்சான் கேள்வி, விஷயம் பட்டியா என்று எனது நண்பன் புதிரொன்றினை போட்டதும் நான் பதிலுக்கு,

என்ன மச்சான் எனக்கு தெரியாதே என்றேன். அவன் என்னுடன் ஒன்றாகப் படித்தவன் நம்மோடு படித்தவர்களுக்கு ஏதாவது ஒன்றென்றால் உடனே அழைப்பெடுத்து சொல்லி விடுவான்.

மச்சான் நாதன் இறந்துட்டானாம். இரவு பத்து மணிக்கெல்லாம் நல்லாதான் கதைச்சுக் கொண்டிருந்தானாம். திடீரென்று நெஞ்சு வலி வந்ததாம் உடனே வைத்தியசாலைக்கு கொண்டு போயிருக்காங்க. அங்க வச்சி இறந்திட்டானாம். நண்பன் சொல்ல அதிர்ச்சியாகப் போய் விட்டது.

என்ன மச்சான் சொல்றே... என்றேன்.

ஆமாம், மச்சான் எனக்கும் அதிர்ச்சிதான் என்றான்.

என்னமோ தெரியவில்லை, இந்த இரண்டு வருடத்துக்குள் நம்மோடு படித்த பதினைந்து பேர் மட்டில் இறந்து விட்டனர். அப்படி இறக்கும் போது அவர்களின் வீட்டுக்கு சென்று அவர்களுடைய அவசர தேவைகளை கேட்டறிந்து நம்மோடு படித்த சிலர் ஒன்றிணைந்து அவைகளை இயன்றளவுக்கு செய்து வைப்பது வழமை. அதனால்தான் அவனும் எனக்கு அழைப்பினையெடுத்து விடயத்தை சொன்னான்.

சரி மச்சான் மற்றவங்களுக்கும் விடயத்தினை சொல்லிட்டு நாதனுடைய வீட்டுக்கு போவோம் என்றேன்.

சொன்னப்படி ஒன்றுகூடிய சிலருடன் நானும் நாதனின் வீட்டுக்கு சொன்றோம். இரவு என்பதால் அங்கு இருட்டாகவேயிருந்தது. சில குப்பி விளக்குகள் எரிந்துக் கொண்டிருந்தன. அவனது உடல் வைத்தியசாலையிலிருந்து வந்திருக்கவில்லை. அங்கிருந்தவரிடம் நண்பன் கேட்டான்.

என்ன மின் விளக்குகள் போடவில்லையா விளக்கை வைத்திருக்கிறீர்கள், இருட்டாக இருக்கிறது என்றான்.

அதனைக் கேட்டவர்,

அதையேன் தம்பி கேட்கிறீங்க. ரெண்டு நாளைக்கு முன்னாடி மின் கட்டணம் கட்டயில்லேனு மின்சாரத்தை துண்டிச்சிட்டுப் போயிட்டாங்க. நாதனும் எவ்வளவு ஓடியும் பணத்தை புரட்ட முடியல. அதுதான் இன்னும் மின்சாரம் வரல, அவருக்கு நெஞ்சு வாரதுக்கு கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிக் கூட இதைப்பற்றிதான் கதைச்சிட்டு இருந்தாரு பாவம் மனுசன் என்றார்.

அதனைக் கேட்க நமக்கு பாவமாகயிருந்தது.

நாதன் மரக்கறி சந்தையில் பாரம் தூக்கியாக வேலைப்பார்க்கிறான். நம்மோடு தரம் ஒன்பது வரை படித்து விட்டு பாடசாலை படிப்பினை வறுமை காரணமாக இடை நடுவில் முடித்துக் கொண்டான். இருந்தாலும், அவனுடன் படித்தவர்களை காண்டால் புன்னகித்தப்படி கதைத்துக் கொள்வான்.

அவன் திருமணம் முடித்தது அவனுக்கு எத்தனை குழந்தைகள் என்பதெல்லாம் தெரியாது. கானும்போது சுகம் விசாரித்துக் கொண்டு பொதுவாக கதைத்து விட்டு விடைப்பெற்றுக் கொள்வோம்.

நாதனுக்கு எத்தனை பிள்ளைகள் அவரிடமே கேட்க,

அவருக்கு மூன்று பெண் பிள்ளைகள் மூன்று பேரும் படிக்கிறாங்க. மூத்தவள், சாதாரணதரம் படிக்கிறாள். இரண்டாமவள், தரம் ஒன்பதும் மூன்றாமவள் தரம் ஏழும் படிக்கிறார்கள். தான் பாதியில் படிப்பை நிறுத்தியதால் தன்னுடைய பிள்ளைகள் படித்து ஒரு நிலைக்கு வரவேண்டும் என்பதே நாதனின் ஆசை. அதைப்பற்றியே எப்போதும் பேசிக் கொண்டிருப்பார்.

என்றவரின் விழிகளில் நீர்த் துளிகள் எட்டிப்பார்த்தன.

உடனே நாங்கள் பக்கத்து வீட்டில் கதைத்து மின்சாரத்தை இணைத்து நாதன் வீட்டு மின் விளக்குகளை ஒளிர வைத்தோம். அப்போது தேவையான விடயங்களை நம்மால் இயன்றவரைக்கும் செய்து முடித்தோம், நாதனின் உடலும் வந்தது. அவனுடைய இறுதிக்கிரியைகள் எல்லாம் முடிந்து விட்டன.

எங்களால் முடிந்தளவுக்கு பணத்தினை சேர்த்து அவர்களின் மின்சாரத்தை எடுத்து கொடுத்தோம். இன்னும் சிறு சிறு பிரச்சினைகளை முடித்து கொடுத்து விட்டு நம்மில் கொஞ்சம் வசதி உள்ளவர்கள் மூன்று பிள்ளைகளின் படிப்பு செலவினை பொறுப்பெடுத்தனர்.

சரி, நாங்கள் போகிறோம். உங்களுக்கு எங்களால் வேறு ஏதாவது உதவி செய்ய வேண்டியிருந்தால் சொல்லுங்கள், கட்டாயம் செய்து தருகிறோம் என்றான். நம்மோடு வந்திருந்தவன் அதனைக் கேட்க நாதனுடைய மூன்றாவது மகள் நமக்கருகில் ஓடிவந்து,

அங்கில்.. எனக்கு எங்க அப்பாவை திரும்பத்தர முடியுமா? என்றாள் கண்ணீருடன்... அதனைப்பார்க்க நமது கண்களும் கலங்கி விட்டன.

# கர்ப்பக் காலத்தில் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் உறுதியாக இருக்க...



ஒரு பெண் தாய்மை அடைவதிலுள்ள மகிழ்ச்சி ஈடிணையற்றது. முதல் மூன்று மாதங்கள், இரண்டாவது மூன்று மாதங்கள் மற்றும் மூன்றாவது மூன்று மாதங்கள் என கர்ப்பம் மூன்று நிலைகளைக் கொண்டுள்ளது. தாய் மற்றும் குழந்தையின் ஆரோக்கியத்திற்கு முதல் மற்றும் மூன்றாவது மூன்று மாதங்கள் மிகவும் முக்கியம் என்றாலும் கூட முழு ஒன்பது மாதங்களிலும் ஒரு பெண் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்.

உணவு, வாழ்க்கை முறை, உடற்பயிற்சி மற்றும் பிறவற்றை மிகவும் கவனமாகக் கருத்திற்கொள்ள வேண்டும். மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் ஆரோக்கியமாக இருக்கவேண்டும் மற்றும் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டும்.

கர்ப்பக் காலத்தில் ஆரோக்கியமாக இருப்பது எப்படி என்பதற்கான சில குறிப்புகள் இதோ:

★ கர்ப்பக் காலத்தில் நீங்கள் சாப்பிடும் உணவில் கவனமாக இருக்கவும். நீங்கள் எதைச் சாப்பிட்டாலும் அது உங்கள் குழந்தைக்கும் ஊட்டமளிக்கும் என்பதை மறக்கவேண்டாம். நார்ச்சத்து நிறைந்த காய்கறிகள் மற்றும் பழங்களை தவறாமல் உட்கொள்ள வேண்டும்.

★ இரும்புச்சத்து நிறைந்த உணவுகளை உண்ணுங்கள். அது உங்கள் இரும்புச்சத்தை பராமரிக்கவும் மற்றும் இரத்த சோகையைத் தவிர்க்கவும் உதவும். இரும்புச்சத்துடன் சேர்த்து விற்றமின் சி எடுத்துக்கொண்டால், உங்கள் உடல், அதிகளவிலான இரும்புச்சத்தை உறிஞ்சிக்கொள்ளும். பருப்பு, பழங்கள் மற்றும் இறைச்சியில் எலுமிச்சை போன்றவற்றை சேர்க்கலாம். ஒரு கிளாஸ் ஆரஞ்சு பழச்சாற்றை எலுமிச்சைப் பழத்துடன் சேர்த்தும் குடிக்கலாம், இது உங்கள் உடல் அதிக அளவிலான இரும்புச்சத்தை எடுத்துக்கொள்ள வழிவகுக்கும்.

★ வெள்ளரி, தக்காளி, சுரைக்காய், தர்பூசணி மற்றும் பாகற்காய் போன்ற நீர்ச்சத்து நிறைந்த காய்கறிகள் மற்றும் பழங்களை உங்கள் உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள்.

★ பச்சைக் காய்கறிகள், கீரைகள், பருப்பு வகைகள் மற்றும் தானியங்களில் காணப்படும் ஃபோலிக் ஆசிட்டை உட்கொள்வது கர்ப்பக காலம் முழுவதும் முக்கியமாகும்.

★ ஆரோக்கியமான ஸ்நாக்ஸ் சாப்பிடுவதும் முக்கியமே. பழங்கள், அப்ரிகாட்ஸ், பாதாம், புரோட்டீன் பார்கள் மற்றும் சிரியல் பார்கள் ஆகியவற்றை உட்கொள்ளலாம்.

★ கர்ப்பக் காலத்தில் மிகவும் கடினமான வேலைகளில் ஒன்று, படுக்கையில் வசதியாக படுத்துக்கொள்வது. உங்களை மிகவும் வசதியாக வைத்துக்கொள்ள கூடுதல் தலையணையுடன் இடது பக்கமாக படுத்துக்கொள்ள முயற்சிக்கவும். இது உங்கள் அனைத்து உறுப்புகளுக்கும் இரத்தோட்டத்தை மேம்படுத்தும் மற்றும் உங்கள் வயிற்றின் மீதான அழுத்தத்தையும் குறைக்கும்.

★ உங்கள் உடல் சுறுசுறுப்பாக இருக்க யோகா மற்றும் மிதமான உடற்பயிற்சி செய்யலாம். ஒவ்வொரு இரவும், இரவு உணவுக்குப் பிறகு, 15 முதல் 30 நிமிட நடைப்பயிற்சி மேற்கொள்ளுங்கள். இதன் விளைவாக, உடலின் இரத்தோட்டம் சீராகும்.

★ கர்ப்பக் காலத்தில் வேகவைக்கப்படாத இறைச்சி, பச்சை முட்டை, பப்பாளி ஆகியவற்றை தவிர்க்க வேண்டும். மாறாக, வேகவைத்த முட்டைகளை சாப்பிடலாம். இந்த இடத்தில் முட்டையின் மஞ்சள் கரு போதுமான அளவு வேகவைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

★ மன அழுத்தம், உங்கள் மன மற்றும் உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும். எனவே, பதற்றமான சூழ்நிலைகளை கையாள யோகா, மூச்சுப் பயிற்சிகள் செய்வது, ஸ்ட்ரெச்சிங் அல்லது ஒரு சிறிய வோர்க் செய்யும் பழக்கத்தை வளர்க்கவும்.



★ டீ அல்லது கோப்பி அதிகம் உட்கொள்வதை தவிர்க்கவும். கோப்பியிலுள்ள காஃபின், ஒருவரின் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும். மாறாக லெமன் டீ, ஹெர்பல் டீ அல்லது காஃபின் இல்லாத பானங்களை குடிப்பது நல்லது.

காரிகைக் களம்

# சரும பொலிவிற்கு...



பொலிவாகவும் உங்கள் சருமம் ஆரோக்கியமாகவும் இருக்க சருமத்தை இயற்கை வழியில் பாதுகாப்பது நல்லது. செயற்கை கிரீம் தடவுவதற்கு பதிலாக, இயற்கையான முறையில் வீட்டில் தயாரிக்கும் ஃபேஸ் மாஸ்க்குகளை பயன்படுத்தும்போது பக்கவிளைவுகள் அற்ற சிறந்த பயன்களைப் பெறலாம். பளபளப்பான மற்றும் ஆரோக்கியமான சருமத்திற்கு நீங்கள் பயன்படுத்தக்கூடிய காய்கறிகள் பல உள்ளன. இந்த வீட்டு வைத்தியம் மெதுவாக இருந்தாலும், அவை நிச்சயமாக பயனுள்ளதாக இருக்கும். உங்கள் சருமத்திற்கு ஏற்ற இயற்கை வழிகளை நீங்கள் தெரிவு செய்வது மிகவும் முக்கியம். எனவே, உங்கள் முகத்தில் பயன்படுத்தக்கூடிய சில காய்கறிகள் பற்றி சில குறிப்புகள்...



**தக்காளி :**

தக்காளியில் அதிகளவு விற்றமின் சி உள்ளது மற்றும் சிறிது அமிலத்தன்மை கொண்டது. இது சருமத்தின் நிறத்தை ஒளிரச் செய்ய உதவுகிறது. மேலும், காலப்போக்கில் கரும்புள்ளிகளை இல்லாமல் செய்ய உதவுகிறது. தக்காளி ஃபேஸ் பேக் உங்கள் சருமத்தை பொலிவாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவும்.



**எலுமிச்சை:**

எலுமிச்சைச்சாறு வலிமையான இயற்கையான ப்ளீச்சிங்கில் ஒன்றாகும். எலுமிச்சை பழச்சாற்றை நேரடியாக உங்கள் முகத்தில் தடவவும் அல்லது தேனுடன் கலந்து தடவலாம். பாதியாக வெட்டப்பட்ட எலுமிச்சையில் சில துளிகள் தேனை ஊற்றி, அதை உங்கள் முகத்தில் தேய்ப்பது மிகவும் பயனுள்ள வழியாகும்.

**வெள்ளரிக்காய்:**

முகத்தில் வடியும் எண்ணெய் பிசுபிசுப்பை நீக்கி, உங்கள் சருமத்தை பளபளப்பாக வைத்துக்கொள்ள வெள்ளரிக்காய் உதவுகிறது. சருமத் துளைகள் சுவாசம் பெற்று புத்துணர்வுடன் இருக்க உதவுகிறது. உண்மையில் உணர்திறன் வாய்ந்த சருமம் உள்ளவர்களுக்கு வெள்ளரிக்காய் மிகவும் பயனுள்ள குளிர்விக்கும் முகவர். கூடுதலாக, வெள்ளரிகள் இயற்கையான டோனர்கள் மற்றும் துளைகளின் அளவைக் குறைக்கின்றன. உங்களுக்கு கண் இமைகள் வீங்கியிருந்தால், கண்களின் மேல் வைக்கப்படும் சில வெள்ளரித் துண்டுகள் மந்திரம்போல் வேலை செய்யும். சூரிய ஒளியால் ஏற்படும் கருமையை நீக்கி முகத்தின் நிறத்தை சீராக்குகிறது. சருமத்தில் ஏற்படும் தோல் அலர்ஜி போன்றவற்றை போக்கி தெளிவாக்குகிறது.



**உருளைக்கிழங்கு :**

உருளைக்கிழங்கு வீட்டில் இருக்கும்போது அழகு பராமரிப்பு பொருட்களுக்காக நீங்கள் வெளியில் செல்லத் தேவையில்லை. இதை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்று நீங்கள் தெரிந்துகொள்வது அவசியம். உருளைக்கிழங்கில் தாதுக்கள் மற்றும் விற்றமின்கள் உள்ளன. இதை முகத்தில் தடவினால், அனைத்து கரும்புள்ளிகளும் அகன்றுவிடும். கதிரியக்க தோலைப் பெறுவதற்கு உருளைக்கிழங்கு ஒரு சிறந்த காய்கறியாகும்.



**பீட்ரூட் :**

உடலின் ஆரோக்கியத்துக்கு எவ்வாறு பருவகால உணவுகள் முக்கியமானதாக இருக்கிறதோ, அதேபோல் சரும பளபளப்பிற்கும் காரணமாக அமைகிறது. எடுத்துக்காட்டாக குளிர்காலத்தில் பீட்ரூட் மற்றும் கேரட் சாறு போன்ற உணவுகளை நெல்லிக்காய் மற்றும் இஞ்சியுடன் சேர்த்து சாப்பிட வேண்டும். மேலும் வேர்க்கடலை மற்றும் குளிர்காலத்திற்கேற்ற கீரைகளை உட்கொள்வதும் பொலிவான சருமத்தைப் பெற உதவும். பீட்ரூட்டை முகத்தில் தொடர்ந்து தடவி வந்தால், சருமத்தில் மிகவும் இயற்கையான இளஞ்சிவப்பு ஃப்ளஷ் ஏற்படும்.



**கேரட்:**

கேரட்டில் விற்றமின் ஏ அதிகம் இருப்பதால், அவை முகப்பருவிற்கு மருந்தாகப் பயன்படும். பளபளப்பான சருமத்திற்கு இந்த ஆரோக்கியமான காய்கறியை சாப்பிட வேண்டும். தேவையான கேரட்டை எடுத்து அதனை வேகவைத்து பின்னர் மசித்து முகத்திற்கு தடவ வேண்டும். காய்ந்த பிறகு முகத்திலிருந்து உரித்தெடுத்து பிறகு வெதுவெதுப்பான நீரில் ஒத்தடம் கொடுக்க வேண்டும். ஒரு பருத்தித்துணியில் நீரை தொட்டு சிறிது நேரம் ஒத்தடம் கொடுத்தால் முகத்தில் உள்ள தூசு மட்டும் இறந்த செல்கள் போய்விடும். வாரம் இரண்டு நாட்களுக்கு இப்படி செய்து வந்தால் முகம் பொலிவு பெறுவதை நீங்களே காணலாம்.



**பூண்டு :**

பூண்டு மிகவும் கடுமையானதாக இருக்கலாம். ஆனால், கரும்புள்ளிகளை மறைக்கும் அதன் திறன் கிட்டத்தட்ட அதிசயமானது. மேலும், பூண்டு புற ஊதா கதிர்களிலிருந்து சருமத்தைப் பாதுகாக்கிறது. தெளிவான சருமத்தை உங்களுக்கு வழங்குவதற்கு பூண்டு சிறந்த வீட்டு வைத்தியம்.

இந்த காய்கறிகள் உங்கள் சரும பராமரிப்பிற்கு ஏற்றதா என்பதை உங்கள் மருத்துவரிடம் ஆலோசனை செய்துகொள்ளுங்கள்.



## பயனுள்ள குறிப்புகள்

▶ வெள்ளி சாமான்களை பீரோவில் வைக்கும்போது அதற்குள் கற்பூரத்தைப் போட்டு வைப்பது மிகவும் நல்லது.

▶ பொருட்களை கறையான் அரிக்காமல் இருக்க கற்பூரத்தைப் பொடிசெய்து தூவி பாதுகாத்துக்கொள்ளவும்.

▶ சிறிது சர்க்கரை கலந்த நீரில் கீரையை ஊறவைத்த பின் சமையல் செய்து சாப்பிட்டால் கீரை தனி ருசி தரும்.

▶ இஞ்சியை ஈரத்துணியில் சுற்றி தண்ணீர்க் குடத்தின்மேல் வைத்திருந்தால் பத்துநாள்வரை புதிதாகவே இருக்கும்.

▶ காய்ந்த எலுமிச்சை, ஆரஞ்சுத் தோல்களை அலுமாரியில் வைத்தால் பூச்சிகள் அண்டாது.

▶ நாய்க்கடிக்கு சுண்டைக்காய் இலையையும் உப்பையும் அரைத்து கடிவாயில் பூசவும்.

▶ வடாமுடன் சிறிது கறிவேப்பிலையை அரைத்து கலந்து செய்தால் வடாம் தனி ருசியுடன் மணமாக இருக்கும்.

▶ பாத்திரத்தின் அடியில் பால் ஒட்டிக்கொள்ளாமல் இருக்க பாத்திரத்தை முதலில் குளிர்ந்த நீரால் நன்கு கழுவ வேண்டும்.

▶ பிரெட்டை நெய்யில் வறுத்து சூப்பின் மேல் தூவினால் சூப்பின் சுவையை அதிகரிக்கலாம்.

▶ பழங்களை மூங்கில் கூடைகளில் சேமித்து வைத்தால் ஈரப்பதம் குறைந்து கெடாமல் பாதுகாக்க உதவும்.

▶ பிளாஸ்ரிக் கூடைகள் சுற்றுச்சூழலை பாதிக்கச் செய்யும். மூங்கில் கூடைகளை இதற்குப் பதிலாக பயன்படுத்தலாம்.

▶ பிக்னிக் கூடையாக பயன்படுத்த மூங்கில் கூடை பயன்படுகிறது.

▶ மூங்கில் மரச்சாமான்கள் வீட்டிற்கு அழகை ஊட்டுவது மட்டுமல்லாமல் இயற்கை லுக்கை தருகிறது.

# வெண்டைக்காய் பக்கோடா



**தேவையான பொருட்கள்**

வெண்டைக்காய் - ஒரு கிலோ
பச்சை மிளகாய் - 5
பூண்டு - 5 பல்
உப்பு - தேவைக்கு
மிளகாயத் தூள் - 1 டீஸ்பூன்
மல்லி தூள் - 1 டீஸ்பூன்
மஞ்சள் தூள் - 1 டீஸ்பூன்
கரம் மசாலா - 1 டீஸ்பூன்
சீரகத் தூள் - 1 டீஸ்பூன்
கடலை மாவு - 2 டேபிள் ஸ்பூன்
அரிசி மாவு - 2 டேபிள் ஸ்பூன்
மைதா மாவு - 1 டேபிள் ஸ்பூன்
சோள மாவு - 1 டேபிள் ஸ்பூன்
முந்திரி பருப்பு - 10
கறிவேப்பிலை - சிறிதளவு
எண்ணெய் - பொரிக்க தேவையான அளவு

**செய்முறை:**

வெண்டைக்காயை சுத்தமாக கழுவி, நீர் துடைத்து விட்டு, சற்று பெரிய துண்டுகளாக வெட்டி தனியே வைக்கவும். முந்திரி பருப்பை அரை மணிநேரம் நீரில் ஊறவைக்கவும்.

அகலமான பாத்திரத்தில் உப்பு, மிளகாய்த் தூள், மஞ்சள் தூள், கரம் மசாலா தூள், மல்லி தூள், சீரகத் தூள் சேர்த்து சில துளிகள் நீர் தெளித்து கலந்துகொள்ளவும்.

இதில், இரண்டாக கீறிய பச்சை மிளகாய், நீரை வடித்துவிட்டு முந்திரி, ஒன்றிரண்டாகத் தட்டிய பூண்டு, கறிவேப்பிலை சேர்த்து கலந்த பின், கடலை மாவு, அரிசி மாவு, சோள மாவு, மைதா மாவு சேர்த்து பக்கோடாவிற்கு பிசைவதுபோல் பிசையவும்.

எதையும் நொறுக்கி விடாமல், மசாலா சீராக கலக்கும் விதமாக மென்மையாக பிசையவும்.

அதன்பின், நறுக்கிய வெண்டைக்காய் சேர்த்து பிரட்டி, சில நிமிடங்கள் வைத்து, எண்ணெய் காய்ந்ததும், பிரட்டி வைத்த வெண்டைக்காயை போட்டு மிதமான சூட்டில் பொன்னிறமாக பொரித்தெடுக்கவும்.

நன்கு ஆறிய பின் கண்ணாடி போத்தலில் போட்டு வைத்தால், மொறுமொறுவென்று இருக்கும்.

இப்போது சூப்பரான வெண்டைக்காய் பக்கோடா ரெடி.



# நடிப்பில் மகான் அப்பா – துருவ்

ஆட்டம் காட்டும் அந்நியன், அரவணைக்கும் அம்பி, அசத்தும் ரெமோ என கெரக்டர்களாகவே மாறி, என்ன நடிப்புய்யா சும்மா பட்டைய கிளப்புறாருய்யா என ரசிகர்களை ஆரவாரமாக ஆட்டம் போட வைக்கும் விக்ரம் உடன் 'மகான்' படத்தில் நடித்த அவரது மகன் துருவ் விக்ரம் மனம் திறக்கிறார்....

**'மகான்' படம் பற்றி**

'மகான்' படத்தில் அப்பா விக்ரம் காந்தி 'மகான்' என்ற கெரக்டரில் வருகிறார். அது சிறுவயதுமுதல் 65 வயதுவரை போகும். அவர் சந்திக்கும் பிரச்சினைகள் என்ன என்பது கதை. அப்பாதான் ஹீரோ. நான் அவருக்கு மகனாக சின்ன கெரக்டரில் நடிச்சிருக்கேன். படத்தில் உளவியல் ரீதியாக சிறிது சிரமப்பட்டு நடித்தேன்.

**அப்பாவிடம் கற்றது என்ன**

'ஆதித்யா வர்மா' படத்திற்கு பின் அப்பா உடன் நடிக்கிறேன். இந்த அனுபவத்தை மறக்க மாட்டேன். தினமும் செட்டில் அவரிடம் ஏதாவது கற்றுக்கொண்டேதான் இருந்தேன். அவ்வளவு எனர்ஜியா இருக்காரு. எப்படி அடுத்தடுத்து நடிக்கிறார்னு பார்த்தேன். இரண்டு கெரக்டரும் வித்தியாசமா இருக்கும்

**வெளிநாட்டில் படிக்க போனீங்க... மீண்டும் நடிப்பில்...**

படிச்சு முடிச்சுட்டேன். இப்போது முழுநேரம் சினிமாவில்தான் கவனம் செலுத்துறேன். மியூசிக் வீடியோ ஆல்பம் பண்ணனும்னு ஆசை இருக்கு. விரைவில் அதுவும் நடக்கும்

**இயக்குநர் கார்த்திக் சுப்பராஜிடம் வேலை பார்த்தது**

10 ஆவது படிக்கும்போது அவரின் படங்களை பார்க்க ஆரம்பித்தேன். நான், அம்மா எல்லாம் அவரோட பீட்சா நைட் ஷோ பார்த்தோம். இரண்டாவது படமே அவர் இயக்கத்தில் நடித்தது சந்தோஷம்.

**துப்பாக்கி எல்லாம் பிடிச்சு பயங்கரமாக சண்டை...**

அப்பாவின் பீமா, சாமி படங்கள் பார்த்து ஒரு நாள் துப்பாக்கி பிடிக்கணும்னு ஆசைப்பட்டேன். அந்த ஆசை 'மகான்'' படம் மூலமா நிறைவேறியது. இந்த படத்தில் அப்பாவுக்காக ரப் வொய்ஸ் டப்பிங் பேசியிருக்கேன்.

**இரண்டு பேரும் அண்ணன், தம்பி மாதிரி இருக்கீங்க**

நிறைய பேரு அப்படிதான் சொல்றாங்க... பசித்தாலும் சாப்பிடாமல் உடம்பை மெயின்டெய்ன் பண்ணுவார். நீங்கள் ரொம்ப கடுமையாக உழைச்சிட்டிங்க போதும்ப்பானு சொல்லி இருக்கேன். அப்பா 60 படங்களில் நடித்துள்ளார். ஆனால், மகான்னில் 60 படங்களில் நடித்த அனுபவம் எனக்கு கிடைத்தது.

**அப்பாவிடமிருந்து பின்பற்ற வேண்டிய விஷயங்கள்**

அப்பா செட்டுக்குள்ள வரும் போதே போன் வச்சுட்டு, எல்லா விஷயத்தையும் மறந்துட்டு அந்த கெரக்டராக மாறி விடுவார். அவர் நடிப்பில் ஒரு மகான் நான் கொஞ்சம் சோம்பேறி, அவர்கிட்ட இருந்து கடின உழைப்பை நான் பின்பற்ற வேண்டும்.



# இணையத்தில் வைரலாகும் நடிகைகளின் கவர்ச்சி படங்கள்

இந்திய சினிமாவின் முன்னணி நடிகைகள் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருக்கும் கவர்ச்சி புகைப்படங்கள் வைரலாகி வருகிறது.

தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் பல படங்கள் நடித்து முன்னணி நடிகையாக வலம் வருபவர் ராய் லட்சுமி. இவர் நடித்த காஞ்சனா, மங்காத்தா போன்ற படங்கள் ரசிகர்களின் வரவேற்பை பெற்றன. 2021ஆம் ஆண்டு தமிழில் ராய் லட்சுமி நடிப்பில் 'சிண்ட்ரில்லா' படம் வெளியானது. தற்போது 'கேங்ஸ்டர் 21' என்ற படத்தில் நடித்து வருகிறார்.

2019ஆம் ஆண்டு 'ஒரு அடார் லவ்' திரைப்படத்தின் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர் நடிகை பிரியா வாரியர். இவர் தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் படங்கள் நடித்து வருகிறார். 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' படத்தின் மூலம் அனைவராலும் தெரியப்பட்டவர் நடிகை ஷாலு ஷம்மு. அதன்பின் 'தமிழுக்கு எண் ஒன்றை அழுத்தவும்', 'இரண்டாம் குத்து' போன்ற பல படங்களில் நடித்து பிரபலம் அடைந்தார்.

'உட்தா பஞ்சாப்', 'டியர் ஜிந்தகி', 'கல்லி பாய்' போன்ற பல பொலிவூட் படங்களில் நடித்து பிரபலமடைந்த நடிகை ஆலியா பட். இவர் தற்போது 'கங்குபாய் கத்யாவாடி', 'ஆர்ஆர்ஆர்' போன்ற படங்களில் நடித்திருக்கிறார். சஞ்சய் லீலா பன்சாலி இயக்கியுள்ள 'கங்குபாய் கத்யாவாடி' படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த புகைப்படங்கள் சமூக வலைத்தளத்தில் வைரலாக பரவி வருகிறது.







# இது போன்ற எக்ஷன் காட்சிகளை எந்த படத்திலும் பார்த்திருக்க முடியாது – ஹியூமா குரேஷி

"ஒவ்வொரு முறையும் நாங்கள் எக்ஷன் காட்சிகளை படமாக்கும்போது நான் மிகவும் ஆர்வமாக இருந்தேன். அந்தக் காட்சிகளை படத்தில் பார்த்தபோதுதான் வினோத்தின் விசாலமான பார்வை எனக்கு புரிந்தது. இதுபோன்ற எக்ஷன் காட்சிகளை எந்த படத்திலும் பார்த்திருக்க முடியாது" என்று நடிகை ஹியூமா குரேஷி தெரிவித்துள்ளார்.

அஜித் நடிப்பில் ஹெச்.வினோத் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் 'வலிமை'. போனி கபூர் தயாரித்துள்ள இப்படத்தில் ஹியூமா குரேஷி, கார்த்திகேயா உள்ளிட்டோர் நடித்துள்ளனர். பொங்கலுக்குத் திரையரங்குகளில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்ட இப்படம் கொரோனா பரவலால் ஒத்திவைக்கப்பட்டு தற்போது பெப்ரவரி 24 அன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இப்படத்தை விளம்பரப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், இப்படத்தில் நடித்த அனுபவம் குறித்து நடிகை ஹியூமா குரேஷி கூறியுள்ளதாவது:

ஹெச்.வினோத் என்னிடம் 'வலிமை' கதையை கூறிய போது எனக்கு அது மிகவும் சுவாரஸ்யமாக தோன்றியது. கூடவே அஜித் சாருடன் நடிக்க நான் எப்போதும் விரும்பினேன். 'பில்லா 2' படத்தில் நாங்கள் இணைந்து நடித்திருக்க வேண்டியது. ஆனால், அது நடக்கவில்லை. எனவே, இந்த முறை அது நடந்ததில் எனக்கு மகிழ்ச்சி.

இதற்கு முன் நான் பொலிஸாக நடித்ததில்லை. இது எனக்கு ஒரு மிகப்பெரிய வாய்ப்பாக கருதுகிறேன். காரணம் பொதுவாக பெண்களுக்கு இது போன்ற பாத்திரங்கள் கிடைப்பதில்லை. படத்தில் அஜித்துக்கும் எனக்குமான உறவே சுவாரஸ்யமான ஒன்று. வழக்கமாக திரைப்படங்களில் நாயகனும் நாயகியும் இருந்தால் அவர்கள் இருவரும் காதலிப்பதாகவே காட்சிப்படுத்தப்படும். ஆனால், இந்த படத்தில் வினோத் அதை மாற்ற முயற்சித்திருக்கிறார். பார்வையாளர்களுக்கு இது மிகவும் புதிதாக இருக்கும். 'வலிமை' போன்ற ஒரு வெகுஜன கொமர்ஷியல் திரைப்படங்களில் இது போன்ற விஷயங்கள் இடம்பெறுவது நல்ல அறிகுறி.

பெண்களால் எக்ஷன் காட்சிகளில் நடிக்க முடியாது அல்லது அதை அவர்கள் விரும்புவதில்லை என்பது ஒரு க்ளிஷே ஆகிவிட்டது. ஆண்களைப்போலவே பெண்களாலும் எக்ஷன் காட்சிகளில் நடிக்க முடியும். ஒவ்வொரு முறையும் நாங்கள் எக்ஷன் காட்சிகளை படமாக்கும்போது நான் மிகவும் ஆர்வமாக இருந்தேன். அந்த காட்சிகளை படத்தில் பார்த்தபோதுதான் வினோத்தின் விசாலமான பார்வை எனக்கு புரிந்தது. இது போன்ற எக்ஷன் காட்சிகளை எந்த படத்திலும் பார்த்திருக்க முடியாது.

இவ்வாறு ஹியூமா குரேஷி கூறியுள்ளார்.







# பிரபுதேவா நடிக்கும் 'முசாசி'

அறிமுக இயக்குநர் ஷாம் ரோட்ரிக்ஸ் இயக்கத்தில் உருவாகும் படம் 'முசாசி'. ஆக்சன் எண்டர்டெய்னர் படமாக உருவாகும் இதில் பிரபுதேவா நாயகனாக நடிக்கிறார். இப்படத்தில் கதாநாயகி யாரும் கிடையாது. பிரபுதேவாவுடன் ஜோன் விஜய், விடிவி கணேஷ், ஜோர்ஜ் மரியான், மலையாள நடிகர் பினு பப்பு, அருள்தாஸ், 'மாஸ்டர்' மகேந்திரன், தங்கதுரை, மகேஷ், உள்ளிட்ட பலர் நடிக்கிறார்கள். விக்னேஷ் ஒளிப்பதிவு செய்யும் இப்படத்துக்கு எஸ்.என்.பிரசாத் இசையமைக்கிறார். இந்த படத்தை ஜோய் ஃபிலிம் பாக்ஸ் எண்டர்டெய்ன்மெண்ட் சார்பில் ஜோன் பிரிட்டோ பொருட்செலவில் தயாரிக்கிறார்.

இந்நிலையில், இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. இதனை இயக்குநர் லோகேஷ் கனகராஜ் தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

இப்படம் தவிர்த்து 'பகீரா', 'யங் மங் சங்', 'மை டியர் பூதம்', 'பொய்க்கால் குதிரை' உள்ளிட்ட படங்கள் பிரபுதேவா நடிப்பில் வரிசை கட்டி நிற்கின்றன. இதில் 'பகீரா' மற்றும் 'மை டியர் பூதம்' ஆகிய படங்களின் ட்ரெய்லர் வெளியாகி வரவேற்பை பெற்றுள்ளன.





# சிபிராஜின் 20ஆவது படம் அறிவிப்பு

ஸ்டூடன்ட் நம்பர் ஒன் படத்தின் மூலம் 2003ஆம் ஆண்டு அறிமுகமான சிபிராஜ், திரைப் பயணத்தில் தனது 20ஆவது ஆண்டை நெருங்குகிறார். இந்த நிலையில் அவரது 20ஆவது படம் பற்றிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த திரைப் பயணத்தில் ஜோர், மண்ணின் மைந்தன், வெற்றிவேல் சக்திவேல், கோவை பிரதர்ஸ், லீ, நாய்கள் ஜாக்கிரதை, நாணயம், ஜாக்சன் துரை, சத்யா, கட்டப்பாவ காணோம், கபடதாரி, வால்டர் படங்கள் முக்கியமானவை. தற்போது மாயோன், ரேன்ஞர், வட்டம் படங்களில் நடித்து வருகிறார்.

சிபிராஜின் 20ஆவது படத்தை பிக் பிரிண்ட் பிக்சர்ஸ் சார்பில் கார்த்திகேயன் தயாரிக்க, அறிமுக இயக்குநர் பாண்டியன் ஆதிமூலம் இயக்குகிறார். பிரவீன் குமார் ஒளிப்பதிவு செய்கிறார், ஹர்ஷவர்த்தன் இசை அமைக்கிறார். மற்ற நடிகர் நடிகைகள் தெரிவு நடந்து வருகிறது.

படம் பற்றி இயக்குநர் பாண்டியன் ஆதிமூலம் கூறியதாவது : மொழி எல்லைகளைக் கடந்து உலகளாவிய ரசிகர்களை ஈர்க்கும் வகையிலான கதைக்கருவுடன் இப்படம் உருவாகிறது. இத்திரைப்படம் முதல் பாதியில் குடும்ப உணர்வுகளை பேசும்படியும், அதைத் தொடர்ந்து இரண்டாவது பாதியில் கதாநாயகனுக்கும் எதிரிக்கும் இடையே ஆடு புலி ஆட்டமாக பரபரப்பான ஆக்சன் அதிரடி திரில்லர் கதையாக அமைக்கப்பட்டுள்ளது - என்றார்.



# இசையமைப்பாளராக அறிமுகமாகும் வித்யாசகரின் மகன்

சிபிராஜ் படத்தில் இசையமைப்பாளராக அறிமுகமாகும் வித்யாசகரின் மகன்.

சிபிராஜ் பாண்டியன் ஆதிமூலம் இயக்கும் புதிய படத்தில் நடிக்கவிருக்கிறார். இப்படம் சிபிராஜின் 20ஆவது படமாக உருவாகிறது. இந்த படத்தில் பிரபல இசையமைப்பாளர் வித்யாசாகரின் மகன் ஹர்ஷவர்தன் இசையமைப்பாளராக அறிமுகமாகியுள்ளார். இந்த தகவலை தனது சமூக வலைத்தளத்தில் சிபிராஜ் தெரிவித்துள்ள நிலையில் அவருக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன. இந்த படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7